செப்டெம்பர் 2025

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

304



விலை
ரூபா 100/=

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

304

ஒளி : 26 சுடர் : 04

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்



ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info



சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- ஜின்னாஹ் 17
- கலாபூஷணம் தம்பிலுவில் ஜெகா 20
- கரிகாலன் 22
- பிரமி ருத்ரா 27
- சாரா ஜி பாடெல் / அன்னலட்சுமி இராஜதுரை 31
- கவிஞர் அகளங்கன் 33
- பாஞ்சாலன் 39


### கட்டுரைகள்


- பேராசிரியர் சபா ஜெயராசா 02
- கலாநிதி செல்லத்துரை சுதர்சன் 09
- மு.ல. லத்பான் றோஸின் 18
- முஹம்மது ஜைத் 34


### சிறுகதைகள்


- எரிக்கா கேபயாஸி/சு. முரளிதரன் 06
- யே. கிறித்துறாஜா 13
- ஷெல்லிதாசன் 23
- முனைவர் புதுவை மனுநீதி 32


### நூல் விமர்சனம்


- கலாபூஷணம் மொழிவரதன் 16
- கே.எஸ்.சுதாகர் 29


### பத்தி


- பேராசிரியர் துரை. மனோகரன் 37
- சு. நவநீதகிருஷ்ணன் 40


பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !


- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...




## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

### மீண்டும் அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே..!!

சில வருடங்களுக்கு முன்னர், **ஆண்டாள்** பற்றிய சர்ச்சையில் **கவிஞர் வைரமுத்து** சிக்கிச் சிரமப்பட்டதைத் தமிழ் உலகம் இன்னமும் மறந்துவிடவில்லை. ஆழ்வார் – ஆண்டாள் பற்றிய பல உயரிய கருத்துகளை உள்ளடக்கிய தமது கட்டுரையில் ஆங்காங்கு உள்ளடக்கிய சில வரிகள், பலரைச் சீண்டிவிட, வைரமுத்துவிற்கு எதிராக கண்டனங்கள் முன்வைக்கப்பட்டதும், வழக்குகள் தொடரப்பட்டதும், பொதுவெளியில் வைரமுத்து பல விளக்கங்களை முன்வைத்ததுமாக அந்தச் சர்ச்சை நீண்டு ஓய்ந்தது.

**இராமாயணம்** சார்ந்து **மீண்டும்** ஒரு பெரிய சர்ச்சைச் சுழலில் வைரமுத்து தற்போது தன்னை பேசுபொருளாக்கியுள்ளார். வாலியை வதம் செய்தது குற்றம் எனவும், குற்றம் செய்த இராமன் குற்றவாளி எனவும், வாலியை வதம் செய்தபோது **இராமன், புத்தி சுவாதீனம் இழந்த நிலையில் இருந்தான் எனவும்**, புத்தி சுவாதீனம் இழந்த நிலையில் ஒருவன் செய்யும் குற்றமானது குற்றம் ஆகாது எனவும், அதனடிப்படையில் தற்போதைய இந்தியச் சட்டத்தின்படி இராமன் குற்றத்திலிருந்து (தம்மால்) முற்றிலும் விடுவிக்கப்பட்டான் எனவும் 'தமது' தருக்க அறிவை பொதுவெளியில் வைரமுத்து வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளார். சென்னைக் கம்பன் கழகத்தின் பொன்விழா நிறைவு நிகழ்விலேயே இக்கருத்துகளை வைரமுத்து முன்வைத்துள்ளார். இவ்விழாவில், ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் **கம்பர் விருதானது கவிஞர் வைரமுத்துவுக்கு வழங்கப்பட்டது** என்பதும் குறிப்பிடத்தக்கது.

**காலம் கடந்து நிற்கும்** இதிகாசங்கள், புராணங்கள், காவியங்கள், தத்துவங்கள், கொள்கைகள், மரபுசார் நம்பிக்கைகள், சமயநெறிகள், பண்பாடு போன்ற பல விடயங்களில் **அவற்றுள் ஆழ்ந்து பாவியிருக்கும் நோக்கங்களை உணராது** தான்தோன்றித்தனமாக முரணான கருத்துகளை முன்வைக்கும் ஒரு நோய், சமகாலத்தில் பரவிவருகிறது. **வெகுஜன பிரபல்யம் கொண்டவர்கள்** இத்தகு சர்ச்சைக்குரிய கருத்துகளை முன்வைக்கும்போது அவை ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கங்கள் பன்மடங்காகின்றன.

உதாரணமாக, காவியத்தின் ஒரு படலத்தை மாத்திரம் படித்துவிட்டு, அல்லது காவியம் சார்ந்து பிறர் எழுதிய கட்டுரைகளைப் பார்த்துவிட்டு, அல்லது நூலின் பதிப்புரையை – முன்னுரையை மாத்திரம் மேய்ந்துவிட்டு, மாற்றுக் கருத்தொன்றை முன்வைப்பதை மேதாவித்தனமாகக் கருது கின்றனர். மூலங்களை உள்வாங்காமலும், முறையான ஆய்வுகள் மேற்கொள்ளாமலும், தருக்கப் பின்புலம் இல்லாமலும், மேடைக் கைதட்டல்களுக்காகவும், சலசலப்பிற்காகவும் எழுந்தமானதாக முரணான கருத்துகளை முன்வைக்கின்றனர். இவை சமூக வலைத்தளங்களில் ஊதிப் பெருப்பிக்கப் பட்டு சமூகத்தில் பெரும் குழப்ப நிலைகளை உருவாக்கிவிடுகின்றன.

இச்செயற்பாடுகள், கண்டிக்கப்படல் வேண்டும்; தவிர்க்கப்படல் வேண்டும்.

"அறம் வெல்லும் பாவம் தோற்கும்."



பேராசிரியர்
சபா ஜெயராசா

# சமகால உலக இசைக்கலையும் தமிழ்ச்சூழலும்

உலகின் பல்வேறு வடிவங்களையும் எழுநடைகளையும் மரபுவழி இசைக் கோலங்களுடன் இணைவியமாக்கல் சமகால உலக இசையின் முனைப்பாக எழுகோலம் பெறுகிறது. நாட்டார் இசை, செவ்வியல் இசை என்ற வேறுபாடு தகர்ப்புக்கு உள்ளாக்கப்படுகிறது. இனச்சால்பிய இசை, ஒடுக்கப்பட்டோர் இசை, கருமை இசை, முதலாம் வகைகள் மேலெழத் தொடங்கியுள்ளன.

சமகால மேலைப்புல இசையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுவழியான ஒரு செயற்பாடாக, **தொடரியம்** (Serialism) மேலெழுந்துள்ளது. "தொடரியம்" என்பது, ***வரிசை இசை*** என்றும் குறிப்பிடப்படும். அதன் சிறப்பு என்னவென்றால், இசையின் அனைத்துக் கூறுகளையும் ஒரு குறிப்பிட்ட வரிசையில் அல்லது தொடரில் அமைத்தலாகும். அதாவது இசையின் பல்வேறு உறு கூறுகளாகிய ***தொனி*** (Pitch), ***ஒலி அளவு இயக்கம்*** (Dynamics), ***ஒலித்தன்மை*** (Timbre) ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட வரிசையில் அமைத்தலாகும். அவ்வாறான தொடர் இசை அழகை வருவிக்கும்.

மனித உள்ளத்தை நேர் உலகுடன் இணைக்கும் வாழ்க்கை மெய்யியல் இன்பத்தை அது வழங்குவதாகச் சொல்லப்படுகிறது. முழுநிறைவுப் பொருண்மை அதனால் உருவாக்கப்படுகிறது.

தமிழிசைகளாகிய கருநாடக இசை, பண்ணிசை ஆகியவை இறை மெய்யியல் சுகத்துடன் இணைக்கப்பட்டவை. ஆனால் மேலைப்புலத் தொடரியம், மனித உள்ளத்தை நேர்நிலை உலகுடன் இணைக்கும் உலக நோக்குடன் இணைந்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்று வரும் கலைக்கோட்பாடுகள், மேலை உலக இசைச் செயற்பாட்டிலும் நீடித்த செல்வாக்கை விளைவித்துவருகின்றன.

***சிற்றியல்*** (Minimalism) என்பது இசை உள்ளடங்கிய அனைத்துக் கலைவடிவங்களிலும் செல்வாக்குச் செலுத்தும் கலைக்கருத்தியல். எளிமை, சிக்கனம், வரையறுக்கப்பட்ட இசைக் கோலங்கள் ஆகியவற்றுடன், குறைந்தளவு இசைக்கருவிகளை இணைத்து ஆற்றுகைக்கு உட்படுத்துதல் சிற்றியல் இசையில் மேற்கொள்ளப்படுகிறது.

சிற்றியல் இசைப்பண்புகள் தமிழர் நாட்டார் இசையில் நெடுங்காலமாக இடம்பெற்று வந்தது. வர்க்க முரண்பாடுகள் வளர்ச்சிபெற்ற சமூகங்களில் அடிமட்ட மக்களின் இசை, ஆடம்பரம் அற்ற சிற்றியல் பண்புடையதாகவே அமைந்தது.

**இலமொருந்தேயங்** என்பவர் குறைந்தளவு நுட்பங்களுடன் கூர்மைபெற்ற சிற்றியல் இசையைக் கட்டமைப்புச் செய்தார். இசைச் சுரங்களின் எண்ணிக்கையையும் குறைந்த அளவில் பயன்படுத்தினார். எளிமையானதும், கவர்ச்சிமிக்கதுமான அந்த இசை, அமெரிக்காவில் பெருவரவேற்பைப் பெற்றது.

குறைந்தளவு சுரங்களுடன் கவர்ச்சியான இராகங்களை அல்லது பண்களை உருவாக்கும் செயற்பாடு தமிழர் இசைவளர்ச்சியிலும் இடம்பெற்று வருகிறது. ஏழு சுரங்களையும் கொண்ட இராகங்கள் ***முழுநிறைவு*** என்றும் ஏழிலும் குறைந்தளவு சுரங்களைக் கொண்டவை ***குறைநிறைவு*** அல்லது ஜன்ய இராகங்கள்

என்றும் குறிப்பிடப்படும். தாள முறைமையில், ஏக தாளம் எளிமையானதாக அமைகிறது.

சமகால மேலைப்புல இசையின் பிறிதொரு நீட்சியாக **இசை அரங்கு** (Music Theatre) என்றவடிவம் வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளது. அது மரபுவழி இசை அரங்கிலிருந்து வேறுபட்ட வடிவமாகின்றது.

நவீன இசைக்கருவிகளுடன் இணைந்த கூட்டு வடிவச் செயற்பாடாக அது அமைகிறது. ஒலிசாரா (Nonsonic) அசைவுகளை வெளிப்படுத்துதல், விதம்விதமான ஆடை அணிகளைப் புனைந்து அளிக்கை செய்தல், அழகு தரும் அசைவுகளை வெளிப்படுத்திப் பாடுதல், பின்னமைந்த திரையில் பொருத்தமான காட்சிகளை எறிவு செய்து காட்டுதல், முதலியவற்றை நவீன இசை அரங்கு கொண்டுள்ளது.

பார்வையாளரும் தமது இருக்கையில் இருந்து எழுந்து ஆடும் **இணைகோலமும்** அங்கே நிகழ்த்தப்படுகிறது. பார்வையாளர் இணைந்து செயற்படும் **கூட்டு அரங்காக** அது அமைகின்றது. அதற்கு ஒருவகையில் இணைவு கொண்டதாக, நாட்டார் இசை அரங்கு தமிழ்ச் சூழலில் வளர்ச்சி பெற்றுள்ளது.



**சமகால உலக இசை, இந்திய இசை, தமிழிசை, ஆகியவற்றில் பன்மைத்துவம் வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. மேலோங்கிய ஓர் இசை அல்ல பல இசைகள் என்ற பன்மைநிலை வளர்ச்சி நிகழத் தொடங்கியுள்ளது.**

நவீன மேலைப்புல இசை அரங்கின் செல்வாக்குடன் இணைந்த இசைக்குழுக்கள் தமிழ்ச் சூழலிலும் வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளன. சினிமாப் பாடல்களை நவீன இசைக் கருவிகளின் துணையுடன் பாடுதல், ஆடுதல், லேசர் ஒளி வீச்சுக்களை ஏற்படுத்தல், பார்வையாளரும் ஆடுதல் முதலியவை இடம்பெறத் தொடங்கியுள்ளன.

சமகால உலக இசையில் நிகழ்ந்து வரும் பிறிதோர் ஆக்க முயற்சி ***அலைக் கற்றை இசை*** (Spectral Music) அல்லது ***ஒலி அலைக் கற்றை இசை*** என்பதாகும். ***கேட்பு ஒலியியல்*** (Acoustic) பண்புக் கூறுகளை அடியொற்றி இசை வடிவத்தை உருவாக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இசையறிவு, இயற்பியல் அறிவு, கணித அறிவு, ஆகியவற்றின் ஒன்றிணைந்த அறிவுடன் அலைக்கற்றை இசை வடிவங்கள் உருவாக்கப்படுகின்றன. ஒலி அலைக்கற்றைகளைக் கையாள்வதன் வாயிலாக அழகிய இசைக்கோலம் உருவாக்கப்படுகிறது.

ஒலியைக் கணிதவியல் பின்புலத்தில் பகுத்தாராய்ந்து, விதம் விதமான இசைவடிவங்கள் உருவாக்கப்படுகின்றன. இசை அழகியலில் புதிய நகர்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது.

இசையறிவு, ஒலியியல் அறிவு, கணித அறிவு ஆகியவை இணைந்த நிலையில் உள்ள அறிவுடையோர் தமிழ்ச் சூழலிலும் வாழ்கின்றனர். ஒலி அலைக்கற்றை இசை பற்றிய உரையாடல்கள் தமிழிலும் அரும்பத் தொடங்கிவிட்டன.

***கணினி இசை*** என்பதும் சமகால உலகில் பெருவளர்ச்சிக்கொள்ளத் தொடங்கியுள்ளது. இசைவடிவங்கள் அல்லது இசைக்கோலப் பதிவுகள் கணினி அறிவின் துணையுடன் மேற்கொள்ளப்படுகின்றன. கணினி அறிவு என்பது இந்துக் கலைவடிவங்களிலும் செல்வாக்கை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

கணிதத்துக்கும் இசைக்கும் உள்ள தொடர்புகள், இயற்பியலுக்கும் இசைக்கும் உள்ள தொடர்புகள், கணினி வழி இசையில் மேலும் இணைப்புப் பெறுகின்றன. இசைக் கோல அமைப்பைக் கணினி அறிவு மேலும் எளிதாக்கிவிட்டது.

தமிழ்ச் சூழலில் புதிய தலைமுறை இசையமைப்பாளர் கணினிப் பயன்பாட்டுடன் இணைந்தோராய் வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளனர்.

**செயற்கை நுண்மதியின் வளர்ச்சி சமகால இசையில் எதிர்பாராத திருப்பங்களையும் நீட்சிகளையும், வியப்பையும் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. குரல் உருமாற்றம் நிகழ்த்தப்படுகின்றன. பாடமுடியாதவரையும் பாடவைக்கும் நிலை ஏற்படுகின்றது. செயற்கை நுண்மதியின் துணையோடு தோற்றுவாய் இசை (Generative Music) என்ற ஆக்கம் நிகழ்த்தப்படுகிறது.**



பழைய தலைமுறையினரும் கணினி அறிவுடையோரை நாடித் தமது ஆக்கங்களைச் செழுமைப்படுத்திக் கொள்கின்றனர்.

கணினி அறிவுடைய சிறுவரும் இசை வடிவங்களை ஆக்குவோராய் வளர்ச்சியடையும் நிலவரம் உலகில் இடம் பெறத் தொடங்கியுள்ளது.

செயற்கை நுண்மதியின் வளர்ச்சி சமகால இசையில் எதிர்பாராத திருப்பங்களையும் நீட்சிகளையும், வியப்பையும் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. குரல் உருமாற்றம் நிகழ்த்தப் படுகின்றன. பாடமுடியாதவரையும் பாடவைக்கும் நிலை ஏற்படுகின்றது. செயற்கை நுண்மதியின் துணையோடு தோற்றுவாய் இசை (Generative Music) என்ற ஆக்கம் நிகழ்த்தப்படுகிறது.

மொழியியலாளர் ***சோம்ஸ்கி*** உலக மொழிகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் **தோற்றுவாய் இலக்கணம்** என்ற கருத்தை முன் வைத்தார். மொழியைப் பயன்படுத்தும் பொழுது நிகழும் உளச் செயல்முறையை அடியொற்றி அந்தக் கருத்து உருவாக்கம் பெற்றது. அறிகை விஞ்ஞானத்தை அது அடிப்படையாகக் கொண்டது.

வேறு வேறுபட்ட நிலைகளிலும் தொடர்ச்சியான மாறு பாடுகளை உருவாக்கியும் தோற்றுவாய் செய்யும் இசையானது குறிப்பிட்ட செயற்றொகுதியிலிருந்தே உருவாக்கம் பெறுதல் அறிவுறுத்தப்படுகிறது.

இசையின் மாற்றங்களையும், வளர்ச்சிகளையும், புதிய புதிய படைப்புக்களின் உருவாக்கங்களையும் விளங்கிக் கொள்வதற்கு அறிகை விஞ்ஞானமும், அறிகை உளவியலும், துணை செய்தவண்ணமுள்ளன. வரையறுக்கப்பட்ட இசை மொழியை வைத்துக்கொண்டு விதம்விதமான ஆக்கங்களைப் பிறப்பிக்கும் செயற்பாட்டை மனிதமூளை தோற்றுவாய் செய்கின்றது.

சமகால உலக இசை, இந்திய இசை, தமிழிசை, ஆகிய வற்றில் பன்மைத்துவம் வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. மேலோங்கிய ஓர் இசை அல்ல பல இசைகள் என்ற பன்மைநிலை வளர்ச்சி நிகழத் தொடங்கியுள்ளது. இசைகளுக்கிடையே கலப்பும் இடம்பெற்றுவருகிறது.

கருநாடக இசை, இந்துஸ்தானி இசை, நாட்டார் இசை ஆகியவற்றுக்கிடையே கலப்பு நிகழ்த்தப்படுகிறது.

இந்தித் திரைப்படங்களிலே பயன்படுத்தப்படும் (பொலிவூட்) இசை, தெலுங்குத் திரைப்பட (ரொலிவூட்) இசை, தமிழ்த் திரைப்பட இசை, ஆகியவை கலப்புநிலை இசை வடிவங்கள். அவை பொதுமக்களிடையே வரவேற்பை நிகழ்த்தி வருகின்றன.

இனச்சால்பியத்தோடு தொடர்புடைய இசைவடிவங்கள் இந்திய இசையின் பன்மைத்துவத்தை அடையாளப் படுத்துகின்றன. தமிழகத்துக்குரிய பண் இசை, வங்காளத்துக் குரிய இரவீந்திர சங்கீதம், ஜெயதேவரால் உருவாக்கப்பட்ட ஒடிசி இசை, மகாராஸ்டிராவில் உருவான லாவணி இசை,

**மொழியியலாளர் சோம்ஸ்கி உலக மொழிகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் தோற்றுவாய் இலக்கணம் என்ற கருத்தை முன்வைத்தார். மொழியைப் பயன்படுத்தும் பொழுது நிகழும் உளச் செயல்முறையை அடியொற்றி அந்தக் கருத்து உருவாக்கம் பெற்றது. அறிகை விஞ்ஞானத்தை அது அடிப்படையாகக் கொண்டது.**



ஹரியானாவில் தோற்றம்பெற்ற ஹரியானி இசை, குஜராத்திய தண்டியா இசை, பஞ்சாப்பின் பங்காரா இசை, அசாமின் பிகு இசை, சித்தர்களாலும், சூபிஞானிகளாலும் உருவாக்கம்பெற்ற இசை, கானா இசை, இந்துசமய வழிபாடுகளோடும் சடங்குகளோடும் இணைந்த தொன்மையான வேதங்களை அடிப்படையாகக் கொண்ட சுலோக இசை, என்ற பன்மைத்துவ இயல்புகள் இந்தியாவிலே காணப்படுகின்றன.

இராக தாள அமைப்பைக் கொண்ட கருநாடக இசையும், இந்துஸ்தானி இசையும் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டைத் தொடர்ந்தே வளர்ச்சிபெற்றவை. மிகவும் வளம் பொருந்திய அந்த இசைவடிவம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலும் வளமாக்கலைப் பெற்றது. அந்த வளர்ச்சிக்கு இந்தியாவில் நிலைபெற்றிருந்த பெரும் இசைப் பாரம்பரியமே பின்புலமாயிற்று.

கருநாடக இசையும் இந்துஸ்தானி இசையும் இறை அனுபவங்களை வெளிப்படுத்தி எழுவனவாக முதலில் இருந்தன. பிற்காலத்தில் அவை உலகியலை அடியொற்றி நகரத் தொடங்கினாலும், இறையியற் பிணைப்பே அவற்றின் ஆன்மாவோடுகலந்தும் நிறைந்துமுள்ளது. சங்கீத மும்மூர்த்திகளும், ஆதி மும்மூர்த்திகளும் இறை அனுபவ ஆழத்தை இசையால் நிலைகொள்ளச் செய்தனர்.

சமகாலத்தின் முறையான ஆய்வுகளும் பரிசோதனைகளும் இசைத்துறையில் விரி வாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகெங்கும் நிகழும் ஆய்வுகள் பரிமாற்றம் செய்யவும் படுகின்றன. இசைப் பல்கலைக்கழகமும் உருவாக்கம் பெற்றுவிட்டது.

ஆய்வுகளை அடியொற்றி மரபுவழி இசைக்கருவிகளில் மாற்றங்கள் நிகழ்த்தப்படுகின்றன. தோற்கருவிகளில் விலங்குத் தோலுக்குப் பதிலாக செயற்கைத் தோல்களும் இணைப்புகளுக்கு உலோகத் தகடுகளும் பயன்படுத்தப்படுகின்றன. தந்திக் கருவிகளிலும் காற்றுக்கருவிகள் மேலும் செப்பமாக வடிவமைக்கப்பட்டு, ஓசை பிறப்பிக்கும் திறன் மேலும் சிறப்பிக்கப்படுகிறது.

இசையின் சமூக நிலைவரம், இசை அரசியல், உளவளத்துணையில் இசை, முதலாம் ஆய்வுத்துறைகள் வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளன.

ஒடுக்குமுறைக்கும், அநீதிகளுக்கும் எதிரான கலக இசையாக பங் (Punk) இசையும், பங் பண்பாடும் வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளன. மேலாதிக்கத்துக்கு எதிராக அவை எழுச்சிகொண்டாலும், திட்டவட்டமான கருத்தியல்தளம் அங்கே காணப்படவில்லை. விநோதமான ஆடை அணிகலன்களும் தலைமுடிச்சீவல்களும் தலை முடிக்குச்சாயமிடுதலும் இசைநடுவே எதிர்ப்புச் சுலோகங்களை வெளிப்படுத்துதலும், கத்துதலும், மாற்று ஒலிகளை எழுப்புதலும், பங் இசைப் பண்பாட்டில் நிகழ்த்தப்படுகின்றன.

அதேவேளை, தெளிவான கருத்தியல் தளத்தில் நின்று, இசையை வடிவமைத்தல், ஒடுக்கப்பட்டோர் இசையிலும் கருமை இசையிலும் காணப்படுகின்றது. கருமை இன மக்கள் தம்மீது மேற்கொள்ளப்படும் மேலாதிக்கத்தைத் தகர்க்கும் செயற்பாடுகளுள் ஒன்றாக, கருமை இசையைப் பயன்படுத்துகின்றனர். ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்தையும் செயலையும் வலுப் படுத்த ஒடுக்கப்பட்டோர் அரங்கு, ஒடுக்கப்பட்டோர் இசை, ***ஒடுக்குமுறையை விடுவிக்கும் கல்வியளிக்கை*** (Pedagogy Of The Oppressed), முதலியவை முன்னெடுக்கப்படுகின்றன. அரசியற் கருவியாகவும், விடுதலைக்குரிய கருவியாகவும் இசை பயன்படுத்தப்படுகிறது.

○○○




அவள் மெல்லென கண்களைத் திறக்கிறாள். சூரியனின் ஒளியை நோக்கினாள். சூரியனின் விட்டம் 1,400,000 கிலோமீட்டர்கள். அதன் மையத்தில் உள்ள அணுக்கருக்கள் உருகியிளகி இணைவதிலிருந்து உருவாகும் சக்தி அதன் மேற்பரப்பை அடைய ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு மேல் எடுக்கும். அந்த மேற்பரப்பு வெப்பநிலை 6000°Cக்கும் அதிகமாகும். வெப்பத்துடன் ஒளியும் சேர்ந்து அந்த ஒளி பூமியை அடைய எட்டு நிமிடங்களும் பத்தொன்பது செக்கன்களும் எடுக்கும்.

அவள் 1945 ஆகஸ்ட் 10 அன்று டோக்கியோவில் பிறந்தாள். அது நாகசாகியில் அணுகுண்டு வெடித்து இரண்டு ஆண்டுகளும் ஒரு நாளும் கழிந்த, ஹிரோசிமாவில் அணுகுண்டு வெடித்து இரண்டு வருடங்களும் மூன்று நாட்களும் கழிந்த தினம்.

அவள் தாயின் வயிற்றில் பத்து மாதங்களும் பத்து நாட்களும் இருந்துவிட்டு வெளிப்பட்டவள்.

அவளுக்கு யோகோ என பெயரிட்டார்கள். அது பசிபிக் பெருங்கடலை ஜப்பானிய மொழியில் அழைக்கும் தைஹெய்யோ என்ற சொல்லின் யோ என்பதை ஒட்டியதாகும்.

ஆறு வயதில், அவள் ஆரம்ப பாடசாலையில் சேர்ந்தாள். அவளுடைய அம்மா அவளுடைய நீண்ட கருப்பு கூந்தலை மூன்று பாகங்களாக பிரித்து சடைகளாக பின்னிவிட்டிருந்தாள். பசிபிக் பெருங்கடலில், பிகினி பவளப்பாறைகளில் மீது பட்டெறிந்த ஒளி பிரகாசித்தது. பரீட்சார்த்தமாக அமெரிக்கா குண்டுகளை வெடித்து சோதித்துக்கொண்டிருந்ததன் விளைவு அது. முதலில் அணு குண்டு பின்னர் ஹைட்ரஜன குண்டு. கடலின் நடுவில் எழுந்த ஓர் ஒளிக்கற்றை

**எரிக்கா கேபயாஸி** (Erika Kobayashi) **பற்றி மொழிபெயர்ப்பாளர் குறிப்பு**




ஆகஸ்ட் 1945 ஆம் ஆண்டிலேயே, ஜப்பானில் புனைகதை எழுத்தாளர்கள் ஹிரோசிமா மற்றும் நாகசாகியை அழித்த கொடிய மற்றும் அழிவுகரமான அணுகுண்டுகளின் பின்விளைவுகளை ஆராயத் தொடங்கினர். அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் இந்த வகையான படைப்புகளை தணிக்கை செய்தன. அவை தற்போது ஜென்பாகு பங்காகு (“அணுகுண்டு இலக்கியம்”) என்று அழைக்கப்பட்டு 20ஆம் நூற்றாண்டின் ஜப்பானிய எழுத்தின் மிகவும் உணர்ச்சிகரமான வகைகளில் ஒன்றானது.. அவ்வகையில் எரிகா கோபயாஸி (1978) முக்கிய எழுத்தாளராக விளங்குவதோடு 78வது மைனிச்சி பப்ளிசிங் கலாச்சார விருது, 46வது நோமா இலக்கிய பரிசு மற்றும் 2022–2023 ஜப்பான்–அமெரிக்க நட்பு ஆணைக்குழு பரிசுகளை (JUSFC) பெற்றுள்ளார்.

அதன்பின் ஒரு நீர்த்தாரை அதன் பின் ஒரு காளான் வடிவ மேகம். அந்த வெடிப்பு S.S. Lucky Dragon No. 5 எனும் ஒரு மீன்பிடி படகை, அள்ளி வீசியது. படகில் இருந்தவர்கள் சுகவீனம் அடைந்தார்கள். அதில் பிடிபட்டிருந்த சூரை மீனும் அணு அணுவாகி சுகிஜி மீன் சந்தைக்கு கொண்டு செல்லப்பட்டு தரையில் புதைக்கப்பட்டது.

அவள் ஒரு திரையரங்கின் இருளில் தன் தாயின் அருகில் அமர்ந்து ஒரு கருப்பு-வெள்ளை திரைப்படத்தை பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய தாய் அந்த இருளில் அவளுக்கு அருகில் பின்னல் வேலை கொண்டிருந்தாள், அவளுடைய விரல்கள் தன் மகளின் தலை முடியைப் பின்னுவது போலவே நூல் பின்னும் வேலையையும் சுறுசுறுப்பாக செய்தவாறு அன்றே அவள் செய்ய வேண்டிய சிறுசால் வையை நெய்யும் வேலையை முடித்தாள்.

அந்த மார்ச் மாதத்தின் பிற்பகுதியில், போருக்குப் பிறகு முதல் முறையாக, அணு சக்திக்கான நிதியை பாராளுமன்றம் அங்கீ கரித்தது. நிதி மொத்தம் 235 மில்லியன் யென் ஆகும். அணுசக்திக்கான யுரேனியம் 235 சமதானியை உருவாக்கவும் உற்பத்தி வேலை தீவிரமாகத் தொடங்கப்பட்டது.

பதினொரு வயதில், அவள் இடைநிலை பாடசாலையில் சேருவதற்கு ஒரு வருடத்துக்கு முன்பு, ஜப்பான் அதன் முதல் 10,000-யென் பணத்தாளை வெளியிட்டது. அதில், பண்டைய காலங்களில் சூரியன் உதிக்கும் இடத்தில் தோன்றிய பரலோக ஜீவன் என்று அழைக்கப்பட்ட இளவரசன் ஷோடோகு விண் படம் பொறிக்கப்பட்டிருந்தது. அவள் அவன் முகத்தைப் பார்த்து, வியந்து போனாள். எப்போதாவது நான் கைநிறைய தாள்களை அள்ளுவேன் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

பதினாறு வயதில், அவள் உயர்நிலைப் பாடசாலையில் படிக்கும்போது ஜப்பான் அதன் முதல் அணுசக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்தது. ஜப்பான் பவர் டெமான்ஸ்ட்ரேசன் ரியாக்டரின் முதலிடமான டோக்காய் என்ற சிறிய கிராமத்தில் சர்ச்சையின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. இது தொலைக்காட்சி செய்தியாக ஒளிபரப்பப்பட்டது. ஆனால் அவளுடைய குடும்பத்திற்கு சொந்தமாக ஒரு தொலைக்காட்சிப்பெட்டி இருக்கவில்லை என்பதால் அதை அவள் பார்க்க தவறிவிட்டாள். அவளுடைய இடைநிலை பாடசாலை கணித ஆசிரியையின் கணவருக்கு ஒரு புதிய வேலை கிடைத்து டோக்காய்க்குச் செல்ல வேண்டிய போது ஆசிரியையும் அவரோடு சென்றதை அவள் நினைவில் வைத்திருக்கிறாள்.

பதினெட்டு வயதில், அவள் ஒரு மகளிர் உயர் கல்லூரிக்குச் சென்றாள். அமெரிக்க - ஜப்பான் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் மீதான மாணவர் போராட்டங்கள் உச்சத்தை எட்டி யிருந்தாலும் அவளின் கல்வி அதனால் பாதிக்கப் படவில்லை. அவள் எந்த பிரச்சனையும் இல்லாமல் பட்டம் பெற்று வேலை தேடினாள்.

இருபது வயதில், அவளுக்கு ஜப்பானின் நீண்டகால கடன்வழங்கும் வங்கியில் ஒரு வேலை கிடைத்தது. அதன்பின் அவளுடைய தலைமுடி அதன் பின் மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டு பின்னல் போடப்படுவது தொடரப் படாமல் குட்டையாகவும் சுருண்டதாகவும் விரித்துவிடப்பட்டது.

அவளுடைய ஆசை இறுதியாக நிறை வேறியது. ஒவ்வொரு நாளும், அவள் கைகளில் 10,000-யென் பணத்தாள்கள் புரண்டன. ஆனால் அவை நிச்சயமாக அவளுக்கு சொந்த மானவை அல்ல, வங்கிக்கு சொந்தமானவை. என்றாலும் அவள் அவற்றை எண்ணிப்பார்பதில் பரவசப்பட்டிருந்தாள். ஆனால் இப்போதெல்லாம் பணத்தாள்களை இயந்திரங்கள் எண்ணுகின்றன, ஆனால் அப்போது அதை வங்கிகளின் கண்ணாடி கூண்டுக்குள் அமர்ந்திருக்கும் பெண்களே செய்து வந்தனர்.

முப்பது வயதில், பத்து வருடங்கள் வேலை செய்த பிறகு, எழுத்தாளராக வேண்டும் என்ற தனது கனவைத் தொடர மருத்துவர் பணியை விட்டெறிந்த ஒரு மனிதரை அவள் கைப்பிடித்தாள். அதன்பின் அவள் அடுத் தடுத்து நான்கு மகள்களின் தாயானாள். இந்த மகள்களில் நான்காவதுதான் நான் என்பதை நான் சொல்ல வேண்டும். இதுவரை சொல்லப் பட்டது என் அம்மாவின் கதை.

ஜப்பான் முழுவதும் அணு உலைகள் முளைத்தன. என் அம்மா நாற்பது வயதை எட்டும்போது, முப்பத்தைந்து அணு உலைகள் நாடு முழுவதும் உள்ள நகரங்களுக்கு 27,881,000 கிலோவாட் மின்சாரத்தை வழங்கின.

தெருக்கள் அணுசக்தியால் இயங்கும் ஒளியால் இரவும் பகலும் ஒளிர்ந்தன.

ஐம்பத்தொரு வயதில், ஜப்பானின் நீண்டகால கடன் வழங்கும் வங்கி திவாலானது நான் உட்பட அவளது மகள்களாகிய அனைவரும் வேலை அல்லது திருமணம் காரணமாக வீட்டை விட்டு தொலைவானோம். 10,000 யென் பணத்தாளில் இளவரசர் ஷோடோகு படம் மாற்றப்பட்டு பதிலாக யுகிச்சி ஃபுகுசாவா (ஜப்பானிய தத்துவஞானி 1835-1901) படம் பொறிக்கப்பட்டது. தாய் தனது சேமிப்பில் வாங்கிய வங்கிப் பங்குகள் பத்திரங்கள் வங்கி திவாலடைந்தமையால் வெறும் காகிதங்களாக மாறியன.

அறுபத்து மூன்று வயதில், அவளது கணவர் இறந்தார், அடுத்த ஆண்டு அவரது தாயார் இறந்தார். ஒவ்வொரு இறுதிச் சடங்கிற்கும் நாங்கள் அனைவரும் புதிய ஆடைகளை வாங்க வேண்டியிருந்தது.

தாயின் தாயார் இறந்த அதே ஆண்டில், பூகம்பமும் சுனாமியும் டோஹோகுவைத் தாக்கியது. அது Fukushima Daiichi அணுமின் நிலையத்தில் விபத்தை ஏற்படுத்தி வெளிச் சத்தோடு அங்கு வெடிப்புகளை ஏற்படுத்தியது. இருப்பினும், அவளது தாயாரின் மரணம் அனர்த்தம் அல்லது கதிர்வீச்சு காரணமாக நிகழவில்லை. அது முதுமை காரணமாகத்தான் நிகழ்ந்தது. கிறிஸ்துமஸ் தினத்தன்று இரவில் அவர் இறந்தார். இறக்கும்போது ஒரு பின்னி முடிக்கப்படாத ஸ்வெட்டர் மற்றும் தொப்பி மற்றும் சில பிரகாசமான சிவப்பு நூல் பந்துகள் இருந்தன. இரவு வானத்திலிருந்து பனி கீழே விழுந்ததால் தெருவிளக்குகள் மற்றும் நியான் விளம்பர பலகைகள் ஒளிர்வது வித்தியாசமாக தெரிந்தது.

அவள் புத்தம் புதிய அடர் கருப்பு நிற துக்க உடையை அணிந்திருந்தாள், தலை முடியை பின்னால் இழுத்து, சன்கிளாஸ்களை அணிந்துகொண்டு, இறுதிச் சடங்குக்கு செலுத்த வேண்டிய பணத்தை எண்ணினாள். அவளுடைய கைகள் 10,000-யென் பணத்தாள்களால் நிரம்பியிருந்தன. சில ஆண்டுகளுக்கு முன்பு கண்புரை அறுவை சிகிச்சை காரணமாக உட்புற வெளிச்சம்கூட மிகவும் பிரகாசமாக



தெரிவதால் மேலும் அவளுக்குப் பார்வைக்கு கருப்பு மூக்கு கண்ணாடி தேவைப்பட்டது.

விரைவில், நாங்கள் அனைவரும் ஒரு ஓட்டலுக்குச் சென்றோம். பின்னணியில், க்ளென் மில்லர் இசைக்குழு "மூன்லைட் செரினேட (Moonlight Serenade)" பாடலை வாசித்தது. அது "சன்ரைஸ் செரினேட் (Sunrise Serenade)" என்று அழைக்கப்பட்ட இசைத் தட்டு ஒன்றிலுள்ள உள்ள பாடல் என்று என்பதை நான் பின்னர் அறிந்தேன்.

உலகின் முதல் அணு குண்டு நியூ மெக்ஸிகோவில் உள்ள டிரினிட்டி தளத்தில் வெடித்தபோது, வானொலி அந்தப் பாடலை ஒலிபரப்பியது என்பதையும் அறிந்தேன்.

"தி கேஜெட்" என்று அழைக்கப்படும் அந்த குண்டு 1.5 மீட்டர் விட்டம் கொண்டது. மன்ஹாட்டன் செயற்றிட்டத்தின் நிதி மொத்தம் இரண்டு பில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டது. அதன் மையத்தில் புளுட்டோனியத்தை பிளப்பதன் மூலமாக வெளியிடப்பட்ட சக்தியானது 66,000°C வெப்பத்தை உருவாக்கியது, இது சூரியனின் மேற்பரப்பைவிட பதினொரு மடங்கு அதிகம். அதன் ஒளிபட்ட அனைத்தும் எரிந்தன.

அறுபத்தெட்டு வயதில், அவளுடைய மற்றொரு மகளாகிய நான் தாயாகிவிடுவேன்.

பத்து மாதங்கள் மற்றும் பத்து நாட்களுக்குப் பிறகு, என் வயிற்றில் இருந்து ஒரு குழந்தை வெளிப்படும்.

அது மெதுவாக கண்களைத் திறக்கும்போது, அது சூரியனின் ஒளியைப் பார்க்குமா?

# கதிர்காமம்


## இடப்பெயர் ஆய்வு




கலாநிதி

**செல்லத்துரை சுதர்சன்**

(தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)


### அறிமுகம்

ஓர் ஊர் அல்லது ஒரு தலம் அமைந்த இடம், அல்லது ஒரு தலம் குறித்த அதிகளவிலான இடப்பெயர் ஆராய்ச்சி, பல்வேறு நோக்குகளில் நடைபெற்றிருக்கும் எனில், அது 'கதிர்காமம்' என்பதற்கே என்பதை, இடப்பெயர் ஆய்வு பற்றிய ஈழத்து எழுத்துக்களை வாசித்தோர் நன்கு உணர்வர். ஈழத்தில், பல்லின பல்சமயச் சங்கமிப்பு நிகழும் இடங்களில், கதிர்காமம் முதன்மையானது. அதனால், அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்களில், அச்சொல் குறித்த அர்த்தப்படுத்தலும் அது குறித்த அவதானிப்பும் அதிகமாகவே இருக்கிறது. இப்பொருண்மை குறித்த அறிமுகக் கட்டுரையாகவே இது அமைகிறது. ஆகையால், 'கதிர்காமம்' என்பதன் இடப்பெயர் அர்த்தம் குறித்து மொழி, பண்பாடு, சமயம் ஆகியவற்றின் நிலைநின்று, சுருக்கமாக விளக்க இக்கட்டுரை முயலுகிறது.

### திருப்புகழிலா முதல் பதிவு?

குகதொன்மைப் பதியாகிய 'கதிர்காமம்' எனும் பெயர்க் காரணம் பற்றிப் பலரும் பலவிதமாக எழுதி வைத்துள்ளனர். ***பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை*** அவர்கள், "கதிர்காமம் என்ற தலப்பெயர் ***அருணகிரிநாதர் திருப்புகழிலேயே முதன்முதலில்*** இடம்பெறுகிறது" என்கிறார்.

கி.மு. 5000 வருடங்களுக்கும் முற்பட்ட வடமொழிக் ***கந்தபுராண***த்து வீரமாமகேந்திர காண்டம், பதினெண் புராணங்களில் ஒன்றாகிய காந்தமகா புராணத்தில் வரும் தட்சிணகைலாச மான்மியம் முதலானவை இவ்விடயத்தில் முதலில் நமது கவனத்திற்குரியவை. அவற்றிற் பலவும் பேராசிரியர் குறித்த கருத்தைக் கூறும் காலத்துக்கு முன்னரேயே தமிழில் வெளியாகியவை.

### தட்சிண கைலாச மான்மியத்தின் பதிவு

"தட்சிண கைலாச மான்மியம்" என்ற வடமொழி நூலை ***சி. நாகலிங்கம்பிள்ளை*** அவர்கள் 1928இல் தமிழில் மொழிபெயர்த்தார். அந்நூலில், கதிர்காம மகிமை உரைத்த படலம், கதிர்காம கிரி மகிமை உரைத்த படலம், கதிர்காமத் தலவிசேடப் படலம் முதலாய படலங்கள் அமைந்துள்ளன.

மேற்குறித்த படலங்கள் கூறும் செய்திகளை ஆழ்ந்து நோக்கினால், மிகவும் பிற்பட்ட காலத்தவரான அருணகிரிநாதரின் திருப்புகழில்தான் 'கதிர்காமம்' என்ற சொல் முதன்முதலில் இடம்பெறுகிறது முதல் பதிவு இடம்பெறுகிறது என்ற செய்தி தவறானது என்பதைப் புரிந்துகொள்ள இயலும்.

### சங்கதத்தில் இருந்து தமிழுக்கா?

பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள், தாம் எழுதிய "சன்னிதி முருகன் வழிபாட்டு வரலாற்றுப் பின்னணி" எனும் கட்டுரையில், "கதரகம" என்பது தலப் பெயராகவும் ஊர்ப் பெயராகவும் விளங்குவது என்றும், அவை, பாளி மற்றும் சிங்கள மொழிகளில் நெடுங்காலமாக நிலவுவது என்றும் குறிப்பிடுகிறார்.

"'கதரகம' தலப் பெயரும் ஊர்ப்பெயரும் பாளி, சிங்கள மூலாதாரங்களிலே நீண்ட காலமாக இடம்பெற்று வந்துள்ளன" என்று கூறும் அவர், "கிராமம் என்ற சங்கத மொழிச்

சொல், சிங்களத்திலே 'கம' எனவும் இலங்கைத் தமிழிலே 'காமம்' எனவும் திரிபுபட்டு வழங்குகின்றன" என்றும் கூறுகிறார்.

சங்கதம், பாளி, சிங்களம் ஆகிய மொழிகளின் தோற்றம், பரம்பல், பயில்நிலை ஆகியவற்றை வரலாற்று ரீதியாக அறிந்தோர் அவர் கருத்தின் பொருத்தப்பாடின்மையை உணர்வர்.

### சிங்கள சொல்லின் மரூஉவா?

முதலியார் ***குல.சபாநாதன்*** அவர்கள், 'கதிர்காமம்' என்னும் தனது நூலில், கதிர்காமம் என்பது சிங்களச் சொல்லிலிருந்து மரூஉவிப் பிறந்த திசைச் சொல் என்றும் அது பிற்கால வழக்கு என்றும் கூறுகிறார்.

"கதிரகாமம் என்பது சிங்களமொழிச் சொல்லின் மரூஉவாய்த் தமிழ் மொழியின் கண் திசைச் சொல்லாய்ப் பிற்காலத்தில் வழக்கில் வந்ததே எமது கொள்கை" என்பது அவர் கூற்று.

இலங்கையில் சிங்கள அரசு ஆதிக்கம் செலுத்திய காலத்தில், அந்த அரசின் அரசாங்க சமாச்சாரப் பகுதியின் வெளியீடான 'ஸ்ரீலங்கா' என்ற மாதாந்தச் சஞ்சிகையின் தமிழ்மொழி மூல ஆசிரியராகப் பணியாற்றியமையால், இவ்வாறானதொரு கருத்தை, அவர் தமது கொள்கையாக்கி வெளியிடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கலாம்.

### மாமரமா? மாங்காய் மரமா?

***சிவசம்புப் புலவர்*** புலமை மரபினரும் பன்மொழி ஆராய்ச்சிக் கலாநிதியும் 'ஈழநாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள்' நூலின் ஆசிரியருமான தென்புலோலியூர் ***மு.கணபதிப்பிள்ளை*** அவர்கள், 'கதிர்காம முருகன்' (1975) என்ற தலைப்பிலான தமது விரிவான கட்டுரையில், குல.சபாநாதன் அவர்களது நூலில் உள்ள பெரும்பாலான கருத்துகள் தவறென்று இடித்துரைக்கிறார்.

குல. சபாநாதன் அவர்களின் நூலில் உள்ள குறைபாடுகளை, மு. கணபதிப்பிள்ளை அவர்கள், தனது கட்டுரையில் விரிவாக மறுத்துரைத்து, இறுதியில், "இவையாவும், புதுவதாக ஏதாவது காட்டிவிட வேண்டும் என்ற ஆசையினால், ஆராய்ந்து பாராது புனைந்து கொள்ளப்பட்ட 'நாடோடிச் சப்தோற்பத்தி'கள் எனவே கொள்ளுதல் வேண்டும்" எனக் கடிகிறார்.

தல வரலாற்றையும் தல மூர்த்தியின் வரலாற்றையும் கவனத்திற் கொண்டு இடப்பெயர் விளக்கத்தினை, குல. சபாநாதன் அவர்கள் வழங்கவில்லை என மு. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறுகிறார்.

"முருகன் வரலாற்றையும் திருக்கோயில் வரலாற்றையும் அறிந்துகொள்ளாமல் - மாமரத்தை 'மாங்காய் மரம்' என்று கூறுவது போல - 'கதரகமத் தெய்யோ' எனவே வழங்கும் ஒரு மொழியில் கோயிற் பெயர்க்காரணம் காண விழைவது அழகாக இருக்கிறது" என, மு. கணபதிப்பிள்ளை அவர்கள் எள்ளி நகைக்கிறார்.

### யாத்திரைப் பாதை ஊர்கள்


ஆய்வாளர் ***கதிர். தணிகாசலம்*** அவர்கள், தாம் எழுதிய, 'தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும்' (1992) என்ற ஆய்வு நூலில், "காலங் கூறவொண்ணாக் கதிர்காம யாத்திரையும் இடப் பெயர்களும்" என்ற பகுதியில், தொன்றுதொட்டு நிகழும் கதிர்காம யாத்திரையில், யாத்திரை பாதை அமையும் ஊர்களை அடிப்படையாகக் கொண்டு, தமது கருத்தை நிறுவுகிறார்.

கதிர்காம யாத்திரை, இலங்கையின் வடக்குப் பகுதியில் ஆரம்பித்து, கிழக்கை ஊடறுத்து, தெற்கில் கதிர்காமத்தைச் சென்றடையும்வரை உள்ள ஊர்கள் யாவும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து, தமிழர் வதியும் இடங்களே என அவர் பதிவு செய்கிறார். அவ்வூர்களை அடையாளங் காட்டி, அவ்வூர்ப் பெயர்கள் யாவும் தமிழ் இடப் பெயர்களே என்றும் நிறுவுகிறார்.

'கட்டகாமம்', 'கதிர்காமம்' போன்ற இடங்களின் அருகில், "முன்னர் தமிழர் வாழ்ந்த பகுதி" எனவும் குறிக்கிறார்.


### சிங்களமாய் மாறிய தமிழ் ஊர்கள்

"கதிர்காம யாத்திரை வழித் தலங்கள் அனைத்தும் தமிழ்ப் பெயர் தாங்கிய ஊர்கள், இன்று சிங்கள மக்கள் வாழும் ஊர்களாயிருந்தாலும், அவையும் தமிழ்ப் பெயரையே தாங்கியுள்ளன, அவை, பெரும்பான்மை தமிழையும் சிறுபான்மை சிங்களத்தையும் கலந்துபேசும் வேடுவர் வாழும் குடியிருப்புகள், இலங்கை அரசால் சிங்களக் குடியேற்றம் இப்பகுதிகளில் வேகமாக நடைபெற்றவாறுள்ளன" போன்ற செய்திகளை கதிர். தணிகாசலம் அவர்கள் தனது நூலில் விரிவாகக் குறிப்பிடுகிறார்.



" கதிர்காமம் என்பது சிங்களமொழிச் சொல்லின் மரூஉவாய்த் தமிழ் மொழியின் கண் திசைச் சொல்லாய்ப் பிற்காலத்தில் வழக்கில் வந்ததே எமது கொள்கை

– குல. சபாநாதன் "



" இவையாவும், "முருகன் வரலாற்றையும் திருக்கோயில் வரலாற் றையும் அறிந்துகொள்ளாமல் – மாமரத்தை 'மாங்காய் மரம்' என்று கூறுவதுபோல – 'கதரகமத் தெய்யோ' எனவே வழங்கும் ஒரு மொழியில் கோயிற் பெயர்க்காரணம் காண விழைவது அழகாக இருக்கிறது"

– மு. கணபதிப்பிள்ளை "

"வடக்கும் - கிழக்கும் யாழ்ப்பாணக் குடாநாடு தொடக்கம் கதிர்காமம்வரை தமிழரது மரபுவழித் தாயகம் என்பதை எடுத்துக்காட்டும் இயற்கையான வலுவான சான்று இது. தமிழ் ஊர்ப்பெயர்கள் சிங்களமயமாகிக் கொண்டு வருகின்றன" என்றும் அவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

### இரு புதுப் பொருள்

"யானைகள் கூட்டம் கூட்டமாகச் சென்று வழிபட்ட இடம்" என்பதால் 'கஜரகம' எனப் பெயர் ஏற்பட்டு, 'கதரகம' எனச் சிங்களத்தில் வழங்கி, பின்னர் தமிழில் 'கதிர்காமம்' எனவாகியது என்று ஆய்வாளர் சிலர் கூறுகின்றனர் என்று கூறும் கதிர். தணிகாசலம் அவர்கள், அது தவறானது எனச் சுட்டிக்காட்டுகிறார்.

கதிர். தணிகாசலம் அவர்கள், கதிர்காமம் என்பதற்குக் கூறும் பெயர்க் காரணங்கள் சிலவற்றில் இரண்டு புதியவையாகத் தோன்று கின்றன. இந்த இரண்டும் முன்னர் பலரும் குறிப்பிடாதவையுங்கூட.

"தினைப் புனங்களால் சூழப்பட்ட இடம்: இது, கதிர் + அகம் - கதிரகம் - கதிரகம", "கதிர் என்பது வேலையும் குறிக்கும்" எனும் இரண்டுமே அவர் கூறுவனவற்றில் புதியவை. இங்கு முதலாவது பற்றிச் சுருக்கமாக நோக்கலாம்.

### கதிர் – தினை

வேளாண்மைச் சமூகம் மனித வரலாற்றில் உயர்நிலை பெற்றதாகக் கருதப்பெறுவதால், கதிர்காமம் என்பதற்கு, 'தினைப் புனம்' குறித்து அவர் வரையும் பொருள் ஏற்புடையதாக அமைகிறது. "தினைப் புனங்களால் சூழப்பட்ட இடம்: இது, கதிர் + அகம் - கதிரகம் - கதிரகம" என அவர் குறிப்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

தமிழர் வரலாற்றிலே, பண்பாட்டு வளர்ச்சி யில் உயர்வடைந்த மக்கள், ஊர்களை அமைத்து வாழும் பகுதிகளது இடப் பெயர் களின் பின்னொட்டுகளாக ஊர், புரம், பற்று, காமம், கை, கோயில் முதலியவை அமைவதை இடப் பெயர் ஆய்வாளர் சுட்டுவர். ஆகையால், கதிர்காமம் என்பதன் பின்னொட்டும் 'காமம்' என வருவதால், அதனை ஏற்க முடிகிறது.

இன்னும், வள்ளி தினைப்புனங் காத்த கதையைக் கருத்திற்கொண்டு, வேளாண்மைச் சமூக வளர்ச்சியை அதனோடு தொடர்புபடுத்தி, இதனை மேலும் விரிவாக்கி உரைப்பதற்கு இடமுளது. இப்பொருள் கொள்ளல், கந்த புராணப் பொருண்மையோடு தொடர்புற்ற வரலாற்றைக் கொண்ட, தென்னிலங்கைக் காடுகளில் வள்ளி வாழ்ந்த இதிகாச புராண வரலாற்றைக்கொண்ட கதிர்காமத்திற்கு அதிக பொருத்தம் உடையதாய் அமையும்.

### இடப்பெயரில் தத்துவம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஈழத்தில் நிகழ்ந்த சைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகளில் ஒன்று அனைத்திற்கும் சைவ நிலை சார்ந்து தத்துவப் பொருளேற்றும்

நிலை. அது தொடர்பான விவாதங்களுக்கு அப்பால், அக்கால நிலவரத்தின்படி, அது சரி இயல்பானது என்பதையும் மனங்கொள்ளல் வேண்டும்.

மகாவித்வான் ***நா. கதிரைவேற்பிள்ளை*** அவர்கள் கதிர்காமம் என்பதற்கு வழங்கும் விளக்கத்தையும் நோக்க வேண்டும். அவர்கள், 'கதிர்காமம்' என்பதை, 'கதிர் - ஒளி, காமம் - இன்பம்' எனவாறு பகுக்கிறார். "ஆன்மாக்களுக்குச் சிவஞானவொளியினாற் பேரின்பத்தையளிப்பது", எனவும் "பரஞ்சுடராகிய கந்தக் கடவுள் விரும்பியுறைவது" எனவும் கூறுகிறார். பின்னர், "துரியப் பொருளாகிய குகஞானமென்னுஞ் சோதி வியாபித்தலானும் குகசாயுச்சியமென்னும் இன்பத்தைக் கொடுத்லானும் வந்த காரணப் பெயரென்னலுமாம்" எனவும் கூறுகிறார். அவர் விரிக்கும், தத்துவப் பொருள் விளக்கம் நுண்மையானதுதான். குகத்தலமாகிய கதிர்காமத்துக்கு அமைவானதுதான்.

மகாவித்வான் அவர்களின் விளக்கத்தை அனுசரித்து, பின்னாளில் அவர் சொல்லியவாறு சொல்லாமல், இப்பொருள்பட, தம் கருத்துப் போன்றே, பலரும் தமது நூல்களில் சொல்லி வைத்துள்ளனர். ஆயினும், 'கதிர்காமம்' தமிழ்ச்சொல் என்பது அறிஞர் பலரும் பெரும்பாலும் வலியுறுத்திய ஒன்று என்பது உறுதி.

**மெய் விரிபொருள்**

மகாவித்வான் கதிர்காமத்தின்மீது 'கதிர்காம மான்மியம்', 'கதிர்காமப் புராணம்', 'கதிர்காமக் கோவை' ஆகிய நூல்களை எழுதியவர். 'சுப்ரமணிய பராக்கிரமம்' (1906) எனும் நூலில் கதிர்காமம் குறித்து பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். மேலும் 'கதிர்காமக் கலம்பகம்', 'கதிர் காமத் திருப்புகழ்' ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர். அவர், ***கந்தப்ப சுவாமி***கள் எழுதிய 'கதிர்காமக் கலம்பகம்' எனும் நூலைப் பரிசோதித்து எழுதும் முகவுரையில், கதிர்காமம் குறித்து எழுதும் வியாசம் வருமாறு.

> "அநாதிமல முத்தராய், ஆதிமத்தியாந்த சமானாதிக நாமரூப குணரகிதராய், சர்வஞ்ஞ சர்வகர்த்தத்துவ சர்வாநுக்கிரக அதிபரமாப்தபதியாய், விளங்காநின்ற சிவகுகக் கடவுள், நல்லசுரர்மேற் குழைந்து, வல்லசுரரைக் களைந்து, தொல்பதத் திருத்துவான் திருவுளங் கொண்டு, படையுடனடந்து உவகையோடுந் தங்கி யருளிய பாடி வீடான ஏமகூடம் எனப் பகர்தற்கிலக்காய் நிற்பதும், அடைந்தவரது மாசுகளைத் துடைத்துத் தூய்மை செய்யும் மாணிக்க கங்கை என்னும் மகா நதியினையும், சோதி வடிவமாயுள்ள திருக்கோயிலையும், கதிரைமலை முதலிய பர்வதங்களையும் கொண்டிருப்பதும், அரிபிரமேந்திராதி யமரர்களானும், அகத்தியாதி முனிவர்களானும் பூசிக்கப்பட்டதும், கண்டியிலிருந்து அரசாண்ட பாலசிங்க மன்னனின் தந்தையும், சோழராசாவின் மருகனுமாகிய நாரசிங்க நரேந்திரன் வசித்து வழிபட, அவற்கிட்ட சித்தியை அளித்த தானமாயுள்ளதும் சிவசுப்பிரமணியக் கடவுளின் திருவருட் பெருஞ் செல்வராகிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளால் திருப்புகழ் புனையப்பெற்றதும், குன்றுதோறாடற்பதிகளுள் ஒன்றாய் மகாமகிமையுற்றதும், பாபயுகமாகிய இக் கலிகாலத்தும் மெய்யன்பர் பொருட்டாகப் பற்பல திவ்வியாற்புதங்கள் நிகழப் பெறுவதும், மாண்பினையுடைய மேருகிரியின் பொற்சிகரம் பொருந்தப் பெற்றமையால் 'பொன்னகரம்', 'ஈழம்' எனச் சிறப்புப் பெயர்களை வகித்த பல்வளம் படைத்த இலங்கைத் தேசத்திலே, தக்கிண பாகாந்தத்திலே, 'மகேந்திரக் கடல்' என வழங்குஞ் சமுத்திர சமீபத்திலே இலங்குவதுமாகிய திருக்கதிர்காம ஷேத்திரம்"

மேற்குறித்த வியாசத்தை, சைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் கருத்துநிலை நின்று துணியும்போது, கதிர்காமமானது, சைவத் தமிழரது பூர்வீக வழிபாட்டுத் தலமும் வாழ்விடமும் என்பது, சைவமறுமலர்ச்சியின் சார்பெடுத்து நின்ற, அக்கருத்துநிலையைச் சார்ந்து நின்ற, மகாவித்வான் கூறுவது வியப்பில்லை என்றே தோன்றுகின்றது.

**நிறைவாக**

ஊர்ப் பெயர் ஒன்று, கால ஓட்டத்தாலும் கருத்தியல்சார் நிலைப்பாட்டாலும், பல்வேறு அர்த்தப்படுத்தல்களுக்கு உட்படுவது இயல்பானது. அது இடப்பெயர் குறித்த வாசிப்பு அரசியலைச் சார்ந்தது. கதிர்காமமும் அதற்கு விலக்கல்ல. எனினும், கதிரை, கதிர்காமம் என்பன தமிழ்ப் பெயர்கள்தாம் என்பதை, வரலாற்று நோக்கில், அழுத்திக் கூறுவதிலும் தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை.

பெரும்பாலான சனிக்கிழமைகள் இப்படியே விடிகின்றன என எனக்கு நானே சொன்னவனாக படிக்கட்டுகளைக் கடந்து கொண்டிருந்தேன். பனிமூட்டம் இன்னும் விலகவில்லை. பெரிய மூச்சொன்று எடுத்து கடலில் சாகசம் காட்டும் ஆமைகளைப் போல நீண்ட சுவாசம் செய்து, வாய்வழியே பனியை புகையாக வெளிவிட்டேன். நிலத்தை, மரங்களை தெளிவாக பார்க்க முடியாதபடி பனிமூட்டம் மறைத்து நின்றது. படிகளில் இரண்டு மூன்று படிகளுக்கு மேல் கண்ணுக்குத் தெரியவில்லை. பல் நடுக்கமெல்லாம் நின்று நெடு நேரமாகியும் குளிர் விட்டுப் போகவில்லை.

மேலிருந்து கீழே இறங்க முந்நூறிற்கும் மேல் படிகளை கடக்க வேண்டும். இதன் வழியாகச் சென்று விடுதியை அடைவதுகூட ஒரு வித அழகிய மலையேற்றமாகவே இருக்கும். இந்தக் ஹந்தானை மலையின் ஏற்றத்தில் இந்த விடுதியை அமைத்தவர்களும் இதனை அறிவார்கள்.

விடிகாலையில் எழுந்துவிட்டால் அன்றைய நாள்பூராகவும் நன்றாக அமையும் என்பதால் இந்தக் குளிரிலும் காலை ஏழு மணிக்கு வகுப்பு எடுப்பதற்கு சம்மதித்து விட்டேன். புதிய இடம், புதிய மனிதர்கள் என்று ஒதுங்கி நின்றுவிடாமல் பழகிப் பார்ப்பதில் பெரும் ஆர்வம் எனக்கு. அதிலும் ஓர் ஆசிரியராகப் பழகுவதில் தனி அனுபவம் உள்ளது. கற்றுக்கொண்டிருப்பவற்றை மீட்டிப் பார்க்கிறேன் என்பது ஒருபுறமிருக்க என்னால் சிலராவது நன்மையடைகிறார்களே என்ற திருப்தி எனக்கு. சில்லறையாக வருமானம் வரும் என்ற எண்ணத்தைவிட காலை நேரத்தை சிறப்பாகத் தொடக்குவது, மாணவர்களுக்கு வகுப்பெடுப்பது என்ற எண்ணங்கள் குளிருக்கு இழுத்துப் போர்த்துக்கொண்டு தூங்கவில்லையே என்ற கவலையையே மறக்கடிக்கச் செய்துவிடுவன. அதனால் என்னவோ கண்டியின் குளிர்க்காற்றுக்கூட மாணவர்களின் அழைப்பு ஓசையாகவே இருக்கும்.

முதல் வரிசையில் இரண்டு படிகள் மீதம் இருக்க அப்படியில் யாரோ வருவது தெரிந்தது. இவ்வளவு நேரத்தோடு விடுதிக்கு வருவது யாராக இருக்கும் என எண்ணியவாறு அருகில் செல்ல, அது நம்ம லசந்த ஐயா என்று அறிந்து கொண்டு, “சுப உதேசனக் வேவா” என்றேன். அவரும் “சுப உதேசனக் வேவா, மம யனவா” என்றவாறு படிகளை எண்ண ஆரம்பித்தார். எப்போதும் சிரித்த முகத்துடனும் உள்ளார்ந்த விருப்புடனுமே வணக்கம் சொல்வேன். ஆனால், இன்று அப்படியல்ல. ஏதோ சொல்வதற்காகவே சொன்னேன். நேற்றைய சம்பவத்திற்கு பிறகு பழையபோல சிரித்துப் பேச எனக்கு மனமிருக்கவில்லை. அவர்

## சிறுகதை



# வீசப்பட்டவை


யே. கிறித்துறாஜா
நிறைவு வருட மாணவன்,
தமிழ்த்துறை,
பேராதனைப்பல்கலைக்கழகம்.

தனது வேலையைப் பார்க்க வந்திருக்கிறார், நான் என் வேலையைப் பார்க்க நடக்கிறேன். ஆனாலும் அவரது நினைப்பு இன்னும் மனதைவிட்டு நீங்கியபாடில்லை.

இந்த விடுதியிலேயே மூன்று வகையான வர்களுக்கே அதிகாலையில் வேலை இருக்கும். ஒன்று, மாணவர்கள் எழுந்திருக்கும் முன்னர் காலை உணவைத் தயார் செய்யவேண்டிய நிலையில் உள்ள சிற்றுண்டிச்சாலை வேலை யாட்கள், இரண்டாவது ஒவ்வொரு மாடி யிலும் சேர்ந்துள்ள குப்பைகளை அகற்றி குளியலறையைச் சுத்தம் செய்ய வேண்டிய சுத்திகரிப்பு தொழிலாளர்கள். மற்றது வார இறுதிவகுப்புக்களை எடுக்க தூர இடங்களுக்குச் செல்லவேண்டியுள்ள மாணவர்கள்.

லசந்த ஐயா எங்கள் மாடிக்குப் பொறுப்பான சுத்திகரிப்புத் தொழிலாளி. எனக்குத் தெரிந்து இரண்டு வருடங்களாக இவ்விடுதியில் வேலை செய்கின்றார். விடுதிக்கு வந்த புதிதில் இவரைக் காணும் போதெல்லாம் ஏதாவது பேச வேண்டும் என்று எண்ணுவேன். ஆனால், மொழிப் பிரச்சனைதான் பெரும் பிரச்சினையாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாகச் சிங்கள மொழியை பழகிக்கொண்டு அவரிடம் முதல் கேட்டது அவரது பெயரைத் தான். அதிலும் அந்த ‘ந்த’ ஒலியை உச்சரித்துக் காட்டி, அவரே தன் பெயர் சரி என்று கூறுமளவு பயிற்சி எடுத்துக் கொண்டேன். குளியலறையில் அதிகமானவர்கள் குட் மார்னிங் என்ற வார்த்தையுடன் உரையாடலை ஆரம்பிக்காவிடினும் லசந்த ஐயா எப்போதும் தனது உரையாடலை குட் மார்னிங் உடனே ஆரம்பிப்பார்.

ஐந்நூற்றிற்கு மேற்பட்ட மாணவர்கள் தங்கக்கூடிய விடுதியில் கிட்டத்தட்ட நூற் றைம்பது அறைகள், எட்டு குளியலறைகள் உள்ளன. குளியலறை என்ற உடனேயே இங்குள்ள புதினங்களையும் கூறவேண்டும் எனத் தோன்றுகிறது. மார்பிள் பதித்த குளியலறை என்பதை விட்டுவிடலாம். ஒரு குளியலறைக்கு நான்கு தூறல் நீர்தரு குழாய்கள் இருக்கும், அதில் ஒன்றுதான் சரியாக வேலை செய்யும். மற்றைய மூன்றும் தூறல் முறையில் வேலை செய்யாதவை. இதைவிட பாதிமுகம் விளங்காதபடிக்கு காணப்படும் கண்ணாடிகள், வெற்றிலை சாயங்களால் அலங்கரிக்கப்பட்ட கழிவறைகள், வாந்திகளால் நிறமூட்டப்பட்ட வேசன்கள், நீர் ஊற்றப்படாத கழிவறைக் குழிகள், நுரைகளை ஏந்திக் கொள்ளும் குளியலறை மறைப்புகள், நீர் செல்லும் வழி அடைத்துவிட்டால் பாதம்வரை தேங்கி நிற்கும் தண்ணீர், வெள்ளை மார்பிளை அழுக்கேற்றும் செருப்புகளின் ஊத்தை என குளியலறை தனக்கேயான அம்சங்களுடன் விளங்கும்.

இப்படியாக விளங்கும் குளியலறையை பழையபடி பாவனைக்கு ஏற்றவாறாக செய்வது அனைவராலும் செய்ய முடியாத செயல். அதனால் தினமும் இவ்விடத்தைப் புதிதாக மாற்றும் கைவண்ணம் தெரிந்த லசந்த ஐய்யாவும் எனக்கு வியப்பாகவே தெரிந்தார்.

விடுதி எங்கும் குரங்குகளும் நாய்களும் சிறுநீர் கழித்து செல்லும் இடங்கள், நீளமான அந்த முற்றம் என அனைத்து இடங்களிலும் இவர்களது கைவண்ணம் இருக்கும். இவற்றிற்கு மேலாக காற்றுக்கு கீழே விழுந்து கிடக்கும் உடைகளை சேகரித்து வைத்தல், குப்பைத்தொட்டிகள் இருந்தும் அறையின் வெளிப்புறத்தால் வீசப்படும் குப்பைகளை பொறுக்கி எடுத்தல் என இன்னும் சில வேலைகளும் அவர்களுக்காக இருந்தன. நான் லசந்த ஐய்யாவின் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தேன். ஒரு தொழிலாளி என்பதை தாண்டி ஒரு மனிதராக அவரை எனக்குப் பிடிக்கும். ஆனாலும் நேற்றைக்கு அந்தக் கதை ஏற்பட்டபோது அவர் செய்திருக்கலாம் என்று தீர்க்கமாகச் சொன்னவர்களில் நானும் ஒருவன்.

பலகாலமாக சில நாய்களின் நடமாட்டம் விடுதியில் உண்டு. கட்டக்காலி நாய்களின் தொல்லை என்று கூறமுடியாது. மூன்று நான்கு நாய்களின் நடமாட்டமே இருக்கும். குறிப்பாக இங்கு இருக்கின்ற நாய்கள் அனைத்தும் ஆண் நாய்கள்தான். ஆண்கள் விடுதி என்ற காரணத்தினால் ஆண் நாய்கள் மட்டும் காவலுக்கு இருக்கின்றனவோ தெரிய வில்லை. இந்த நாய்களின் வேலையே விடுதியின் வெளிப்புறங்களில் அல்லது சிற்றுண்டிச்சாலையின் முன்புறங்களில் குரங்குகள் வராமல் பார்த்துக்கொள்ளுவதுதான். கூட்டமாக வரும் குரங்குகளை தனி ஒரு சிங்கமாக எதிர்ப்பதுபோல வீறுட்டு நிற்கும் நாய்களை நான் கண்டுள்ளேன்.

விடுதியின் பொது அறைகளின் மேசைகளை தங்கள் படுக்கையாக்குவதையும், உடல் துர் நாற்றத்தைத் தருமளவு நிலத்தில் புரண்டு



**அதற்கு யாரும் பெயர் வைத்ததாகத் தெரியவில்லை. கழுத்து இறுக்கப்பட்டு கொல்லப்பட்ட நிலையில்தான் கிடந்தது...**

கிடப்பதையும், தாங்கள் நினைத்த இடங்களில் எல்லாம் சிறுநீர் கழிப்பதும் மலம் கழிப்பதையும் தவிர இவை மாணவர்களுக்குத் தொல்லையாக இருப்பதில்லை. சிற்றுண்டிச்சாலையில் அதிக கவனிப்புக்கு உரியனவாக இருக்கும். இறைச்சி, மீன் சாப்பாடு என்றால் மோப்பம் பிடித்து கிட்டவந்து தனக்கு தராவிடில் போகமாட்டேன் என்ற தொனியில் சத்தம் செய்யும். மாணவர்களைவிட லசந்த ஐயா போன்ற தொழிலாளர்களுக்கு இவற்றின் மீது பரிவு அதிகம். ஒவ்வொரு மேசையிலும் காணப்படும் இறைச்சி எலும்பு, மீன் முள்ளு என்பவற்றை சேர்த்து இந்நாய்களுக்கு இடுவதே இவர்களின் ஒருபகுதி வேலையாக இருக்கும். அப்படி நாய்கள் மீது அன்பு செலுத்துகின்ற இத்தொழிலாளர்களால் எப்படி அப்படி ஒரு செயலைச் செய்யமுடியும் என்ற சந்தேகம் இருந்தாலும், அவர்கள் செய்திருப்பார்கள் என்ற மற்றைய மாணவர்களின் கருத்துக்கு ஆமாம் சொன்னவனும் நான்தான்.


நேற்று வெள்ளிக்கிழமை. முருகக் கடவுளிடம் வேண்டுதலுக்காக நண்பர்கள் சிலர் சென்றுவிட்டனர். விரிவுரைகளுக்காக புறப் பட்டவர்களோடு நானும் இணைந்து கொண்டேன். எட்டு மணிக்கு இன்னும் பத்து நிமிடங்களே உள்ள நிலையில் சாப்பிடுவதற்கான எண்ணம் யாரிடமும் காணப்படவில்லை. கடைசிப்படியின் இறுதிக்கட்டத்தை அடையும்போதுதான் அந்த இரத்தம் தோய்ந்த உடலைக் கண்டோம். அடிக்கடி எங்கள் தளத்தின் முற்றங்களில் ஓடித்திரியும் வெள்ளையும் மண்ணிறமும் கலந்த நிறமுடைய நாய். அதற்கு யாரும் பெயர் வைத்ததாகத் தெரியவில்லை. கழுத்து இறுக்கப்பட்டு கொல்லப்பட்ட நிலையில்தான் கிடந்தது. வாய்வழி மட்டுமே இரத்தம் கசிந்திருந்தது. பார்க்க மனமில்லாத தன்மை ஒரு பக்கம், விரிவுரைக்கு நேரமாகுவது ஒரு பக்கம் என அவ்விடத்தை விட்டு வந்துவிட்டோம்.

படிகளில் வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் அந்த நாய் பற்றிய ஒவ்வொரு கதை வந்து போனது. இறுதியாக அது இறப்பதற்கு காரணம் யாராக இருக்கும் என்ற வினா வந்த போது "அந்த கிளீனிங் பண்ணுற அண்ணாக்கள்தான் யார் சரி செய்திருக்கணும்" என்ற பதிலொன்று இடம்பெறும்போது "ஓம், இருக்கலாம்" என்று எனது கருத்தையும் பதிவிட்டேன்.

அதனால்தான் இன்று அவரைக் காணும் போது உள்ளார்ந்த மகிழ்வோடு வணக்கம் சொல்ல முடியவில்லை. அவரது வேலை என்னவோ அவர் அதைப் பார்க்கப் போகி றார். என்வேலை என்னவோ அதை நான் பார்க்கப்போகிறேன் என்றபடி எனது பயணத் தைத் தொடர்ந்தேன்.

சனிக்கிழமைகளின் காலைப்பொழுது அப்படியிருக்க மாலைப்பொழுது இன்னொரு விதமாக இருக்கும். மூன்று மணிக்கெல்லாம் விடுதியை அடைந்துவிட்டேன். ஒரு கிழமை யாகத் தேங்கிக் கிடந்த உடுப்புகளோடு குளியலறைக்கு வந்தேன். உடுப்பு துவைக்கும் இடத்தில் எனது வேலையை ஆரம்பிக்கும் போதுதான் பார்த்தேன் அங்கே லசந்த ஐயா. ஏற்கனவே குளியலறையை சுத்தம் செய்துவிட்டு தேங்கி நின்ற நீரை துடைப்பத்தை பயன்படுத்தி இன்னொரு இடத்துக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். பல இடங்களில் காணப்பட்ட நீரை கோலிக்கோலி அனுப்பிய அவரது கைகளின் இயக்கம் ஒரு கணம் நின்றது. நானும் கூர்ந்து கவனித்தேன். துடைப்பத்தின் அடிப்பகுதியை மேலுயர்த்தி தன் மறுகரத்துக்கு கிட்டே கொண்டுவந்தார். என்னவாக இருக்கும் என்று நானும் பார்த்துக்கொண்டிருந்தேன். துடைப்பத்தின் மீது ஓர் எறும்பு இருந்தது. லசந்த ஐயா அதை தன் கைகளில் ஏந்தி யன்னலுக்கு அந்தப்புறமாக விட்டுவிட்டு மீண்டும் பழையபடி வேலையை ஆரம்பித்தார். வெளியில் விடப்பட்டது எறும்பு மாத்திரமல்ல நான் கொண்டிருந்த தவறாக எண்ணங்களும்தான்.

# உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்




## மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் தம் போராட்டப் பதிவுகளும் சில எண்ணங்களும்



கலாபூஷணம் 'மொழிவரதன்'

மலையக மக்களின் வரலாறு என்பது போராட்டமிக்க ஒன்றாகவே உள்ளது. தென் இந்திய மண்ணிலிருந்து அவர்கள் ஏஜன்டுகள், தரகர்கள் எனப்படும் கங்காணிகள் ஊடாக அழைத்து வரப்பட்ட முதல் இன்றுவரை அது அப்படியேதான் தொடர்கின்றது. ஆனால், வாழ்வுக்கான அவர்களின் போராட்டம் காலத்துக்கு காலம் மாறி வந்துள்ளதே தவிர உழைப்புக்கான இன்றைய ஊதிய போராட்டம்வரை அப்போராட்டம் தொடர்கின்றது.

இப்பின்னணியில் வாழ்வுக்காக போராட்ட உயிர்த் தியாகம் செய்தவர்களின் வரலாறுகள் பதியப்படல் வேண்டும் என்பதனை 1990களிலே தீர்க்கதரிசனமாக உணர்ந்து, சம்பவ இடங்களுக்கு சென்று நேரில் அவர்களை கண்டு கதைத்து தகவல்களை திரட்டி தொகுத்தளித்துள்ள ***மாத்தளை ரோகிணி*** எனப்படும் ***தவசிதேவர் அய்யாத்துரை*** பாராட்டுக்குரியவர் எனலாம். அவரது உழைப்பு இன்று வீண் போகவில்லை எனலாம்.

***முல்லோயா கோவிந்தன்*** முதல் இன்றைய ***டெவன் சிவனு லெட்சுமணன்*** வரை இவ்வரலாறு பேசப்படுகின்றது.

***உரிமைப் பேராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்*** - அத்தொகுப்பை வாசிக்கும் வேளையிலும் தொடர்ந்து இன்றைய காலம்வரை தொடரும் எமது இந்த வரலாறு பற்றி ஆராயும்போது ஒரு வகையான விடயங்களே மாறி மாறி தொடர்கின்றன எனலாம். அவைகளை பின்வருமாறு வரிசைப்படுத்தி, வகைப்படுத்தி சுருக்கமாக பார்க்கலாம்.

1. இந்த இந்திய வம்சாவழி மலையக மக்களின் இருப்பை இல்லாமலாக்குவதற்கான நடவடிக்கைகள் இந்த மண்ணுக்கும் மக்களுக்குமான தொடர்பு ஏதுமற்றவர்களாக மாற்றுவதில் அரசுகள், கம்பனிகள், தனிநபர்களின் நடவடிக்கைகள்.

2. தொழிற்சங்கங்களை தோட்டங்களில் அமைப்பதில் அன்றைய சூழ்நிலை இன்று மாற்றம் அடைந்து இருந்தாலும் அவைகள் ஆரோக்கியமாக இயங்க முடியாத நிலைமைகளே மலையகப் பிரதேசங்களில் இன்று காணப்படுகின்றன.

3. தொழிலாளர்களின் பிரச்சினைகள் அப்படியேதான் தொடர்கின்றன. சம்பள, ஊதிய பிரச்சினை, சுகாதார பிரச்சினைகள் - போஷாக்கின்மை, மலசலகூடம் இன்மை இருந்தாலும் அவைகள் முறையாக பேணப்படாமை, தண்ணீர், போக்குவரத்து, கல்வி, தேயிலை மலைகள் முறையாக பராமரிக்கப்படாமை, வாழ்வதற்கான வீடுகள், 'லயன்' முறைகளைத் தாண்டி ஒரு பாய்ச்சல் ரீதியாக தனி வீடுகளாக உருவாக்கப்படாமை இப்படி அன்று முதல் இன்று (2025) வரை தொடர்கின்றன.

4. தொழிலாளர்களை, தொழிற்சங்கங்களை பிரித்தாழும் அதே முறையே இன்று தொடர்கின்றது எனலாம். இவைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் தொழிற்சங்க போட்டிகள் இன்றும் இல்லாமல் இல்லை. குறிப்பாக, சம்பள உயர்வு விடயங்களில் இத்தொழிற்சங்க செயற்பாடுகளை பார்க்கலாம்.

5. காடையர்களை அரசு, தனியார்கள், தனி நபர்களான முதலாளிகள் பயன்படுத்தி காவல் துறையின் உதவியுடன் தாக்குதல்களை மேற்கொள்ளல் இன்று குறைந்துள்ளதாய் நினைத்தாலும், தென் மாகாணங்களிலும் சப்ரகமுவ மாகாணத்திலும் மத்திய மலைநாட்டின் கண்டி, மாத்தளை மாவட்டங்களில் இவ்விடயம் இல்லாமல் இல்லை. ஊவா, மத்திய மாகாணங்களில் மலையகத் தமிழர்கள் செறிந்து வாழ்வதாலும் அரசியல், தொழிற்சங்க செயற்பாடுகள் சற்று பலமாக இருப்பதாலும் குறைவாக காணப்படுகின்றது எனலாம்.

6. எம்மை இந்திய வம்சாவளி மலையக மக்களை இன்றுவரை ஒரு தேசிய இனமாகவோ, முறையான இந்நாட்டு பிரஜையாகவோ ஏற்றிடவில்லை எனலாம். பிரஜா உரிமை கிடைத்துள்ளது என்று நியாயங்கள் கூறினாலும் நில, காணி உரிமை இந்நாட்டின் ஏனைய பிரஜைகளாக சிங்கள, முஸ்லிம் இலங்கைத் தமிழர்களுக்கு உரியவை இன்றுவரை (2025) இல்லை. இன்றைய தேசிய மக்கள் சக்தியும் இதுவரை ஆக்கபூர்வமானதாக இவ்விடயத்தில் எதனையும் செய்யவில்லை.

1948ஆம் ஆண்டு பிரஜா உரிமைச்சட்டம் இந்திய வம்சாவளி மலையக மக்களின் பிரஜா உரிமையினை பறித்தது. 1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள சட்டம் தேசிய ரீதியாக தமிழர்களையும் மலையக மக்களையும் மொழி ரீதியாக பாதித்தது.

1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு, அதன் பின்னரான குடியரசு யாப்பு 1972 காணி அமைச்சராக இருந்த றெக்டர் கொப்பேகடுவயின் தேயிலை தோட்டங்களை தேசியமயமாக்கல் எனும் காணி சீர்திருத்தச்சட்டம், 1964ஆம் ஆண்டு ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம், அதன்பின்னரான இலங்கை இந்திய அரசுகளின் இந்திய வம்சாவளி தோட்டத்தொழிலாளர்களில் இலங்கை - இந்திய பிரஜா உரிமை பெறாதவர்கள் தொடர்பான 'பங்கீடு' பயங்கரவாத தடைச்சட்டம் என்றவாறு சட்டங்கள் இம்மலையக மக்களுக்கு பாதகமானதாகவே உள்ளன. மேலும், உள்நாட்டு வன்செயல்கள் 1983ஆம் ஆண்டு அதிஉச்சமான இனக்கொலைகள், சொத்து இழப்புக்கள் இம்மக்கள் வாழ்வுக்கான போராட்டமாகவே பரிணமித்துள்ளது எனில் தவறில்லை.

தொடர்ந்தும் டெல்டா, சங்குவாரி தோட்ட மக்கள் மீதான தாக்குதல்கள், எரிக்கப்படாத நுவரெலியாவை எரித்திட ஆவன செய்து ஹெலிகொப்டரில் பறந்து சென்ற எரி மந்திரியின் செயற்பாடுகள் யாவும் இம்மக்களின் போராட்டமிக்க செயற்பாடுகளினாலே வென்றெடுக்கப்பட்டுள்ளது எனலாம்.

மலையக உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள் நூலில் இதுவரை இடம்பெறாத தியாகிகளின் விபரங்களையும் தொகுத்து இதன் **இரண்டாவது பதிப்பை ஆர். ராஜாராம்** அவர்கள் வெளியிட உள்ளமை பாராட்டத்தக்கதே.

○○○

# நாம் தமிழர்

**– ஜின்னாஹ்**

**பூவுலகில் எங்குநாம் வாழ்ந்திட் டாலும்**
**பிறந்தமண்ணின் பற்றற்று வாழ மாட்டோம்**
**நாவினிக்கும் தமிழமுதைத் துறக்க மாட்டோம்**
**நற்றமிழன் பண்பாட்டை அழிக்க மாட்டோம்**

**செந்தமிழன் பண்பாடு கலாசா ரத்தைத்**
**தாழ்ந்திடச்செய் பழிதமிழர் பேரில் தோன்றா**
**புந்தியுள்ளோர் போற்றுகின்ற பற்று கின்ற**
**பண்பாடு கலாசாரம் தமிழர் சொத்து.**

# காத்தான்குடி முஸ்லிம்களின் இருப்பியல்

## - வரலாற்றுப் பார்வை

முஃ. லஃ. லத்பான் றோஸின்
(மாணவன் - அரசறிவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்)



மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கு மாகாணத்தில் மத்திய பகுதியில் அமைந்துள்ளது. இம் மாவட்டத்தின் விசாலம் 2633.10 சதுர கிலோமீற்றர்களாகும். எல்லைகளாக வடக்கே வெருகல் ஆறும், திருகோணமலை மாவட்டமும் தெற்கு அம்பாரை மாவட்டம், கிழக்கில் வங்காளவிரிகுடாவும் மேற்கே பொலனறுவை மாவட்டமும் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதானமாக முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களாக, காத்தான் குடி, காங்கேயனோடை, பாலமுனை, மண் முனை, ஒல்லிக்குளம், கீச்சான்பள்ளம், சிகரம், பூநொச்சிமுனை, நொச்சிமுனை, ஏறாவூர் (மிச்நகர், சதாம் ஹுஸைன் கிராமம், உறு காமம்) வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீரா ஓடை, மாவடிச்சேனை, செம்மண்னோடை, மாஞ்சோலை, காவத்த முனை, பாலைக்காடு, தியாவெட்டான், ஹிஜ்ரா நகர் போன்றவை திகழ்கின்றன.

மேற்படி கிராமங்களில் இன்றுவரை அளவிட முடியாத வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அடைந்து வரும் நகரமாக காத்தான்குடி திகழ் கிறது. அதேபோல் காத்தான்குடி என்பது தெற் காசியாவில் மிக நெருக்கமாக மக்கள் வாழ் கின்ற நகரம் என்பதுடன் ஏனைய முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களை விட பல வரலாற்று சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

காத்தான்குடி மக்களின் மொத்த சனத் தொகை 2012 படி 40356 ஆகும். இவர்கள் 18 கிராம சேவகர் பிரிவில் 2.56 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பையும், 1.33 சதுர கிலோமீட்டர் நீர்ப்பரப்பையும் கொண்டுள்ளது. இந்நீர்ப்பரப்பானது மொத்த மாவட்ட நீர்ப்பரப்பில் 0.15% சதவீதமாகும். இங்கு இரண்டு தேசிய பாடசாலைகளும், எழுபதிற்கும் அதிகமான பள்ளிவாசல்களும் காணப்படுகின்றன. பிரதேச எல்லைகளாக கிழக்கே வங்காள விரிகுடா (கடல்). தெற்கே மண்முனை பற்று பிரதேச செயலக பிரிவும் மேற்கே மட்டக்களப்பு வாவியும் அமையப்பெற்றுள்ளது.

இலங்கையில் எங்கும் இல்லாதவாறு முஸ்லிம்களுக்கென ஒரு புனித பிரதேசமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட இட மான முஹ்யித்தீன் மெத்தை பெரிய ஜும்மா பள்ளிவாயல் அமையப் பெற்றுள்ள பிரதேசமாக காத்தான்குடி திகழ்வதுடன் இங்கு உருவாக்கப்பட்டுள்ள ஹிஸ்புல்லாஹ் இஸ்லாமிய கலாசார மண்டபம் இலங்கையில் எந்த ஒரு முஸ்லிம் ஊரிலும் காணப்படாதவாறான ஒரு கலாசார மண்டபமாகும். மேலும் விசேடமாக காத்தான்குடியின் கடற்கரை என்பது அழகுற அமைவுற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான மக்களின் பொழுதுபோக்கு இடமாக திகழ்ந்து வருகின்றது.

மேலும் சில விடயங்கள் இங்கு குறிப் பிடப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் ஆகும். காத்தான்குடியில் ஒரு சினிமா தியேட்டர், வீடியோ கொட்டகையோ கிடையாது. கிளப் (Club) அல்லது லொட்டரி டிக்கெட் விற்பனை நிலையமோ, மதுபான கடையோ கிடையாது. அத்துடன் வெளியூரில் இருந்து வரும் பொது மக்களை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கும் விடயங்களாக காத்தான்குடியில் அமையப்பெற்றுள்ள தொல்லியல் நூதனசாலை மற்றும் மஸ்ஜித் அக்ஸா (முஹ்யித்தீன் ஜும்மா பள்ளிவாயல்) திகழ்ந்து வருகின்றன.

காத்தான்குடியே மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் மிக ஆதியில் குடியேறிய ஊராகும். முக்குரவர்களுக்கும் திமிலர்களுக்கும் இடையிலே இருந்து வந்த பகைக்கு முக்குரவர்கள் காத்தான்குடியில் இருந்த முஸ்லிம்களின் உதவியை பெற்று முடிவு கண்டனர்.

ஏறாவூரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மிக ஆதி குடியேற்றத்தை கொண்ட ஒரு முஸ்லிம் கிராமம் ஆகும். ஆயினும் திமிலர்களுடனான யுத்த வெற்றிக்குப் பிறகே முஸ்லிம்கள் ஏறாவூரில் குடியேறி வாழ அனுமதிக்கப்பட்டனர். ஏறாவூர் அல்-அஸ்ஹர் வித்யாலய வெள்ளிவிழா மலரில் ஏறாவூரின் வரலாறு எனும் கட்டுரையில் காத்தான்குடியில் குடியேறிய அராபிய குடிகளின் வழித்தோன்றல்களே மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களாவர் என குறிப்பிடப்பட்டிருப்பது ஏறாவூரில் குடியேறிய மக்கள் காத்தான்குடியில் இருந்து வந்து குடியேறியவர்களே என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இதே கருத்தையே வாழைச்சேனையில் குடியேறிய ஆதி முஸ்லிம்களைக் காத்தான்குடியுடன் தொடர்புபடுத்தி வை அகமது கூறுகிறார். இவ்வாறே ஓட்டமாவடி, மீராவோடை பிரதேசங்களிலும் ஆதியில் குடியேறிய முஸ்லிம்கள் காத்தான்குடியில் இருந்து சென்றவர்களே ஆகும்.

இவ்வாறே அம்பாறை மாவட்டத்திலும் பல முக்கிய முஸ்லிம் கிராமங்களில் குடியேறிய முஸ்லிம்கள் காத்தான்குடியில் இருந்து சென்றவர்களாக இருப்பதை காண முடிகின்றது. உதாரணமாக அம்பாறை மாவட்டத்தின் மிகப் பிரதானமானதும் ஆதியானதுமான முஸ்லிம் ஊர் சம்மாந்துறை ஆகும். இவ்வூரை சேர்ந்த அப்துல் காதிர் ஆலிம் (காஹிரி) அவர்கள் தனது தகப்பன் வழி பெயர் வரலாற்றை எழுதி இருக்கின்றார். அதன் படி அவரது தந்தையின் தலைமுறை 10 வரிசையினர் சம்மாந்துறையிலும் முந்திய எட்டு தலைமுறையினர் காத்தான்குடியிலும் குடிபதியாக வாழ்ந்ததாக குறிப்பிடுகின்றார். இவ்வாறு வரலாறு பதியப்படாதே எத்தனையோ குடும்பங்களின் மூதாதையர் இவ்வாறு காத்தான்குடியில் இருந்து சென்றிருக்க வேண்டும் என்பதனை இந்த வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. உதாரணத்துக்கு சேர்த்துக் கொள்ளக்கூடிய இன்னுமொரு சுவையான வரலாற்றுக் குறிப்பும் உண்டு.

பிரித்தானிய காலத்தில் அவர்கள் உருவாக்கிய சட்டசபையில் முஸ்லிம்கள் சார்பில் முதன் முதலில் நியமிக்கப்பட்டவர் காத்தான்குடியைச் சேர்ந்த மு.அ முகம்மது சரிப் அவர்களாகும். கொழும்பு முஸ்லிம்கள் இவரை இங்கிருந்து அழைத்துச் சென்று சட்டசபையில் முஸ்லிம்களுக்கான நியமன பிரதிநிதியாக ஆக்கி வைத்தனர். சரிப் அவர்கள் சட்டத்தரணி மாத்திரமல்ல கற்றறிந்த ஒரு ஆலிமும் ஆவார். கொழும்பு முஸ்லிம்கள் இவருக்கு கிராண்ட்பாசில் ஒரு வீட்டையும் போக்குவரத்துக்காக இரட்டைக் குதிரை வண்டியையும் வழங்கி இருந்தனர். ஆயினும் அவர் அங்கு இருக்க பிடிக்காமல் மீண்டும் காத்தான்குடிக்கு திரும்பிவிட்டார். இவர் தனது முதல் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு சம்மாந்துறையில் மறுமணம் செய்தார். (இவர் காத்தான்குடியில் வாழ்ந்த தெரு சரிப் புரக்டர் வீதி என்று இன்றும் அழைக்கப்படுகிறது) இந்த விடயத்தை இங்கு குறிப்பிடுவது காத்தான் குடிக்கும் சம்மாந்துறைக்கும் ஆரம் பத்திலிருந்தே நெருக்கமான உறவைக் காட்டுவதற்கே ஆகும்.

இன்னொரு உதாரணமாக பாலமுனையைக் குறிப்பிடலாம். பாலமுனையை பொறுத்தவரை இங்கு ஆரம்பத்தில் குடியேறியவர்கள் வியாபாரத்தின் பொருட்டு 16ஆம் நூற்றாண்டு அளவில் காத்தான்குடியில் இருந்து வந்த காட்டான் சாகிபு (கஹ்தான் சாகிபு) என்பவரும் அவரைச் சேர்ந்த முஸ்லிம்களுமே என அன்புடீன் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு காத்தான்குடியின் வடக்கிலும் தெற்கிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை

**காகம் பறக்காத ஊருமில்லை காத்தான்குடியான் இல்லாத ஊரும் இல்லை என்பது இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் அறிந்த ஒரு பழமொழியாகும்.**

மாவட்டத்திலும் உள்ள பிரபலமான முஸ்லிம் ஊர்கள் உருவாவதற்கு காரணமாக அமைந்த வர்கள் காத்தான்குடி முஸ்லிம்களே ஆகும்.

காகம் பறக்காத ஊருமில்லை காத்தான் குடியான் இல்லாத ஊரும் இல்லை என்பது இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் அனை வரும் அறிந்த ஒரு பழமொழியாகும். சந்திர மண்டலத்தில் நீல் ஆம்ஸ்ட்ரோங் முதன் முதலில் காலடி எடுத்து வைத்தபோது அங்கே ஒரு காத்தான்குடியான் ஏற்கனவே போய் ஹோட்டல் வைத்திருப்பதை கண்டார். என்பது நவீன கால ஜோக்காகும். இவ்வாறு இந்த நாட்டின் எந்த மூலையிலும் காத்தான்குடி மக்கள் பரவி கிடப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் காத்தான்குடி வியாபாரிகளும், உலமாக்களுமே ஆகும் இலங்கையில் உள்ள பெரும்பாலான பள்ளிவாயல்களின் வரலாற்றுடன் எப்படியும் காத்தான்குடி உலமாக்களில் ஒருவராவது தொடர்புபட்டிருப்பதனைக் காணலாம்.

இலங்கையின் சகல பகுதிகளிலும் காத்தான்குடி மக்கள் வியாபாரிகளாக நிலை நிறுத்திக் கொண்டாலும் மலைநாட்டு பகுதி இங்கு விசேடமாக குறிப்பிடப்பட வேண்டும். மலைநாட்டில் பதுளை, பண்டாரவளை, பசறை, வெலிமடை, லுனுகலை, மெதகம, கண்டி போன்ற சகல ஊர்களிலும் முஸ்லிம் வியாபாரிகள் நிறைந்து காணப்படுகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம் மிக ஆதியில் இருந்தே காத்தான்குடியில் தங்கியிருந்து மலை நாட்டுடன் வியாபாரத்தில் ஈடுபட்ட முஸ்லிம் வர்த்தகர்களும், பின்னர் காத்தான்குடியிலேயே நிலைபதியாகக் குடியிருந்த முஸ்லிம்களும் மலை நாட்டுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புகளே ஆகும். மலை நாட்டுடனான வர்த்தகத் தொடர்பு காத்தான்குடியில் இருந்து வர்த்தகப் பொருட்களுடன் சம்மாந்துறை சென்று அங்கிருந்து தாவளம் (தவாளம்) மற்றும் கூட்டுக்கரத்தைகளின் உதவியுடன் மலை பிரதேசங்களுக்குச் சென்று வியாபாரம் செய்வதிலிருந்து தொடங்குகின்றது. இவர்கள் பதியத்தலாவை ஊடாகவும் லுனுகலை, பதுளை முதலிய இடங்களுக்குச் சென்றும் வர்த்தகம் செய்தார்கள். (இங்கு ஆய்வாளர்களால் விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயம் ஒன்று உள்ளது ஆரம்ப காலத்தில் கண்டி மற்றும் மலைநாட்டுடனான வர்த்தகங்கள் சம்மாந்துறையில் இருந்து ஆரம்பித்து பல மார்க்கங்கள் ஊடாகச் சென்று செய்யப்பட்டன. ஆயினும் அராபியர்களுடன் சேர்ந்து அல்லது அவர்களைத் தொடர்ந்து இந்த வர்த்த கத்தில் ஈடுபட்ட உள்ளூர் வாசிகள் யார்? சம்மாந்துறை மக்களா? காத்தான் குடி மக்களா? நிச்சயமாக இவர்கள் காத்தான்குடி வாசிகளாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் கிழக்கு மாகாணத்தில் வாழும் ஏனைய பகுதி முஸ்லிம்களின் மூதாதையர்கள் வியாபாரிகளாக இருந்திருப்பார்களா என்ற சந்தேகம் இப்போதைய தலைமுறைகளைப் பார்க்கின்ற போது ஏற்படும்

## வளர்த்து விடுங்கள்

**இலக்கிய விருட்சங்களே**
**உங்கள் விழுதுகளாக இருக்க**
**விரும்புகிறோம்.**

**எழுத்தை ஆளும் பயணிகளே**
**எங்கள் விரல்களைப் பிடித்து**
**நடை பழக்குங்கள்.**

**நெற்றிக் கண்ணர்களே**
**உங்கள் பார்வையால்**
**எங்களை எரிக்காதீர்கள்.**
**தோள்களைத் தட்டி**
**தூக்கி விடுங்கள்.**

**இன்று**
**நாற்று மேடையில் வளரும்**
**சின்னப் பயிர்கள் நாங்கள்**
**எங்கள்மீது கருணை மழை**
**பொழியுங்கள்.**

**அறிவுரை உரமிட்டால்**
**ஆரோக்கியமாக வளர்வோம்**

**நாளை**
**நாங்களும் விருட்சமாகலாம்.**

**- கலாபூஷணம்**
**'தம்பிலுவில் ஜெகா'**

அதேநேரத்தில் காத்தான்குடி மக்களே அந்தப் பூர்வீக பெருமையைக் கோர சகல தகுதிகளும் படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர்.(History of Kattankudy An Introduction, 2004)

காத்தான்குடி பூர்வீக வரலாற்றை ஆராயும் போது பிரதானமாக இரண்டு விதமான கருத்துக்கள் காணப்படுகின்றன.

முதலாவது காத்தான் என்னும் பெயருடைய ஒரு வேடன் இப்பகுதியில் இருந்தான். இவனுடைய தொழில் மீன் பிடித்தலும், மிருக வேட்டையாடுதலுமேயாகும். அக்காலத்தில் இருந்த குடிசனங்களில் இவனே சற்று அதிகாரம் வாய்ந்தவன். இவன் வசித்திருந்த காலம் 1692ஆம் ஆண்டு. அதாவது கலியுகம் பிறந்து 4794ஆம் வருடத்தின் பின்னாகும். இவனது பரம்பரையினர் அக்காலத்தில் புத்தளப் பகுதியில் குடியிருந்த தென்னிந்தியராவர். இவன் வசித்திருந்த இடம் காத்தான்குடியெனும் கிராமத்தின் மத்திய பகுதியாகும். (கந்தையா, 1991:87) இந்த கருத்து பின்வரும் வரலாற்று சான்று மூலம் மறுக்கப்படுகிறது.

புத்தளத்திலிருந்து மட்டக்களப்பிற்கு கண்டிய அரசன் செனரத் (1602-1635) சுமார் நான்காயிரம் முஸ்லிம்களைக் குடியேற்றினான் என வரலாறு கூறுகின்றது. அவ்வாறு குடியேற்றம் செய்யப்பட்டவர்கள் அனைவரும் முஸ்லிம்கள் என தேவராஜா குறிப்பிடுகின்றார். (Dewaraja,1994 :127) இதன் அடிப்படையில் காத்தான் எனும் வேடன் குடியிருந்ததை வைத்து காத்தான்குடியின் வரலாற்றைக் கூற முனைவது ஒரு கற்பனைக் கதையேயாகும் என சிலர் கருதுகின்றனர். அவ்வாறே மட்டக்களப்பு முஸ்லிம்கள் குறித்த S.O. கனகரத்தினத்தின் கூற்றுக்கும், மட்டக்களப்பு மான்மியம் தரும் வரலாற்றுத் தகவல்களுக்கும் முற்றிலும் மாறுபட்டதொரு வரலாற்றுத் தகவலாகவே இத்தகவல் உள்ளது.

இரண்டாவது கூற்றின்படி காட்டான், பட்டாணி எனும் சொற்கள் கஹ்தானிகளை குறிப்பதாகக் கருதப்படுகிறது. (அப்துல்ஜவாத் 2004:39), கஹ்தானிகள் அறபு குலத்தினைச் சேர்ந்தவர்கள். குறிப்பாக யெமன் பகுதியினை சேர்ந்தவர்கள் என கருதப்படுகிறது. (அப்துல் ஜவாத் 2004:39) இந்த கஹ்தான் என்பதுதான் பின்னர் காத்தான்குடியாக மருவி வந்தது என இங்குள்ள செவிவழி ஆதாரங்கள் கூறுகின்றன. அதாவது முக்குவக் குலப்பெண்களை திருமணம் முடித்தவர்கள் அறபு வம்சாவளி கஹ்தான் என்ற யெமன் பிரதேசத்தைச் சேர்ந்த கோத்திரத்தையுடையவர்கள் எனவும், இதிலிருந்துதான் கஹ்தான்குடி என்ற சொல் பின்னர் தமிழ் மயப்பட்ட ஒரு சொல்லாக காத்தான்குடியாக மாற்றம்பெற்றது எனவும், இவ்வாறு வந்த அறபிகளே வாவிக்கரையோரமாக இப்போதுள்ள சின்னப் பள்ளிவாயலை அண்மித்த பகுதிகளில் ஆரம்பத்தில் குடியேறினர் எனவும் காத்தான்குடி வரலாறு குறிப்பிடுகின்றது. இந்த கருத்தை இப்பிரதேச மக்களின் முகத் தோற்றம், நிறம், உடல் அமைப்பு என்பவற்றை உடற்கூற்று மானிடவியலுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது ஓரளவு உறுதி செய்ய முடியும் எனக் குறிப்பிடுகின்றனர். இச்செவிவழி ஆதாரத்தைத் தவிர இத்தகவலை உறுதிப்படுத்தக்கூடிய வேறு வரலாற்று ஆதாரங்கள் எமக்குக்கிடைக்கவில்லை. 2000ஆம் ஆண்டுகளின் பின்னர்தான் கஹ்தான் என்ற சொற்பதம் வலுவடைந்ததை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் வரலாற்றை அறிந்து கொள்ள வாய்மொழிக்கதைகளையும் ஓர் ஆதாரமாகக் கொள்ள முடியும் என்ற அடிப் படையில் இப்பிரதேசத்தின் பூர்வீகம் பற்றி எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன இவ் வரலாற்றுத் தகவல் ஆய்வுக்காக இங்கு எடுத்துக்கொள்ளப்புட்டுள்ளது. இந்த கருத்தை மேலும் வலுவூட்டுவதாக எமன் தேசத்தை சேர்ந்த அப்துல் காதிர் பெரிய மௌலானா (ரஹ்) அப்துஸ் ஸமது மௌலானா (ரஹ்) வாஹித் மௌலானா (ரஹ்) ஆகியோர் இங்கு வசித்து மரணித்துள்ளமை அமைகிறது.

முன்னைய காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை பாரிய போராட்டமாக மாறுவதற்கு முன்பு காத்தான்குடி மக்களுக்கும் இப்பிரதேச தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவு மிகவும் அன்னியோன்யமானதாகவும் சுமூகமானதாகவுமே இருந்து வருகின்றது. குருக்கள் மடத்தில் காத்தான்குடி மக்கள் பெருந்தொகையாக கடத்திக் கொல்லப்பட்ட காத்தான்குடி மீரா ஜும்மா பள்ளி, ஹுஸைனியா தைக்கா ஆகிய பள்ளிகளில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களைத் தவிர ஏனைய காலங்களில் இந்த உறவு இன்றும் சுமுகமாகவே இருந்து வருகின்றது. பிரச்சனைக்குரிய காலம்வரை இப்பிரதேசத்தில் அனைத்து தமிழ் கிராமங்களிலும் காத்தான்குடி மக்கள் கடைகளை வைத்திருந்தமையும் அவர்கள் தமிழ் மக்களால்

கண்ணியமாகவும் அன்பாகவும் நடத்தப் பட்டதனை எவரும் மறந்துவிட முடியாது. அன்றுபோல் இன்றும் பல நூற்றுக்கணக்கான தமிழ் தொழிலாளர்கள் காத்தான்குடிக்குவந்து தொழில் செய்து திருப்புவதும் அவர்கள் அன்புடன் காத்தான்குடி மக்களால் நடத்தப் படுவதும் மனநிறைவு தரும் நிகழ்வுகள் ஆகும். *(Seyed Alavi Sheriffdeen, Kattankudy Mosque Killings Reliving Bloodshed & Trauma 27 Years)*

இவ்வாறு மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளை பரந்த அளவில் நாம் ஆராய்கின்ற போது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் இருப்பு இன்றுவரை தனித்துவமாக அடையாளப் படுத்துவதற்கு காத்தான்குடி முஸ்லிம் மக்களின் இருப்பியல் சான்றுகள் என்பன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன் றாக காணப்படுகின்றது.

### உசாத்துணைகள்


**அப்துல் ரவூப் ஏ.ஜே. (1987),** ஹமவோஸ்த், இஸ்லாமிய மெய்ஞ்ஞான பேரவை, காத்தான்குடி.

**அப்துல் ஜவாத் (2004),** காத்தான்குடி ஓர் அறிமுகம், காத்தான்குடி: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்.

**அப்துல் றஹீம் ஜெஸ்மில் (2020),** காத்தான்குடியின் வரலாறும் பண்பாடும் மதத் தூய்மைவாதத்தின் பின்புலம் கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

**அனஸ், எம்.எஸ்.எம். (2009),** புத்தளம் முஸ்லிம்களின் வரலாறும் வாழ்வியலும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

**அல்–மிஸ்காத் ஞான சஞ்சிகை (2002),** காத்தான்குடி: அகில இலங்கை ஸூபிஸ மெய்ஞ்ஞான பேரவை.

**கந்தையா, வி.சி. (1991),** மட்டக்களப்பு சைவக் கோவில்கள் –2, மட்டக்களப்பு: கூடல்.

**காலிதீன், கே. எம். எச். (1986),** இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, கொழும்பு: அகில இலங்கை கதீப்மார் சம்மேளனம்.

**குணபாலசிங்கம் த.(1993),** மட்டக்களப்பு மானிமியம், மட்டக்களப்பு: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்.

**மஜீத்ஏ. (1995),** மத்திய கிழக்கில் இருந்து மட்டக்களப்பு வரை, கல்முனை: குட்வின் ஒட்டோ அச்சகம்.

*Dewaraja, L. (1994), The Muslims of Sri Lanka: One Thousand Years of Ethnic Harmony, Colombo: Lanka Islamic Foundation.*

*History of Kattankudy An Introduction (2004), Federation of Mosque and Muslim Institutions, kattankudy.*

*Seyed Alavi Sheriffdeen, Kattankudy Mosque Killings Reliving Bloodshed & Trauma 27 Years, Available from: https://www.colombotelegraph.com/*


❍❍❍

# மாலை

கனகலிங்கத்தாருக்கு
விழா ஒவ்வொன்றிலும்
மாலை அணிய
நிறைய ஆசை

கல்யாண வீடென்றால்
தானே மணமகன்
சாமத்திய வீடென்றால்
தானே கன்னிப்பெண்
சாவு வீடென்றால்
தானே பிணமகன் என
ஆசை அவருக்கு..!

கனகலிங்கத்தார்
ஒரு நாள் இறந்து போனார்
இன்னும் அவர் பிணத்துக்கு
யாருமே மாலை போடவில்லை
பள்ளிக்கூட அதிபர் அப்பதான் வந்து
மௌன அஞ்சலி செய்தார்
மௌன அஞ்சலி செய்த அவர்
கனகலிங்கத்தாரின் மகனிடம் சொன்னார்
"நாளை பின்னேரம்
எங்கட பாடசாலையில் பரிசளிப்பு விழா
கனகலிங்கம் ஐயாவை
கௌரவ விருந்தினராக அழைக்க இருந்தோம்
ஆனால், இவர் இப்படி இறந்து கிடக்கிறாரே"
அதிபர் சொல்லி முடிப்பதற்குள்
கனகலிங்கத்தார் தன் இறப்பை மறந்து
உற்சாகமாய் எழுந்து
வாங்கிலிலே இருந்துகொண்டு சொன்னார்
"மகன், நாளையண்டைக்கு
என்னை அடக்கம் செய்யுங்கோ,
நாளை நான் ஒருக்கால்
பாடசாலை பரிசளிப்பு விழாவுக்கு
போயே ஆகனும்
வீணா ஏன் ஒரு மாலையை இழப்பான்"
என்று சொன்னார் என்றால் பாருங்கோவன்!


**கரிகாலன்**
**கிளிநொச்சி**

சிறுகதை



# அவளின் காத்திருப்பு...!



ஷெல்லிதாசன்

"இஞ்சேருங்கப்பா... இங்கை எனக்கு இரவிலை தனியா நிக்கப் பயமா இருக்கப்பா"

"பத்மா.. இப்ப என்னை என்ன செய்யச் சொல்லிறீர். ஒரு இரவுதானே சமாளியும். தம்பி பளையிலையிருந்து அவசரமா வந்து அம்மாவுக்கு சரியான சுகமில்லையெண்டு சொல்லி, என்னை உடனை வந்து பாக்கச் சொல்லீட்டுப் போனதை அறிஞ்சும் அடம்பிடிக்கிறீர். பின்னேரம் நாலு மணிக்கு பஸ் ஒண்டு இருக்குது. நான் போய் அம்மாவைப் பாத்திட்டு நாளை மத்தியானமே திரும்பிடுவன்"

"எனக்கெண்டா மனம் திக்குத்திக்கெண்டு அடிக்குது நீங்கள் இல்லாமல் தனிய நிக்க. உவங்கள் இந்தியன் ஆமிக்காறங்கள் துவக்குச் சனியனோடையும் விறைச்ச முகறக்கட்டையா தெருவிலை திரியிறவங்கள், ஆம்பிளையள் இல்லாத வீடெண்டு அறிஞ்சா சும்மா எண்டாலும் எட்டிப்பாத்து சேட்டைவிடாமல் போகமாட்டாங்கள்.. நாயள். அதுவும் உங்கடை மகன் செல்வன் இருக்கிறானே, அப்பா இல்லையெண்டா ஊரைக் கூட்டி அழுது குழறி வலிய அவங்களை அழைச்சிடுவான்"

"அப்ப நானொண்டு சொல்லட்டே... பெரியப்பர் வீட்டை நீர் போய் தம்பி சிவாவை ஒரு இரவுக்கு மாத்திரம் உமக்கு காவலுக்கு விடச்சொல்லி பெரியப்பரிட்டை கேளும். அவர் நிச்சயமா மறுக்கமாட்டார். தம்பி சிவாவும் உமக்கு உதவியெண்டா மறுக்காமல் வருவான்"

கணவன் சபேசன் சொன்னதை ஏற்றுக் கொண்ட பத்மா, கணவனை அனுப்பிய கையோடு செல்வனையும் தூக்கிக்கொண்டு பெரியப்பர் வீட்டுக்கு புறப்பட ஆயத்தமானாள்.

❍

பத்மாவின் வீடு சாவகச்சேரியில் பெருங்குளம் போகும் சந்தியின் பிரதான வீதியிலேயே அமைந்துள்ளது. இரவில் ஆங்காங்கே சிறு மின்குமிழ் விளக்குகள் கண்சிமிட்டிக்கொண்டிருக்கும். அவ்வழியாக இரவில் இந்திய இராணுவம் இடைசுகம் போய்வருவதுண்டு. சிலவேளைகளில் இரவு பகல் கேட்டுக் கேள்வியில்லாமல் வீடுகளுக்குள் புகுந்து தேடுதலென்ற போர்வையில் பெண்கள் தனியாக இருந்தால் தமது அடாவடித்தனங்களை அவர்கள் அரங்கேற்ற முயற்சிப்பதுண்டு. கேட்கப் பார்க்க ஆருண்டு. சட்டம் நீதியெல்லாம் அவர்களின் கையில். இந்த நிலையில் பத்மாவும் இரவில் வீட்டில் நிற்கப் பயப்படுவது நியாயமானதே.

❍

பெரியப்பர் வீடு மட்டுவில் விளைவேலி பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் இருந்த தென்னங்காணியில் இருந்தது. அந்த தென்னங்காணி தனியார் ஒருவருக்கு சொந்தமானது. இயக்கத்தால் அந்தக் காணி அவர்கள் அதிகாரத்தில் இருந்தபோது கையகப்படுத்தப்பட்டு, போரால் நிர்க்கதியான சிலருக்கு மூன்று பரப்புக் காணிவீதம் பிரித்து குடியிருப்பதற்காக வழங்கப்பட்டிருந்தன.

அதில் ஒரு துண்டுக் காணியை பத்மாவின் பெரியப்பாவான வைத்தியர் வேதமூர்த்தி பெற்று சிறு குடிசையொன்றும் அமைத்திருந்தார். அதே போன்று காணியைப் பெற்றவர்களும் ஆங்காங்கே குடிசைகளை அமைத்து குடும்பத்தினருடன் குடியிருந்து வந்தனர்.

வேதமூர்த்தி ஒரு கைதேர்ந்த ஆயுள்வேத வைத்தியருடன், முறிவு, காயங்களுக்கு மருந்து கட்டுவதுடன், சிறு பிள்ளைகளின் வியாதிகளுக்கும் பெயர்போன வைத்திய ராகும். அவர் பார்ப்பதற்கு ஒரு முனிவரைப் போலவே தென்படுவார். நீண்ட கருமையும், வெண்மையும் கலந்த தாடி, மீசையும், வெள்ளை அங்கவஸ்த்திரத்துடன் நெற்றி நிறைய விபூதி அணிந்து அழகான குங்குமத் திலகமுமிட்டு பார்ப்பவருக்கு மிக மரியாதைக் குரியவராகவும் இருந்தார். அவரது மனைவி பெயர் தங்கம்மா. மூத்த மகனின் பெயர் சிவா, இளையவள் உமா என இரு பிள்ளைகள். சிவா உயர்தரம் சித்தியடைந்து விஞ்ஞானப் பிரிவில் சேர்வதற்காக பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்து காத்திருந்ததுடன், தனது தந்தையின் வைத்தியத் தொழிலுக்கும் உதவியாக இருந்து வந்தான். இளையவள் உமா மட்டுவில் மகாவித்தியாலயத்தில் ஏ.எல். படித்துவருகிறாள். வைத்தியரைப் பொறுத்த வரையில் இயக்கத்துக்கும் முறிவு அடிபட்ட காயங்களுக்கு இரகசியமாக வைத்தியம் செய்வது வழக்கம்.

வைத்தியர் வேதமூர்த்தி தனது வீட்டோடு ஒரு பிள்ளையார் கோயிலை அமைத்திருந்தார். வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் அதில் பூசைகள் நடைபெறும். சுற்றாடலிலுள் சனங்கள் அங்கு வந்து வழிபடுவதுடன் ஏதாவது வருத்தம் வாதை வந்தால் வைத்தியரைக் கொண்டு மந்திரித்து விபூதி போட்டு பார்வை பார்த்து நூலும் கட்டிக்கொள்வர்.

ஆரம்பகாலத்தில் இந்திய இராணுவம் ஒரு சமாதானப் படையாகவே இலங்கைக்கு வந்தனர். அவர்கள் வரமுதல் திடீரென ஒருநாள் தமிழர் பகுதிகளின் பெரும் பெரும் விமானங்களில் ஆகாயத்தில் பறந்து, பறந்து ஆங்காங்கே உணவுப் பொதிகளை பலவற்றை வீசினர். இது சில நாட்கள் தொடர்ந்தது. பசி பட்டினிகளில் வாடிய மக்கள் "வாடிய பயிர் வான்மழை கண்டதுபோல்" மகிழ்ச்சி ஆரவாரம் செய்து, கூட்டங்கூட்டமாக சென்று உணவுப் பொதிகளை அள்ளியெடுத்துவந்து பசியாறியதுடன், விடுதலை வந்தது, சுதந்திரம் வந்தது, தமிழீழம் வரப்போகிறதென ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்தில் திளைத்தனர். அதன் பின் இலங்கைக் கடலூடாக பெரும் பெரும் கப்பல்களில் இந்திய இராணுவம் ஆயுதங்கள், கவசவாகனங்கள், றக்குகள் என வந்து குவிந்து தமிழர் பகுதிகள் எங்கும் இராணுவத்தளங்களமைத்து குடியேறினர். சாவகச்சேரிப்பகுதியிலும் பண்டித்தளைச்சி அம்மன் கோயிலடியில் பல ஏக்கர் காணிகளை கையகப்படுத்தி அங்கும் பாரிய இராணுவத் தளமென்று அமைக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஆயிரம் இராணுவத்தினர் அங்கு அமர்த்தப் பட்டனர். அந்த முகாமுக்கு பொறுப்பதிகாரியாக சரவணன் என்ற தமிழரே இருந்தார். ஆரம்பத்தில் சமாதானப்படையும், இயக்கமும் பரஸ்பர நட்புடன் பழகி வந்தனர். ஆனால் திடீரென இருபகுதியினரும் பூனையும், எலியுமென பகைவர்களாகி, அடிக்கடி மோதலில் ஈடுபட்டு "எண்ணைச் சட்டியிலிருந்து நெருப்புக்குள் வீழ்ந்த கதை"யாகி சமைச்சது பாதி, சாப்பிட்டது பாதியென அலைந்து அல்லாடி மக்கள் துவண்டுபோனது அன்றையகால அழிக்க முடியாத சோக வரலாறுகள்.

❍

பெரியப்பர் வீடு வந்து சேர்ந்த பத்மா, தான் வந்த விடயத்தை அவரிடம் சொன்னாள். ஆனால் பெரியப்பரோ, மனைவி தங்கம்மாவோ, சிவாவை அவளுடன் அனுப்ப மறுத்து, பத்மாவை இரவு தங்களுடன் தங்கி நின்றுவிட்டு, அடுத்த நாள் வீட்டுக்குச் செல்லும்படி கூறினர். ஆனால் தான் தங்கி நிற்கக்கூடிய ஆயத்தத்தில் வரவில்லை யெனவும், தனது கணவன் சபேசனுக்கும் அதுபற்றி கூறவில்லை யென்பதுடன்,

இரவில் வீட்டில் யாருமில்லையென அறிந் தால் களவெடுக்கும் கும்பல் தன்வீட்டிலும் நுழைந்து இருக்கும் பொருட்களையெல்லாம் சூறையாடிச் சென்றுவிடுவார்கள் என்பதாலும், இரவு தங்கி நிற்பதற்கு சம்மதம் தெரிவிக்காது சிவாவை ஒரு இரவுதானே தன்னுடன் துணைக்கு அனுப்புமாறு கெஞ்சியபடி நின்றாள்.

வேதமூர்த்திக்கு தான் பொத்திப் பொத்தி பாதுகாத்துவரும் ஒரே ஒரு மகனை அனுப்ப கிஞ்சித்தும் விருப்பமின்றி, என்னசெய்வதென அறியாது தயக்கத்துடன் சிவாவை பத்மாவுடன் அனுப்பிவைக்கச் சம்மதித்தார். தங்கம்மாவும் அரைமனதுடன் ஒப்புக்கொண்டாள். இருவரையும் தனியே அனுப்பப் பயப்பட்ட வேதமூர்த்தி சைக்கிளில் அவர்களுடன் போய் அவர்கள் இருவரையும் பாதுகாப்பாக வீட்டில் சேர்த்து விட்டு வீடுவந்து சேர்ந்தார்.

❍



**மகன் செல்வனையும் அவளிடமிருந்து இறாஞ்சி தூக்கிவீச, பத்மா தனது மகன் வீசப்பட்டதைப் பார்த்ததுமே அந்த இடத்திலேயே மயங்கிச் சரிந்தாள்.**

இந்திய இராணுவம் இடைக்கிடை வைத்தியர் வேதமூர்த்தி இருக்கும் பகுதிக்கும் ரோந்து வருவதுண்டு. ஒருநாள் வெள்ளிக்கிழமை வேதமூர்த்தி தனது பிள்ளையார் கோயிலில் பூசைபண்ணும்போது அவர் கையிலிருந்த மணி கிணிங் கிணிங் என ஒலித்தவண்ணமிருந்தது. அந்தவேளை இந்திய இராணுவ அணியொன்று அவரது வீட்டு ஒழுங்கையால் வந்து கொண்டிருந்தது. அந்தவேளை இராணுவத்தின் சாவகச்சேரி பிரதேசத் தளபதி சரவணனும் சிறிய ரக ஜீப் வண்டியில் சில இராணுவ சிப்பாய்களின் பாதுகாப்புடன் வந்து கொண்டிருந்தார். அவரது காதுகளில் பூசைமணி ஓசை கேட்டதால் அவருக்கும் அந்தக் கோயிலுக்குப்போய் தரிசனம் செய்ய ஆசை வந்தது. உடனடியாக அந்தக் கோயிலடிக்கு வாகனத்தில் வந்த சரவணன், வாகனத்திலிருந்து இறங்கி தன்னுடன் வந்த வீரர்களை வெளியே நிறுத்திவிட்டு, உள்ளே நுழைந்தார். அவரின் வருகையை அறிந்த அங்கு கூடியிருந்த மக்கள் கலவரமடைந்து வெளியேற ஆயத்தமானபோது, மக்களைத் தடுத்து, பயப்படவேண்டாம் நீங்கள் சாமி தரிசனம் செய்யுங்களென தமிழில் கூறி அழைக்க, மக்கள் தமிழில் இராணுவத் தளபதி கதைத்து தம்மை அழைத்ததால் பயம் தெளிந்து, தொடர்ந்து சாமி தரிசனம் செய்ய சரவணனும் மிகுந்த பக்தியுடன் சாமி தரிசனம் செய்து பூசகராகச் செயற்பட்ட வேதமூர்த்தியிடமிருந்து விபூதி சந்தனம் வாங்கி நெற்றியில் அணிந்து விடைபெற்றுச் சென்றார். அன்றிலிருந்து செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மாலைவேளை கோயிலில் நடைபெறும் பூசைகளில் சரவணனும் கலந்து கொள்ளத் தவறுவதில்லை. இப்படியாக கிழமைக்கு இரு தடவைகள் கோயிலுக்கு வந்து போகும் சரவணனுக்கும், வேதமூர்த்தியின் குடும்பத்தினருக்குமிடையில் நெருங்கிய ஒரு உறவு ஏற்படத் தொடங்கிவிட்டது.

வேதமூர்த்தியின் மகன் சிவாவும், மகள் உமாவும் அவருடன் எந்தவித பயமுமின்றி பழகத் தொடங்கினர்.

ஒரு நாள் கோயில் தரிசனம் முடிந்தவுடன் வைத்தியர் வேதமூர்த்தியை அழைத்து, சரவணன் தன்னைப் பற்றிய விபரங்களைக் கூறிக்கொண்டிருந்தார்.

தனக்கு முப்பத்தைந்து வயதாகிறதென்றும், தான் தமிழகம் மதுரையைச் சேர்ந்தவனென்றும், சரவணன் என்பது தனது பெயர் என்பதுடன், சாவகச்சேரி பிரதேச தளபதியாக இருக்கும் தனக்கு திருமணமாகி நாலுவயதில் ஒரு மகனும், இரண்டு வயதில் ஒரு மகளும் இருப்பதாகவும், தனது மனைவியின் பெயர் பூங்கோதையென்றும் கூறி, தனக்கு ஒரு தங்கையுள்ளாள் என்பதுடன் தனக்குப்பின் பத்து வயதின் பின் பிறந்தவளென்பதால் வீட்டில் அவளுக்கு மிகுந்த செல்லமென்றும், இருபத்தைந்து வயதுடைய தனது தங்கை பூரணி, பட்டதாரியாக ஒரு அரச பாடசாலையில் தமிழாசிரியையாக பணிபுரிவதாகவும், அசப்பில் அவள் உமாவைப் போலவே இருப்பதாகவும், தன்மேல் அளவற்ற பாசமுள்ளவளாக இருப்பதால்தான் இலங்கைக்கு வருவதை அவள் அடியோடு விரும்பவில்லையென சரவணன் கூறியதுடன், தனது தங்கைக்கு அடுத்த வைகாசியில் திருமணம் செய்ய நிச்சயதார்த்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவளது திருமணத்தை அண்ணனாகிய தான் நேரில் போய் நின்று சிறப்பாக நடத்தி

விட்டு திரும்ப பிள்ளையாரப்பா கருணை காட்ட வேண்டுமென பிள்ளையாரை கைகூப்பி வணங்கிய சரவணனின் கண்களிலிருந்து பொல பொலவென கண்ணீர் சொரிய, தங்களது தகப்பனார் அருகிலிருந்து அதனை அவதா னித்துக் கொண்டிருந்த சிவாவும், உமாவும் கூட தம்மையறியாமல் அழுது விட்டனர். இதனை அவதானித்த சரவணன், சிவா வையும், உமாவையும் அருகிலழைத்து தலையிலே தடவி தேற்றியதுடன், தனக்கு அன்பு செலுத்த இலங்கையிலும் இரண்டு சகோதர்கள் இருப்பதில் மிகுந்த ஆனந்த மடைவதாகக் கூறி ஆறுதல் கொண்டதுடன், தனது மேலங்கியிலிருந்த பொக்கற்றிலிருந்து ஒரு தடித்த கவரை எடுத்து அதனை பிரித்து அதற்குள் இருந்த இருபடங்களை வைத்திய ருக்கும் சிவா, உமாவுக்கும் காட்டினார். ஒரு படத்தில் சரவணனும், மனைவி பிள்ளைகளும் காணப்பட்டனர். மற்றைய படத்தில் தங்கை பூரணியும் பெற்றோரும் இருப்பதை பார்த்தனர். உண்மையில் சரவணனின் தங்கை அசப்பில் உமாவைப் போலவே இருப்பதை அவதானித்த உமா ஆச்சரியப்பட்டு கண்கலங்கினாள். இப்படி யாக சரவணன் வைத்தியர் குடும்பத்துடன் அந்நியோன்னியமாக அடிக்கடி வந்து பழகு வதை இயக்கம் விரும்பவில்லை. ஆனாலும் வைத்தியர் குடும்பத்தின்மேல் இயக்கத்திற்கு ஒரு பூரண நம்பிக்கை இருப்பதால் கண்டும் காணாமல் அதனை அனுமதித்து வந்தனர்.

❍

சிவாவுடன் வீட்டுக்கு வந்த பத்மாவுக்கு அன்று தூக்கமே பிடிக்கவில்லை. சிவாவுக்கு ஏதும் நடந்துவிடாமல் அடுத்தநாள் காலையில் அவனை வீட்டுக்கு அனுப்பிவிடவேண்டும் என்பது அவளுக்கு பலத்த மனச்சங்கடமாக இருந்தது. இரவு நடுநிசியைத் தாண்டிக் கொண்டிருந்தது. நாய்கள் வேறை ஊளையிட்டு ஊரைக் கலக்கியவண்ணமிருந்தன. பத்மாவுக்கு உறக்கமே வரவில்லை. திடீரென ''படீர்'' என்ற பலத்த முழக்கம் ஊரை அதிர வைத்தது.

பத்மாவின் வீட்டிலிருந்து ஒரு அரைக் கிலோமீற்ரர் தூரத்தில் இயக்கம் வைத்த கண்ணிவெடியின் பாரிய முழக்கமே அது. நடுச்சாமம் என்பதால் கண்ணி வெடியினோசை பத்து கிலோமீற்றரையும் தாண்டிக் கேட்டு நகரையே பயத்தில் உறைய வைத்தது. ஒரு இராணுவ வாகனம் கண்ணிவெடியில் சிக்கி பல துண்டுகளாக சிதறியதுடன், அதில் பயணித்த பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் தூக்கியெறியப்பட்டு அந்த இடத்திலேயே பலியாகினர்.

கண்ணிவெடி வெடித்ததிலிருந்து இராணுவத் தினருக்கும் இயக்கப் போராளிகளுக்குமிடையில் பரஸ்பர துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு ஒருமணி நேரத்தின்பின் ஓய்வுக்கு வந்தது. அந்த நேரம் தொடக்கம் பத்மா இருந்த பகுதியிலிருந்த சுற்றாடல்கள் பல இராணுவத்தினர்களின் பலத்த சுற்றிவளைப்புக்கு உட்பட்டன. பத்மாவுக்கு நடுக்கம் பிடித்துக்கொண்டது. விசர்த்தனமாய் தான் இங்கு சிவாவை அழைத்து வந்து விட்டேனே, அவனுக்கு என்ன ஆகுமோ எனத் துடிதுடித்தாள். அவள் நினைத்த மாதிரியே விடிகாலைப் பொழுதில் நடந்த சுற்றிவளைப்புத் தேடுதலில் சிவாவுடன் பல இளைஞர், யுவதிகள், நடுத்தர ஆண்கள் கைது செய்யப்பட்டு பெரிய றக்வண்டிகளில் ஏற்ற ஆயத்தமாக குவிக்கப் பட்டனர். பல பெற்றோர், மனைவிமார், சகோதரங்கள் குய்யோ முறையோ எனக் கதறி தங்கள் உறவுகளை விடுவிக்கும்படி கெஞ்சிக்கேட்டனர். அப்படிக் கெஞ்சி நின்றவர் களை இராணுவம் துவக்குப் பிடியால் அடித்து விரட்டினர். பத்மாவும் தனது மகன் செல்வனைத் தூக்கியபடி போய், சிவாவை விட்டுவிடும் படி கதறி அழுதாள். அவளை ஒரு இராணுவம் காலால் உதைந்து தாக்கியதுடன், மகன் செல்வனையும் அவளிடமிருந்து இறாஞ்சி தூக்கிவீச, பத்மா தனது மகன் வீசப்பட்டதைப் பார்த்ததுமே அந்த இடத்திலேயே மயங்கிச் சரிந்தாள். அந்த அவலங்களையெல்லாம் கவனிக்காத இராணு வத்தினர் வெறித்தனமாக கைது செய்தவர்களைத் தாக்கி வாகனங்களுக்குள்ளே, பலவந்தமாக ஏற்றிக்கொண்டு விரைந்தனர்.

இரவு வெடித்த கண்ணிவெடி பத்மாவின் வீட்டுக்கு அருகாமையிலேயே வெடித்திருக்க வேண்டுமென யூகித்த வேதமூர்த்தி தனது சையிக்கிளை எடுத்துக்கொண்டு பத்மா வீட்டை நோக்கி விரைந்தார். அங்கு பத்மா வீடு ஓவெனத் திறந்து கிடந்தது. வேதமூர்த்தி இதுபற்றி விசாரிக்க முதலே அயலிலுள்ள சனம் நடந்த விடயங்களை அவருக்குக் கூறி ஒப்பாரி வைத்தனர். பத்மாவும் அவளது மகனும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், தனது மகன் சிவாவும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதை அறிந்த வேதமூர்த்தி

கதறி அழுதபடி வைத்தியசாலையை நோக்கி விரைந்தார். அங்கே பத்மா, மகனை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்துவிட்டு அழுது புலம்பிக்கொண்டிருப்பதைக் கண்ட வேதமூர்த்தி, சிவாவுக்கு நடந்த கொடுமைகளை அவளிடம் விசாரித்து மேலும் அவளை சங்கடத்துக்கு உள்ளாக்க விரும்பாது பத்மாவிடம், “பிள்ளை யோசிக்காதையடி, இப்படி நடக்கு மெண்டு ஆருக்கடி தெரியும் கவலைப்படாதை பிள்ளை” எனச் சொல்லி தேற்றிக்கொண்டிருந்தார். அந்தவேளை பத்மாவின் கணவன் சபேசன் வருவதைக் கண்டதும் அவனுக்கும் ஆறுதல் கூறி, அவ்விடத்தைவிட்டு அவர் விடை பெற்றுச் சென்றார். கணவன் சபேசன் வருவதை அறிந்து கொண்ட பத்மா, கணவனைக் கண்டதும் அலறிய சத்தம் வைத்தியசாலைச் சுவர்களில் பட்டுத் தெறித்தது.

❍

வீடுநோக்கி விரைந்த வேதமூர்த்தி, இரவு நடந்தேறிய கொடுமைகளை நா தழுதழுக்க மனைவியிடமும், உமாவிடமும் கூற, “அடி பத்மா... நீ எங்கடை சொல்லைக் கேட்டு இங்கை தங்கி யிருந்தால் உனக்கும் பிள்ளைக்கும், அப்பாவி யான சிவாவுக்கும் ஒண்டும் நடந்திருகாதடி. “கெடுகுடி சொல்லுக் கேளாது” எண்டதுபோல நடந்துகொண்ட உன்ரை கதையைக்கேட்டு மகனை அனுப்பி.. இப்பபாரன் என்ரை பிள் ளைக்கு நடந்த கேட்டை” எனச் சொல்லி தலையிலடித்து சிவாவின் தாய் கதறினாள். உமாவும்... அண்ணா அண்ணா என அலறி ஓலமிட்டபடி இருந்தாள். இவர்களின் கூக்குரல் கேட்டு அயலெல்லாம் அங்கு வந்து கூடி அழுது குழறிக்கொண்டிருந்தனர்.

❍

முதல்நாள் தேடுதல் வேட்டையில் அகப்பட்டவர்களின் உறவுகள், இந்திய இராணுவ சாவகச்சேரிப் பிரதேச முகாமுக்கு படையெடுத்துச் சென்றனர். வேதமூர்த்தியின் குடும்பத்தினரும் அங்கு சென்றிருந்தனர். ஆனால் எவரையும் முகாமுக்கு அருகேகூட சிப்பாய்கள் அனுமதிக்கவில்லை.

இப்படி இரவு பகலாக அலைந்ததுதான் மிச்சம். எதுவுமே நடக்கவில்லை. வேதமூர்த்தி, முகாம் பொறுப்பதிகாரியான தளபதி சர வணனை பலமுறை தொடர்புகொள்ள முயற் சித்தும் முடியவில்லை. ஆனாலும் தனது மகன் சிவாவை சரவணன் நன்கு அறிவார்



# கடவுளுக்காய் காத்திருப்பு

**பிரமி ருத்ரா**

கடவுளே உனக்காகத்தான்..
கந்தகக் கரி படிந்து கருத்த
வெள்ளரசின் கீழிருந்து அந்தோ
தொலைவில் பார்க்கிறேன்.

உடலின் காயவோட்டைகளின் வழி
செந்நிறவுயிர் ஒழுகிக் கொண்டிருக்கிறது.
அருகில் கேட்ட முனகலின் ஒலி
ஈனஸ்வரமாகி அடங்கிவிட்டது.

நாளை அல்லது நாளை மறுநாள்
அனைத்தும் முடிந்துவிடலாம்.
கடவுளே வந்துவிடு – இது
நீ சிருஸ்டித்த உலகமல்லவா..?

அம்மனசுகள் வருந்தி வருந்தி
அரக்கராகிக் கொண்டிருக்கின்றன.
கரும்புகையும் வெண்புகையும் – உன்
தேவலோகத்தை நரகமாக்குகின்றன.

நீ கடவுளல்லவா கடந்து விட்டாய்
என நினைத்தேன்...
கந்தகக் கரியில் நீயும்
கருகியிருக்கலாம் யாரறிவார்...?

என் இறுதி உயிர்ச் சொட்டு
ஒழுகும் வேளையிலே... இதோ.. என்னருகில்..
கந்தகக் கரிபடிந்து கருத்த இந்த
வெள்ளரசின் கீழ் – கடவுள்

அவன் எதிரியின் கடவுள்
நான் இறந்து விட்டேன்.

என்பதனால் தனது மகனுக்கு எதுவும் ஆகாமல் விடுதலையாவான் என்று உறுதியாக அவர் நம்பினார். அதுபோலவே உமாவும் தனது அண்ணனின் மேல் சகோதர வாஞ்சையுடன் பழகிய சரவணன், சிவாவுக்கு எதுவும் தீங்கு செய்யாமல் விரைவில் விடுவித்து விடுவார் என திடமாக நம்பி ஆறுதல் கொண்டாள்.

திடீரென ஒருநாள் ஒருசிலர் விடுவிக்கப் பட்டிருப்பதாக அறிந்த மக்கள், முகாமை நோக்கி திரண்டனர். அங்கே இரண்டு ஆண் களும், இரண்டு பெண்களும் மட்டுமே விடு விக்கப்பட்டிருந்தனர். விடுவிக்கப்பட்டதென்ற பெயர்தான். விடுவிக்கப்பட்ட இளம் பெண்கள் இராணுவத்தினரால் சீரழிக்கப்பட்டு, சித்திரவதை களுக்கு உட்பட்டு குற்றுயிராக உறவுகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அதேபோன்று சிவாவும் இன்னுமொரு நடுத்தர வயது ஆணும் கண்ணெடுத்துப் பார்க்கமுடியாத அடி காயங் களுடனும், கை கால்கள் முறிவுகளுடனும் ஒப்படைக்கப்பட்டனர். சிவாவின் கோலத்தைக் கண்டு தந்தை தாயும் தங்கை உமாவும் தலையிலடித்துக் கதறினர். குற்றுயிராக ஒப்படைக்கப்பட்ட சிவாவை ஒரு வாகனத்தி லேற்றி வீட்டுக்குக் கொண்டுவந்தனர். அதை அறிந்த அயல் சனங்கள் வீட்டுக்கு வந்து குவிந்து சிவாவின் நிலையைப் பார்த்துக் குமுறி அழுது, முகாம் பொறுப்பதிகாரி சரவணன் உட்பட அனைவருமே நாசமாகப் போகும்படி மண்ணள்ளித் திட்டினர். சிவாவின் முகமெல்லாம் வீங்கியிருந்ததுடன், உதடுகளும், மூக்கும் கொவ்வைப்பழமாகச் சிவந்து ரணமாகக் காட்சியளித்தன. அவனை தலைகீழாக தொங்க விட்டு உள்ளங்கால்களில் பெரிய கொட்டானால் பலமாகத் தாக்கப்பட்டிருந்ததுடன், முதுகு கைகால் அவையங்களெல்லாம் அடி காயங்களால் வெடித்து இரத்தம் கசிந்தவண்ணமிருந்தன. பொதுவில் சிவா குற்றுயிரும் குறையுயிருமாக பேச்சாற்றலை பெரிதும் இழந்தே காணப் பட்டான். இதைப் பார்த்த வேதமூர்த்திக்கு முகாம் பொறுப்பதிகாரி சரவணன்மேல் இனி யில்லையென்ற வெறுப்பு மேலோங்கியது. அதேபோன்று சிவாவின் தாயாரும் சரவணனை வெறுத்தாள். இங்கு சரவணன் வந்து போன காலங்களில் சிவாவை தனது உடன் பிறவா சகோதரனென அன்பு பாராட்டி அரவணைத்த தெல்லாம் வெறும் போலித்தனமென்பதுடன் அந்த இராணுவ உடுப்புக்குள் புகுந்தவனுக்கு தமது மனைவி பிள்ளைகளைத் தவிர அத்தனை பேர்களும் அந்நியன்தான் என்பது எவ்வளவு உண்மையானது என வேத மூர்த்தி மாத்திரமல்ல உமாவும் தனக்குள் எண்ணி, சரவணனின் போலித்தனமான அன்பு, பாசங்களை அடுத்தகணமே இதயத்திலிருந்து தூக்கி வீசி எறிந்துவிட்டு உசாரானாள். தனது அண்ணனை குற்றுயிராக்கி, அடித்து நொருக்கி விசாரித்ததை வேடிக்கை பார்த்த சரவணனை தனது முதல் எதிரியாக வரித்துக்கொண்ட உமா, அவனை எப்படியும் ஒழித்துக்கட்டவேண்டுமென அக்கணமே சபதம் கொண்டாள். அவளது சபதத்துக்கு உரமூட்டுவதுபோல ஓரிரு நாட்களில் சிகிச்சை எதுவும் பயனளிக்காது போக, சிவாவும் எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டான்.

இதையறிந்து விக்கித்துப் போன உமா, ஒருநாள் இரவு "எனது ஏதுமறியாத அப்பாவி யான அண்ணனை முற்றுமுழுவதாக அறிந்தி ருந்தும், கட்டளைத் தளபதி சரவணன் சித்திரவதை செய்து கொன்றொழித்ததால், இனி அவனை எந்த விதத்திலும் உயிருடன் விடமாட்டேன். அவனையும், அவனுக்கு துணை நின்ற அற்பப் பிசாசுகளையும் கொன் றொழித்த பின்னேதான் நான் உங்களை வந்து சந்திப்பேன். அதுவரை என்னைத் தேடவேண்டாம்" என தனது கைப்பட ஒரு கடிதமெழுதி வைத்துவிட்டு அன்றிரவே அவள் இயக்கத்துக்குள் சங்கமமானாள். சிவாவை இழந்த ஆறாத்துயரில் மூழ்கியிருந்த தாய்க்கும், தந்தைக்கும் மகள் உமாவின் திடீர் வெளியேற்றமானது இதயத்தில் ஈட்டியைப் பாய்ச்சி இரத்தத்தை கசியவைத்தது.

வீட்டை விட்டு வெளியேறிய உமா, சரவணனின் சங்காரத்துக்காக காத்துக்கிடந்தாள்.

அதேவேளை, அன்று சாவகச்சேரியில் முழங்கிய கண்ணிவெடியில், பத்துக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் பலியானார்கள் என்ற செய்தியை வெளியிட்ட இந்திய இராணு வத்தின் மேலிடம், சாவசகச்சேரிப் பிரதேச கட்டளைத் தளபதி சரவணனும் அந்தக் கண்ணிவெடியில் சிக்கி கொல்லப்பட்டார் என்ற செய்தியை, முகாமின் பாதுகாப்புக்கருதி எங்கும் கசியவிடாமல் இரகசியம் பேணியதை, உமா அவ்வேளை அறிந்திருக்கவேயில்லை.

❍❍❍




ஜெர்மனியில் வசிக்கும் கௌசி (சந்திர கௌரி சிவபாலன்) அவர்களின் நாவல் 'குருவிக் கூடு'. பொதுவாக நாவல்களைப் படிக்கும் போது முன்னுரை அணிந்துரை என்னுரைகளை இறுதியில்தான் படிப்பேன். இந்த நாவலையும் அப்படித்தான் வாசிக்கத் தொடங்கினேன். வாசிக்கத் தொடங்கிய ஆரம்பப் பக்கங்களிலேயே இது ஒரு கற்பனை நாவல் அல்ல என்பதையும், நாவல் ஆசிரியரும் சிநேகாவும் ஒருவரே என்பதையும் புரிந்து கொண்டேன்.

இலங்கை வாழ்க்கை, ஜெர்மனிய வாழ்க்கை என இந்த நாவலை இரண்டு பாகங் களாகப் பார்க்கலாம். இலங்கையில் இருக்கும் ஏறாவூர், பேராதனை, நீர்கொழும்பு என்ற இடங்களில் இருந்து ஆரம்பித்து, பின்னர் ஜேர் மனியை நோக்கி நாவல் பயணிக்கின்றது.

முதலில் நாவலின் சுருக்கத்தைப் பார்க்கலாம். கந்தசாமி வைரவள்ளி தம்பதிகளின் மகளான பார்வதியை பரமசிவம் மணந்து கொள்கின்றார். அவர்களின் நான்கு பிள்ளைகளான சிவம், சிநேகா, கீரன், சிந்து என்பவர்களைச் சுற்றி கதை ஆரம்பத்தில் பின்னப்பட்டுள்ளது. தாத்தா பாட்டியுடன் வாழ்வதற்கு பலருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இங்கே சிநேகாவிற்கு பாட்டி வாய்த்துவிடுகின்றது. பாட்டி வைரவள்ளி மட்பாண்டங்கள் செய்தல், கை வைத்தியம், முறிவு வைத்தியம், பிள்ளைப்பெற்று பார்த்தல் போன்றவற்றில் கை தேர்ந்தவளாக இருக்கின்றார்.

சிநேகா பள்ளி வாழ்க்கையில் இருந்து விடுபட்டு, உயர்கல்வி பயில்வதற்காக பேராத னைப் பல்கலைக்கழகம் செல்லும்போது, நானும் கூடவே சென்று விடுவது போன்ற உணர்வு மேலிட்டது. நானும் அங்கே நான்கு வருடங்கள் தங்கிப் படித்தவன் என்பதால், ஆசிரியர் கூறும் இடங்கள், காட்சிகள், சம்பவங்கள், கல்வி முறைகள், மொழி, பகிடி வதை எல்லாம் பழக்கப்பட்டவையாகவும், மீளவும் ஞாபகத்திற்கும் வந்தன. சிநேகா விஜேவர்த்தன விடுதியில் தங்கியிருந்து கலைப்பீடத்தில் கல்வி பயில்கின்றார். அந்தக் காலங்களில் சத்யா, தியான், ஈழவாணி, சசித்ரா, சிவராஜேந்திரம், ஆயிஷா போன்றோர் நண்பர்களாகக் கிடைக்கின்றார்கள். கூடவே பேராசிரியர்கள் பூலோகசிங்கம், தில்லைநாதன், சதாசிவம், அருணாசலம் போன்றவர்களும் கலாநிதி துரை மனோகரன், திருமதி தியாகராஜா போன்றோர் விரிவுரையாளர்கள் ஆகின்றார்கள். உண்மையைச் சொல்வதென்றால் அந்தச் சில அத்தியாயங்களை வாசித்தபோது நானும் அதில் கரைந்துவிட்டேன். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள் இந்த நாவலை வாசிக்கும்போது அவர்கள் இன்னொரு உணர்வு நிலைக்குச் செல்வார்கள் என்பது நிச்சயம். பல்கலைக்கழகப் படிப்பைத் தொடர்ந்து பிலிமத்தலாவ என்னுமிடத்தில் ஆசிரியர் பயிற்சி மேற்கொள்கின்றார். தொடர்ந்து வாழைச்சேனையில் முதல் ஆசிரியர் நியமனம், அங்கு பெறும் அனுபவங்கள், சகோதரப் படுகொலைகள். அதனைத் தொடர்ந்து தனது பிறந்த ஊரான ஏறாவூரில் சில மாதங்கள் பணியில் இருந்துவிட்டு, இஸ்லாமியர்களின் தாக்குதலால் நீர்கொழும்புக்குப் புலம் பெயர் கின்றார். நீர்கொழும்பில் விஜயரெத்தினம் தமிழ் மகாவித்தியாலத்தில் படிப்பிக்கும்போது, நாவல் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பயின்று இரண்டாவது பட்டத்தையும் பெற்றுக் கொள்கின்றார்.

சிநேகா தனது ஆசிரியத் தொழில் நிமித் தம் வாழ்ந்த இடங்கள் எல்லாம் மிக அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நீர்கொழும்பில் இருக்கும் காலங்களிலே ஜெர்மனியில் இருக்கும் அரவிந்தனுடன் திரு மணம் என்ற பெரும் திருப்பம் ஏற்படுகின்றது. கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிநேகா, வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அரவிந்த னுடன் இணைந்து கொள்கின்றார். அக்காலப் பகுதியில் சிநேகா தனது தாயையும் இழக் கின்றார். அங்கிருந்து அவருக்கொரு புதிய வாழ்வு ஜேர்மனியில் தொடங்குகின்றது.

ஒரு புதிய நாட்டில் சிநேகா எப்படி இயைபாக்கம் கொள்கின்றார் என்பதை அடுத்தடுத்த அத்தியாயங்கள் சொல்கின்றன. சிநேகா திருமணமான பின்னர் கணவனான அரவிந்தன் நாவலிற்குள் வருகின்றான். அவன் எப்படி ஜேர்மனி என்னும் தேசத்திற்கு வந்து சேர்ந்தான், அதற்காக அவன் பட்ட கஸ்டங்கள் போன்றவையும் இந்நாவலில் விலாவாரியாகச் சொல்லப்படுகின்றது. புலம் பெயர்ந்து போகின்றவர்களுக்கு வேலை உடனே கிடைத்துவிடுமா என்ன? அரவிந்தனும் பல வேலைகளைச் செய்கின்றான். கடைசியாக உணவகம் நடத்துகின்றான். சிநேகா உணவ கத்தில் வேலை செய்வதுடன் சுகாதாரப் பணியாளராகவும் வேலை செய்கின்றார். சிநேகா விழப்போகும் தருணங்களில் எல்லாம் பின்னால் இருந்து தாங்கிக் கொள்பவனாக அரவிந்தன் பாத்திரம் அமைகின்றது.

அவர்களுக்கு சுருதி பிறக்கின்றாள். சில வருடங்களின் பின்னர் மீண்டும் சிநேகாவிற்கு தமிழுடன் உறவாட சந்தர்ப்பம் வாய்க்கின்றது. 'தமிழ் வான் அவை' என்னும் அமைப்பை நிறுவி அதனூடாக கலையுலக வாழ்வை ருசிக்கின்றார்.

தந்தை நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலை யில் இருக்கையில், தந்தைக்கும் மகளுக்குமிடை யேயான உரையாடல் மனதை நெகிழ வைக் கின்றது. தந்தைக்கு சிகிச்சை பலனின்றி, ஹீமோதெரபியை நிறுத்திய பின்னர் - சிநேகா அவரின் மூளையில் பதிந்திருக்கும் பதிவுகளை பதிவு செய்ய விரும்புகின்றாள். அதற்கு மூளை பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளும் நிருபா கிடைக்கின்றாள். அறிவியல் ஆராய்ச்சி செய்யும் நிருபா, பரமசிவத்தின் மூளையில் படிந்திருக்கும் ஞாபகக் கோப்புகளை கணினி மூலம் தரவிறக்கம் செய்ய முயல்கின்றாள். அந்த விஷப்பரீட்சை வெற்றி பெற்றதா? தந்தையின் இளமைக்காலம் எப்படி இருந்தது?, அவர் தன் மனைவியுடன் கொண்டிருந்த வாழ்க்கை எத்தகையது?, சமூகத்திற்கு பரம சிவம் என்னவெல்லாம் செய்தார் போன்ற தகவல்களை அவர்கள் பெற்றுக் கொண் டார்களா என்பதை நாவலில் பிற்பகுதி சொல்கின்றது.

இந்த நாவல் தர்க்க ரீதியாக பல கேள்வி களை மனதில் எழுப்பி, அதற்கான அறிவியல் விளக்கங்களையும் கூடவே தந்துவிடுகின்றது. அம்மாவின் குரல், மூளையில் பதிந்து தொடர்ந்து கேட்கும் விந்தை - வாழ்நாள் முழுவதுமே தொடர்ந்து வரும் அம்மாவின் அசரீரி. மூளை எந்தவிதமான குரல்களை பதிவு செய்து வைத்திருக்கின்றது போன்ற சிந்தனையைத் தூண்டும் பல அறிவியல் தகவல்கள் நாவல் எங்கனும் விரவிக் கிடக்கின்றன. புற்றுநோயால் இறந்த ஒருவரின் உடலைக் குளிர வைத்து, புற்றுநோய்க்கான மருந்து கண்டுபிடித்தவுடன் அந்த மருந்தை அந்த உடலினுள் செலுத்தி உயிர்பெறச் செய்யும் 'கிரையோனிக் முறை' பற்றிய சில தகவல்களும் உள்ளன.

நாவலின் முற்பகுதி இனப்பிரச்சினை, விடுதலை இயக்கங்களுக்கிடையேயான முரண் பாடுகள், சகோதரப் படுகொலைகள் என்பவற்றை இடையிடையே தொட்டுச் செல்கின்றது. அதே வேளை நாவலின் பிற்பகுதி - எமது வாழ்க்கை முறைக்கும், ஜெர்மனியரின் வாழ்க்கை முறைகளுக்கும் இடையேயான வேறுபாடுகள், புலம்பெயர் வாழ்வு கற்றுத் தரும் பாடங்கள், உயிரைத் தக்கவைக்கப் புலம்பெயரும் மக்கள் இன்னொரு நாட்டில் வாழ்வதற்காக - எப்படி மனதைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும் போன்ற தகவல்கள், டிமென்ஷியா - பாகின்சன் நோய்கள் பற்றியதான விபரங்கள் - அந்த நோய் கண்டவர்களின் நடத்தைகள், கொரோனா கால வாழ்வு எனப் பல தகவல்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்தக் குருவிக்கூட்டில் அரசியல் இருக் கின்றது, ஆன்மீகம் இருக்கின்றது, இலங்கை ஜெர்மனி என்ற இரண்டு நாடுகளினதும் கலாசாரம், விருந்தோம்பல், உணவுப்பழக்க வழக்கங்கள் உள்ளன. இலக்கியம் குடும்பவாழ்க்கை விஞ்ஞானம் எல்லாம் இருக்கின்றன. ஆசிரியர், தமிழ் சிறப்புப் பாடம் பல்கலைக்கழகத்தில் பயின்றிருப்பதால், இடையிடையே கம்பரின் கவிநயம், வள்ளலார் பாடல்கள், பாரதியார்

பாடல்கள், வள்ளுவர் வாக்குகள், மூதுரை என இலக்கிய இன்பத்தையும் நாம் அள்ளிப் பருகக்கூடியவாறு உள்ளது.

தந்தை பரமசிவத்தின் மூளை அடுக்குகளில் பதிந்திருக்கும் தரவுகளை கணினி உதவியுடன் தரவிறக்கம் செய்யும் செயலானது, சட்டத்துக்குப் புறம்பானது எனத் தெரிந்தும் நிருபாவும் சிநேகாவும் அதைச் செய்வது மனதைச் சற்று நெருடவே செய்கின்றது. உயர உயரப் பறக்கும் சிநேகா என்ற நாயகியின் விம்பம் இங்கே சற்றே உடைந்துபோய்விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அதை அவர்கள் அரச அனுமதிபெற்று செய்கின்றார்கள் என்று காட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். பரமசிவத்தின் பதிவுகள் கொண்ட 'இன்னும் வாழ்கின்றேன்' என்ற புத்தகம் கொண்டிருக்கும் தகவல்கள், மிகவும் முக்கியமானவை என்றாலும் சற்றே நீண்டுவிட்டன.

இந்த நாவலில் வியக்க வைக்கும் சாட்சியாக பரமசிவம் பார்வதி சிநேகா அவர்களின் புகைப்படங்களும் தண்டவாளத்தின் கீழ் தொங்கிக் கொண்டு ஓடும் புகையிரதம், திருமணத் தம்பதிகள் போகும் கார் போன்ற பல புகைப்படங்களை இணைத்துள்ளமை புதுமையாக உள்ளது. கூடவே புத்தகத்தினுள் ஒரு புத்தகம், நவீன அறிவியலுக்குத் திறவுகோலாகும் மூளைப் பதிவுகள் எனப் பல புதுமைகளையும் தந்திருக்கின்றார் நூல் ஆசிரியர்.

நூலிற்கு முனைவர் மு.இளங்கோவன் அணிந்துரையையும், பேராசிரியர் துரை. மனோகரன் வாழ்த்துரையையும் வழங்கி யிருக்கின்றார்கள்.

பக்கம் சாராது நடுநிலையில் நின்று பயணிக்கும் எந்த நாவலை வாசிக்கும்போதும் மனதுக்கு இதமாக இருக்கும். தற்போது வெளிவரும் நாவல்களில் பல, பக்கம் சார்ந்தவை. அதை எழுதுபவர்கள், சிலவற்றை மறைத்து வைத்து பூடகமாக எழுதி விடுகின்றார்கள். தாம் எழுதுபவைதான் சரி என்றும் வாதிடுகின்றார்கள். அந்த வகையில் நிஜத்தைச் சொல்லவரும் சுயபுனைவு (Autofiction) வகையைச் சார்ந்த இந்த நாவல் ஒரு ஆவணமாகவும் திகழ்கின்றது. வாழ்த்துகள் கௌசி.

வெளியீடு : வசந்தா பதிப்பகம், பக்கங்கள்:342, ஆண்டு :2024, விலை : 400 ரூபாய்கள்

❍❍❍

# நானுனைத் தேடுகின்றேன்

நிலவில் நானுனைத் தேடுகிறேன்
ஆயின் அது பூரணமாகத்
தோன்றும்போது
நட்சத்திரங்களில் உனை நான்
தேடுகிறேன்
ஆயின் அது என்
இதயத்தை
மீட்டும் போது

இளங்காற்றில்
புற்களில்
மலர்களில்
மரங்களில் உனை
நான் தேடுகிறேன்

நதியில் உனை
நான் தேடுகிறேன்
ஓடையிலும் வானத்திலும்
தேடுகின்றேன்
நடுக்கத்தின் போதும்
தேடுகிறேன்
என் அழுகையின்
ஒவ்வொரு கண்ணீர்த்
துளியிலும் உனை
நான் தேடுகிறேன்

கடந்து சென்ற
காலத்தில் உனை
நான் தேடுகிறேன்
தையல் போட்ட
காயத்திலும் உனை
நான்தேடுகிறேன்

நான் தேடிக்கொண்டே
இருக்கிறேன்
எங்குமே உன்னைக்
காணவில்லை
ஆனாலும்
நான் உன்னைத்
தேடிக்கொண்டே
இருப்பேன்

மூலம் : **சாரா ஜி பாடெல்**
(Sara G Fadell)
தமிழில்: **அன்னலட்சுமி இராஜதுரை**

சிறுகதை



# பயணம்



முனைவர்
புதுவை மனுநீதி

விடுமுறையைக் களிப்புடன் கழிப்பதற்காக மொரிசியஸ் நாட்டிற்கான உள்நுழைவு விசாவினை இணையவழியில் பெற்றபின் விமானத்தில் பயணிப்பதற்காக குறிப்பிட்ட விமான சேவை நடாத்தும் நிறுவனத்திற்குச் சென்றிருந்தேன். ஆன்மீகச் சுற்றுலாவிற்கு செல்வதாகக் கூறி அனுமதி விசாவினைப் பெற்றிருந்ததால் மெய்யியல்சார் ஆன்மீகக் கருத்துக்கள் மனதில் உருண்டோடின. எனது அழைப்பு எண் வரும்வரை காத்திருந்தேன். தனது இருக்கையில் அழகுறவே வீற்றிருந்த மங்கை முகம் மலர்ந்தவாறே “அடுத்தாள்” என என்னை அழைத்தாள். என்னை அறிமுகம் செய்து பின் என்தேவையைக் கூறினேன். கணனியில் தன் கைகளினையும் மனதினையும் சொருகியவள் இடையிடையே என்னையும் பார்த்துப் புன்னகைத்துப் பின் தொடர்ந்தாள். இடையிடையே எனது வேலைதான் நடக்கின்றது என்பதனை எனக்கு எடுத்துக் காட்டுவதற்காகச் சில கேள்விகள் வேறு. “நீங்கள் மொரிசியஸ் போய் மீளத்திரும்பும் திகதி”, “பயணத் திகதி” எல்லாம் கேட்டு “தங்களின் கடவுச்சீட்டு இல” மற்றும் “பயணத்திகதி” எல்லாம் சரியாக உள்ளதா என்று பாருங்கள் எனத் தன்பக்கம் இருந்த கணினித் திரையினை என்பக்கம் திருப்பினாள். எனக்குள் ஆயிரம் கேள்விகள் முளைவிடலாயிற்று. பயணமே இன்னமும் ஆரம்பிக்காதபோது மீளத்திரும்பல் குறித்த தீர்மானம் எங்ஙனம் சாத்தியமாகின்றது. யான் தீர்மானிப்பவனால் நானும் கடவுளே!! அப்படியாகப் பார்க்கையில் வாழ்வில் பயணம் என்பது அனைவருக்குமே ஒருவழிதானே!! மீளத்திரும்புகை எங்ஙனம் சாத்தியமாகும், பயணமே இன்னமும் ஆரம்பிக்காதபோது!! உத்தேச பயணத்திகதி மீளத்திரும்பல் என் பதனை உத்தேசிப்பவன் யார்? அதனை உபதேசிப்பவன் எவன்?

குறித்த பயண ஒப்பந்தக் கடப்பாடுகளின் அடிப்படை அம்சங்களான பயணத்திற்குப் பயன்படும் விமானக் கலத்தின் வகை என்ன? அதன், தரம், தராதரம், அதனைச் செலுத்துபவரின் அனுபவம் எனப் பயணம் போவது பற்றிய ஒப்பந்தக் கோட்பாட்டுடன் தொடர்புபட்ட அடிப்படை விடயங்களே தெரியாத நிலையில் உடன்படும், உடன்படுநிலையில் மீளத்திரும்புகை குறித்த உத்தரவாதத்தை யார் தருவார்கள்! அத்தகு உத்தரவாதம் சாத்தியப்பாடானதா? இவற்றுக்கு அப்பால் இறைவனவன் தீர்மானித்த எனது வாழ்வில், தானே கருவியாக என்னை அனுப்பி வைத்த வாழ்வை வாழ்கின்ற நான் உட்பட்ட அனைவரும் மீள் அழைக்கப்பட வேண்டியவர்களே. இதில் பயணத்திகதி மீளத்திரும்பல் நேரம் என்பதனைத் தீர்மானிப்பது எவ்வாறு? அவனிடத்தே சரணாகதி அடைந்து எம்மை எடுத்துச் சென்று மீளத்திருப்பி விடு என்றாலும் சாத்தியமில்லை.

“நான் படைத்த காரணகாரியங்களுக்குள் செய்யக்கூடியனவற்றைச் செய்திடு”, “மகிழ் வுடன் வாழ்ந்திரு”, “நம்பிக்கையே கடவுள்” என விமானச்சீட்டு வழங்கிட எனக்கு உசாத்துணை புரிந்த பெண்மணியின் தலைமேல் சுவரில் தொங்கிய படம் எனக்கு கற்றுத் தந்தது. உண்மைதான். பயணம் செல்லும் இடம் தெரியும். மீளத்திரும்பியே ஆக வேண்டிய கடப்பாடு உள்ளமையும் ஞான் அறிவேன். செல்லும் இடங்களில் எல்லாம் தங்கிடல் சாத்தியமில்லை. ஆதலினால் மீளவந்து இருப்பிடம் சேர்ந்தே ஆகவேண்டும் என்கின்ற உலக நீதியும் விளங்கிற்று.

பயண வாகனத்தின் செயற்படு நிலை, ஓட்டியின் முகம் தெரியாத நிலை மேலேயும் கீழேயும் குறிப்பிட்ட பயணவாழ்வில் செயற்படுதிறனும், வினைத்திறனும் இயங்கு நிலையில் உள்ளதான சமச்சீர் நிலை என முக்கியமான அம்சங்களினை அவனிடத்திலே கையளித்துவிட்டு நிம்மதியாகப் பயணச்சீட்டை வாங்கிப் புன்முறுவல் செய்கின்றேன். எனக்கு உரித்தான உசாத்துணையைத்தானும் புரிந்ததாகப் பதிலுக்கு நிறுவனத்து மங்கையும் புன்னகைத்தாள்.

எவரோ வழங்கிட்ட வாழ்க்கையில் வாழும் உருவங்கள் பலவும் தாமே எனது இப் பயண ஒப்பந்தத்தை செய்ததாகக் கருதினர். திறத்தவர்கள் யாவரும் பரஸ்பரசேவையில் திருப்தியினை வெளிப்படுத்தினர். குறித்த பயணத்தில் எவற்றைக் கொண்டு செல்ல முடியாது, எவ்வளவு கொண்டு போகலாம் என்கின்ற நிபந்தனைகளும் கட்டுறுத்துக்களும் எழுத்துக்களாக இருந்தன. பயணப் பொதியும், செல்லும் இடமும், சென்றபின் திரும்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டியனவும் வியாபார நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்தது. ஒருவழியாகக் குறித்த ஒப்பந்தக் கோட்பாடு களுக்கு அமைவாக மேலே போய் கீழ்வந்து பயணத்தில் ஒரு சிறு பொழுதினை ஒருவாரம் களிப்புடன் கழித்து மீண்டும் பயணித்து இல்லறம் வந்து சேர்ந்தும் என்னிடம் இருந்த கேள்விகள் மூன்று குறித்த நிறுவனம் ஒழுங்கு செய்ததான பயணம் எப்படியிருந்தது என்பதற்கு பின்னூட்டல் என்னவாக இருக்க வேண்டும்? இதில் எது பயணம், யார் பயணத்தின் ஒப்பந்த காரர்கள்? பயணத்தில் பிரதான சூத்திரதார் யார்?

எல்லாம் அவன் செயல் என வாழ்க்கையினைக் கடவுளின் ஒப்பந்தமாக்காதீர்கள். நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த கரணங்களே வாழ்க்கை. சந்தோஷமாகவே அனுபவியுங்கள். மனித வாழ்வில் விடைகளல்லாத தத்துவ அறிவின் மெய்ப்பொருளே பரம்பொருள். அறியாதவரை அதுவும் சந்தோஷமே.

○○○

## பாட்டிலே தமிழுணர்வைப் பதியமிட்ட பாவலன்



பாட்டாலே உலகளந்த
 பாரதிக்குப் பின்னாலே
காட்டமாய்க் கருத்துக்களைக்
 கவிதையாய்த் தந்தவனே!
நாட்டிலே தமிழரெல்லாம்
 நலிவுற்ற காலத்தில்
பாட்டாலே தமிழ்உணர்வைப்
 பதியமிட்ட பாவலனே!

ஏட்டிலே எழுதுதற்கும்
 எழுதியதைப் படிப்பதற்கும்
வீட்டிலே தடைபோட்டு
 வீணடித்த பெண்குலத்தை
நாட்டிலே தலைநிமிர்த்து
 நடக்கவழி காட்டி, அவர்
போட்டியாய்க் கல்வியிலே
 புகழடையச் செய்தவனே!

பொட்டிழந்த பூவையரைப்
 பொலிவிழந்த பாவையரை
செட்டை அடித்துப்
 பறக்கவிடாப் பறவைகளாய்
மொட்டை அடித்து
 முழிவியளம் கேடென்று
நொட்டை பலசொல்லி
 நோகடித்த காலத்தில்

விதவைக்கும் உணர்வுண்டு
 விதவைக்கும் வாழ்வுண்டு
விதவைக்குத் திருமணத்தை
 விருப்போடு நடத்துங்கள்
இதுவொன்றும் பாபமில்லை
 இருவர்க்கும் உணர்வொன்றே
பொதுநீதி இதுவென்ற
 புரட்சிக்கவியே! பாரதியின்தாசனே!

பாரதியின் தாசனாய்,
 பத்திரிகை, திரையுலகு
வீரத் தமிழ்உணர்வில்
 விளையாடித் திளைப்பதற்குத்
தீரக் குரல்கொடுத்த
 செந்தமிழ்ப்பைம் பூங்குயிலே!
யாருன்னை மறந்திடுவார்
 நானுன்னைப் போற்றுகிறேன்.

– கவிஞர் அகளங்கன்



# ஈழத்துச் சிறுவர் இலக்கியத்தின் அடையாளம் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் (தங்கத் தாத்தா)



**முஹம்மது ஜைத்**
கல்வித்துறை, கலைப் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

ஈழத்துக் கவிவானில் ஒளிவிடும் தாரகையாக விளங்கியவர் ***தங்கத் தாத்தா*** என அன்புடன் அழைக்கப்படும் சோமசுந்தரப்புலவராவார். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சார்ந்த நவாலி என்னும் ஊரில் வாழ்ந்தமையால் நவாலியூர் சோமசுந்தரப்புலவரென இவர் அழைக்கப்பட்டார். இவர் பல்லாயிரம் பாடல்களைப் பாடியவர். பல துறைசார்ந்த கவிதைகளை மரபுவழி தவறாது பாடியவர். எனினும் தங்கத் தாத்தாவும் தான் பாடிய சிறுவர் பாடல்களின் மூலமே மக்கள் மனதில் இடம் பிடித்துக் கொண்டவர் என்றாலது மிகையல்ல.

ஒரு படைப்பாளிக்கு வேண்டும் சமுதாயப் பார்வை இவருக்கு இருந்தது. இதன் காரணமாகவே இவர் சமுதாய எழுச்சிக்கான பாடல்களைப் பாடினர் எனலாம். அந்நிய நாகரிக மோகத்திற்குட்பட்டு தாய்மொழியாம் தமிழ் மொழியை மறந்து, வேற்று நாட்டாரது கலாசாரத்தைப் பின்பற்றி, தேசிய உணர்வோ, தாய்மொழிப் பற்றோ இன்றி வாழ்வோரை நினைந்து மனம் வருந்திய இவர் தமது மன வருத்தத்தை பாடல்களுக்கு ஊடாக வெளிப் படுத்தத் தவறவில்லை. புலவரவர்கள் **நாமகள் புகழ்மாலை**யில் தமிழ்மொழியைத் தமிழர்களே ஆதரிக்காத நிலையினைச் சுட்டிக்காட்டினார். **செந்தமிழ்த்தாய்** என்னும் பாடல்களில் தமிழின் அருமை பெருமைகளை அறிந்திட வாரீர் எனத் தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுவதைக் காணலாம்.

செந்தமிழ் மக்களே வாரீர் – எங்கள்
தெய்வத் தமிழ் மொழிச் சீரினைத் தேரீர்
அந்தமி லெம்மொழி மாதா – படும்
அல்லலைத் தீர்க்க அறிவுவ ராதா?
முச்சங்கத் தரியணையேறி – மன்னர்
முடிதொட்ட மூவரும் அடிதொட்டுப் போற்ற
விச்சையா லரசாண்ட மாதா அவள்
வேதனை தீர்க்க விரக்கம்வ ராதா

என்று உருக்கமாகக் கூறும் புலவர்,

வேற்று மொழிகளைக் கற்றோம் எங்கள்
மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றோம்
ஆற்றிலே புளிகரைத் திட்டோம் – ஐயோ
அருமந்த தமிழினை அறியாது கெட்டோம்
நற்றமிழ் ஓதுதல் விட்டோம் – பண்டை
நடையுடை பாவனை நன்னெறி விட்டோம்
மற்று பயன்மொழி தொட்டோம் முந்தை
மறைநெறி சாதி சமயமும் கெட்டோம்

என்று ஆற்றாமையினைக் கூறி ஆதங்கம் கொள்வதைக் காணமுடிகிறது.

சோமசுந்தரப் புலவரும் உயர்வு தாழ்வு ஒழியவேண்டும் சாதி பேதம் மறையவேண்டும், பொய்ம்மை அகல வேண்டுமெனக் குரல் கொடுத்தவர்.

வெண்ணீற்றுக் குறிவைப்பார்
மிதியடிமே லேதிரிவார்
உண்ணுவது கொடியபுலால்
உரைப்ப தெலாம் பொல்லாப்பே
படித்திடுவார் தேவாரம்
பாமரர்கள் பெருஞ்சபையில்
இடித்திடுவார் சிவன்கோயில்
எண்ணெய் முழுக் காடிடுநாள்

இவ்வாறு போலி வேடதாரிகளைத் தோலுரித்துக் காட்டுகிறார் புலவர்.

புலவரது சிறுவர் பாடல்களை நோக்கு முன் ஆறுமுக நாவலரைப் பற்றி இவர் கொண்டுள்ள கருத்தினைச் சிறிது நோக்குதல்

பொருத்தமுடையதாகும். வசனநடை கைவந்த வல்லாளரெனப் போற்றப் பெற்றவர். தமிழ்த் தாய்க்குப் பொருத்தமான நடை எதுவென ஆராய்ந்து வசன நடையே அவர்க்கு அழகு மிக்கதெனக் கண்டறிந்து உரைத்தவர் ஆறுமுக நாவலர். இச்செய்தியைச் சோம சுந்தரப் புலவர் உயிர்த்துடிப்புமிக்க அழகிய பாடலொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அன்னநடை பிடியினடை அழகுநடை
அல்லவென அகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுணடை
பயின்ற தமிழ்ப் பாவையாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
யெனப்பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் நாவலன்றன் அழியாநல்
லொழுக்க நடை வாழி! வாழி!

பதினைந்தாயிரம் பாடல்களுக்குமேல் படைத்த சோமசுந்தரப் புலவருக்கு அழியாப் புகழினை ஈட்டிக் கொடுத்தவை அவர் இயற்றிய சிறுவர் பாடல்களேயாகும். சோமசுந்தரப்புலவரின் சிறுவர் பாடல்களில் தாலாட்டு, வெண்ணிலா, பவளக்கொடி, தாடியறுந்த வேடன், ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, எலியும் சேவலும், விறகுவெட்டி, கொழுக்கட்டைப் பொன்னன், ஆடு கதறியது, இலவு காத்த கிளி, இலங்கை வளம் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றில் சில கதைப் பாடல்களாகவும் அமைந்துள்ளன முதன்முதலாகச் சிறுவர்க்கான நாடகத்தினை கவிதை வடிவில் தந்த பெருமையும் இவரையே சாரும்.

எலியும் சேவலும் என்னும் தலைப்பில் சிறுவர் சல்லாபம் என்ற பெயரில் இந்நாடகம் அமைந்துள்ளது. தாய் எலி, சேய் எலி, பூனை, சேவல் என்னும் நான்கு பாத்திரங்களைக் கொண்டதாக அமைந்த இச்சிறுவர் நாடகமே ஈழத்திலும் தமிழகத்திலும் முதன்முதலில் எழுந்த சிறுவர் நாடகமாகும். சிறுவர்கள் நன்கு விளங்கிக்கொள்ளும் வகையில் ஓசை நயமும் எளிய நடையும் நான்கு காட்சிகள் கொண்டதாகவும் இந்நாடகம் படைக்கப்பட்டுள்ளது. சேய் எலி வெளியில், உலாவிவரத் தாய் எலியைக் கேட்கிறது. அதனைப் புலவர் வெகு அருமையாகப் படம்பிடித்துக்காட்டுகிறார்.

வெய்யிற் கொடுமையம்மா! மேனி வேர்க்குதம்மா!
பைய உலாவிவரப் பரிந்துவிடை தாருமம்மா
பொல்லாத வெப்பமம்மா! புழுங்கி யவியுதம்மா!
மெல்ல உலாவிவர விரும்பிவிடை ஈயுமம்மா!

சேய் எலியின் வேண்டுதலுக்குத் தாய் எலி தரும் பதிலைப் பாருங்கள்.

ஆசை மிகுந்த மைந்தா! அன்பான கண்மணியே!
மோசம் வரும் மகனே! முற்றத்திலும் போகவேண்டாம்
பொல்லாத துட்டர் மைந்தா! புறத்தே பதுங்கி நிற்பர்
அல்லா தனபுரிவார் ஐயா நீ போகவேண்டாம்.

சேய் எலியின் வற்புறுத்தலுக்கு மனம் இளகிய தாய் எலி விடைகொடுத்து விடுகிறது. சேய் எலியும் துள்ளிக் குதித்து ஆனந்தமாக ஆடிக்களிக்கிறது. அவ்வேளையில் பூனை ஒன்று அதனைக் காண்கிறது. மெல்லப் பிடித்து உண்போம் என்று பதுங்கிப் பாய்கிறது. அப்பொழுது சேவல் ஒன்று “கொக்கறக்கோ” என்று உரத்துக் கூவுகிறது. உடனே சேய் எலி தாயைக் கூப்பிட்டுக் கொண்டு ஓடுகிறதாம். அக்காட்சியைப் புலவர் நம் மனக்கண்முன் கொண்டுவரும் அழகைப் பார்ப்போம்.

ஓடி வருவாயம்மா உள்ளங் கலங்குதம்மா
வாடி நடுங்குகின்றேன் வந்துபயம் தீருமம்மா
மேவி ஒருவனம்மா விண்ணதிரச் சத்தமிட்டான்
ஆவி அகத்ததோ புறத்ததோ அன்னையே வாரும்.

இவ்வாறு இந்நாடகத்தை நகர்த்திச் செல்லும் புலவர் ஈற்றில்

அகமும் புறமும் ஆராய்ந்து
தகுதி நண்பரைத் தான்கொளல் முறையே

என்று அறிவுரை பகர்கிறார்.

இச் சிறுவர் நாடகத்தை இன்றும் பாடசாலைகளில் நமது சிறார்கள் அழகாக நடித்துக் காட்டி ஆனந்தமடைவதைக் காணமுடிகிறது. தங்கத் தாத்தாவின் அருமையான பாடல்களில் ஒன்று மாம்பழம் பற்றியது.

மாம்பழம் நல்ல மாம்பழம் அப்பா
வாங்கித் தந்த மாம்பழம்
மாம்பழம் இது காணக்காண
வாயினிக்கிற மாம்பழம்

என்று பாடுகிறான் சிறுவன். அந்த மாம்பழத்தை எப்படி உண்பது? என்று அவன் கூறுவதையும் பாருங்கள்.

மாம்பழம் இவை கிடைத்தபடியால்
மகிழ்வி னோடு வருகிறேன்
தீம்பழம் இதைச் சீவி வெட்டிச்
சிரித்துச் சிரித்துத் தின்னுவோம். என்று பாடுகிறான்.

புலவரவர்கள் வெண்ணிலாவைப் பார்க்கிறார். தமது புலமைத் திறத்தால் அதனை வாழ்த்தி மகிழ்கிறார்.

இருவிளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே
இராக் காலத் தொளிகொடுப்பாய் வெண்ணிலாவே
சூரியன் போய் மறைந்தபின்பு வெண்ணிலாவே
தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே
தயிர்க் கடலில் வெண்ணெய்போல வெண்ணிலாவே
தனிவிசும்பிற் தவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே.....

இவ்வாறு வெண்ணிலாவைப் பாடி மகிழ் கிறார். தயிர்க்கடலில் வெண்ணெய்போல வானக்கடலில் வெண்ணிலா தவழ்வதாக புலவர் கூறும் திறன் நயத்தற்குரியது.

புலவரவர்களின் ஆடிப்பிறப்புப் பற்றிய பாடல் பிரபலமானது. ஆடிப்பிறப்பன்று வீடுகள் தோறும் இடம்பெறும் விசேட நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் அமைந்தது. கொழுக்கட்டை அவித்தும் கூழ் காய்ச்சியும் உறவினரோடு உண்டுகளிப்பது அந்நாள் வழக்கம்.

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

என்று பாடும் சிறுவர்கள் கொழுக்கட்டை அவிப்பதற்குத் தேவையான பொருள்களையும் அவற்றைப் பாகம் செய்யும் முறையையும் அழ காகக் கூறுவதாகப் புலவர் பாடுகிறார்.

பாசிப் பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,
வேண்டிய தேங்காய் உடைத்துத்துருவியே
வேலூரிற் சர்க்கரையும் கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவையதிற்கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு
வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே.

புலவரவர்கள் இயற்றிய கதைப் பாடல்கள் கற்பனை வளம்மிக்கன. நல்லறிவு புகட்டவல்லன. தாடி அறுந்த வேடன், பவளக்கொடி, இலவு காத்தகிளி, கொழுக்கட்டைப் பொன்னன், வாழையும் புலவனும் எனப் பலப்பலவாக அவை விரிந்து செல்கின்றன. சோமசுந்தரப் புலவர் சோகச் சுவை மிகுந்த பாடல்களைப் படைப்பதில் வல்லவராக விளங்கியுள்ளார். புலவரின் ஆடுகதறியது என்னும் தலைப்பிலான பாடல்கள் சோகம் ததும்புவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடல் வரிகளைக் குறிப்பிடலாம்.

"ஆரக் கழுத்தழகா அஞ்சனப்பூக் கண்ணழகா
வார நடையழகா மாராப்பு மேனியனே"
"துள்ளு நடையழகுஞ் சோதி முகத்தழகுங்
கொள்ளுஞ்செவியழகுங்கோமளமே காண்பதெப்போ?"
"அம்மா என அழைக்கும் ஆசைத் திருக்குரலை
எம்மா தவக் கொழுந்தே நான் கேட்ப தெந்நாளோ?"

ஆலயங்களில் ஆடு, கோழிகள் போன்ற உயிரினங்களைப் பலியிடும் செயலை ஆணித்தரமாக எதிர்த்தவர் புலவர். அதனைத் தமது பாடல்கள் வாயிலாகவும் பறைசாற்ற அவர் தவறவில்லை. உயிர்ப் பலியிடுதல் சைவசமய நெறிக்கே முற்றும் விரோதமானதெனக் கருதிய புலவர் ***ஆடுகதறியது*** என்ற தலைப்பிலான பாடல்களின் இறுதியில் தமது கருத்தை அழகாகப் புகுத்தியுள்ளமையைப் பின்வரும் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

"வாயில்லாச் சீவன் வதையாதீர் என்று சொல்ல
வாயுள்ளார் நெஞ்சம் மரமோ, கருங்கல்லோ"
"சைவமுமில்லையோ சான்றோரு மில்லையோ
தெய்வமு மில்லையோ என்மனது தேற்றிடவே"

தங்கத் தாத்தாவின் "சிறுவர் செந்தமிழ்" அவர் சிறுவர்க்கு அளித்திட்ட அரும் பொக்கிஷ மாகும். புலவரவர்களின் இலங்கை வளம், கத்தரி வெருளி. அம்புலி போன்றவை என்றும் நின்று நிலைத்திடும் நீர்மையன. தங்கத் தாத்தாவின் படைப்புக்களை ஆய்ந்து நோக்கும் போது அவர் பழைமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைப்பவராகவே தோற்றுகின்றார். ஆரம்ப காலத்தில் மரபுவழிப்பட்ட கவிதை களை இயற்றிய அவர் பின்னாளில் இலகு தமிழில் கால மாற்றத்தை உணர்ந்து கவி செய்தவராகவே தென்படுகின்றார். தங்கத் தாத்தாவின் சுவைமிகு கவிதைகளை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்தவராகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைக் குறிப்பிடலாம்.

சுருங்கக் கூறின் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புலவராகத் தங்கத் தாத்தா மிளிர்ந்துள்ளார். ஈழத்துக் கவிதை வளத்துக்குப் பாதை வகுத்தவராகத் திகழ்ந்துள்ளார்.

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



பேராசிரியர்
துரை.மனோகரன்

### விதி விளையாடும்

நமது நாடு என்றும் இல்லாதவாறு மிகப் பரபரப்பாக விளங்குகிறது. முன்னாள் முக்கியஸ்தர் ஒருவர் தொடர்பான சட்ட நடவடிக்கைகள், பல எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளைப் பாடாய்ப் படுத்திக்கொண்டிருக்கிறது. ஏதோ நாட்டின் நலனுக்காகக் கொந்தளிக்கிறோம் என்று மக்களுக்குக் காட்டிக்கொண்டு, தமது சுயநலத்தை மறைமுகமாக வெளிப்படுத்திவருகின்றனர். சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்ட **முன்னாள் முக்கியஸ்தர்**, ஏதோ ஒன்றும் அறியாத அப்பாவி போன்றும், அவரைப் போன்ற ஒருவரைக் காணவே முடியாது போலவும் அவர்கள் கண்கட்டி வித்தைகள் காட்டிக்கொண்டிருக்கின்றனர். முன்னாள் முக்கியஸ்தர் தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களைப் பார்த்து, "நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டால், அதற்கு அவர்களால் ஒரு பதிலும் சொல்லமுடியாது. முன்னாள் முக்கியஸ்தருக்கு நடந்த விடயங்கள் எதிர்காலத்தில் தங்களுக்கும் நடக்கலாம் என்ற அச்சமே அவர்களை அவ்வாறு நடிக்கச் செய்கிறது. அப்படி ஒன்று எதிர்காலத்தில் நடந்துவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையே இவற்றுக்கு எல்லாம் காரணம். இதில் வேடிக்கை என்னவென்றால், முன்னர் அவரைக் கடுமையாக எதிர்த்தவர்கள் எல்லோரும் தங்கள் சுயநலத்துக்காக ஒன்றுகூடி மகிழ்வது தான். வடக்கிலும் ஒருவர், தம்மைப் போன்ற சட்டம் தெரிந்த தந்திரசாலிக்கு ஏற்பட்ட அவலம் குறித்து, சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிக்கிறார் என்பது, அவரை நன்கு அறிந்த தமிழ்மக்களுக்கு விளங்கும்.

அது என்னவோ தெரியவில்லை, நாட்டின் பிரமுகர்களுக்கு ஏதாவது சட்டப் பிரச்சினைகள் ஏற்படும்போது, சொல்லிவைத்தது மாதிரித் திடீரென உலகத்தில் உள்ள வியாதிகள் எல்லாம் அவர்களுக்கு வந்துவிடுகின்றன. ஆஸ்பத்திரிக் கட்டில்களில் சொகுசாகப் படுத்துப் பொழுதுபோக்கும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றது. உலகச் சுகாதார ஸ்தாபனம் இதுபற்றி ஏதாவது ஓர் "ஆராய்ச்சி" நடத்தலாம்.

இப்போது எதிர்த் தரப்பினருக்கு ஒரே குதூகலம்தான். வாய்க்கு ருசியாக ஒரு வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. கொஞ்சக்காலம் மக்கள்முன் விளையாடுவதற்கு, அவர்களுக்கு ஒரு துரும்பு கிடைத்திருக்கிறது. ஒற்றுமை என்றால், அப்படி ஓர் ஒற்றுமை! நாய், பூனை, கரடி, சிங்கம், கழுதை, நரி, குரங்கு, ஓநாய், பன்றி, எருமைமாடு எல்லாம் ஒற்றுமைப்பட்டால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்கிறது, அவர்களின் கூட்டணி. கொஞ்சக்காலம் மக்களுக்கு நல்ல பொழுது போக்கு ஏற்பட்டிருக்கிறது. மக்கள் நலன் தொடர்பாக ஒருபோதும் அவர்கள் கூட்டணி அமைக்க மாட்டார்கள். தங்கள் நலன் என்றால், ஒற்றுமைக் கோஷம் எழுப்புவதில் முன்நிற்பார்கள். பொறுத்திருந்து பார்க்கலாம். கூடியமாதிரியே கூட்டம் காலப் போக்கில் கலைந்துபோய்விடும்.

இயற்கை நியதி என்று ஒன்று இருக்கிறது. அதை மீற யாராலும் முடியாது. அதுவே தற்போது நடந்துகொண்டிருக்கிறது. விதி என்பது, செய்ததன் பலனை அனுபவிப்பதுதான். அதுவே தற்போது முன்னாள் முக்கியஸ்தருக்கு நடந்துகொண்டிருக்கின்றது. முன்னொரு காலத்தில் சித்திரவதை முகாம் ஒன்றின் பரம ரசிகராக இருந்த அவர், தற்போது தமது சொந்த உடலினதும், மனத்தினதும் சித்திரவதைகளைத் தாங்கமுடியாதவராக அவதிப்படுகிறார். தமக்கு ஒருபோதும் இத்தகைய நிலை

ஏற்படாது என்ற துணிச்சலில் அவர் செய்த காரியங்கள், இன்று வட்டியும், முதலுமாக அவரை வந்து அரவணைக்கின்றன. தமக்கு ஏதுமென்றால், உலகமே தட்டிக்கேட்கும் என்று எதிர்பார்த்த அவருக்கு, உலகம் நடப்பதைத் தற்போது வேடிக்கை பார்க்கிறது என்பது விளங்கத்தொடங்கியிருக்கும்.

அவருக்குச் சளைக்காத அல்லது அவரைவிட மோசமான முன்னாள் முக்கியஸ்தர்களும் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் மக்கள் முன் நடித்தாலும், அவர்களது மனங்கள் அவலப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இன்று அவருக்கு என்றால், நாளை தமக்குத்தான் என்பது, அவர்களுக்கு நன்றாகவே தெரியும். ஆனால். பெரிய ஜனநாயகவாதிகளைப் போல் தம்மைக் காட்சிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நல்லவேளையாக ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இல்லையேல், இவர்கள் அத்தனை பேரும் வானுலகத் தேவர்கள் போலவே தொடர்ந்து நடந்து கொண்டிருப்பார்கள். அவைக்குதவாத இவர்களை முடிசூடா மன்னர்களாக ஆக்கி, தம்மைத் தாமே முட்டாள்கள் ஆக்கும் மூடர்கூட்டம் இருக்கும்வரை, இவர்களுக்கு யோகம் தான்.

## வாழ்த்துக்குரிய தமிழியல் மாநாடு

இலங்கையின் சிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** விளங்குகிறது. அப்பல்கலைக்கழகத்தின் ஆரம்ப காலத்தில் (*1975-1978*), அதன் தமிழ்த்துறையில் நான் தற்காலிக உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றியது, இன்றும் என் மனத்தில் பெருமிதத்தை ஏற்படுத்துகிறது. அத்தோடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது முதுகலைமாணிப் (எம்.ஏ) பட்டதாரி என்பதும் எனக்கு எப்போதும் மகிழ்ச்சியைத் தரும் விடயமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை, அண்மையில் தனது **ஆறாவது தமிழியல் ஆய்வு மாநாட்டை** மிகச் சிறப்பாக நடத்தியது. தமிழ்மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள் என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் கைலாசபதி அரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் **பேராசிரியர் கி. விசாகரூபன்** தலைமையில் மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்தினை சேர் பொன். இராமநாதன் கட்புல மற்றும் ஆற்றுகைகள் பீடத்தின் இசைத்துறைப் **போதனாசிரியர் ப. சிவமைந்தன்** பாடினார். செவிக்கு அது இனிமை தந்தது. சேர் பொன். **இராமநாதன் கட்புல மற்றும் ஆற்றுகைகள் பீடத்தின் நடனத்துறை மாணவிகள்** மிக அருமையானதொரு வரவேற்பு நடனத்தை அளித்தனர். அது வரவேற்பு நடனம் என்ற எல்லையைத் தாண்டி, சிறந்தவொரு நடன ஆற்றுகையாக அமைந்தது. அதனை வழங்கிய அத்தனை பேரும் நமது பாராட்டுக்கு உரியவர்கள். வரவேற்புரையைத் தமிழ்த்துறை **முதுநிலை விரிவுரையாளர் ஈ. குமரன்** வழங்கினார். தலைமையுரையைப் பேராசிரியர் கி. விசாகரூபனும், ஆசியுரையைச் செஞ்சொற்செல்வர் **கலாநிதி ஆறு. திருமுருகனும்**, கலைப்பீடாதிபதி உரையைப் **பேராசிரியர் சி.ரகுராமும்**, துணைவேந்தர் உரையினைப் **பேராசிரியர் சி. சிறிசற்குணராசா**வும் நிகழ்த்தினர். சிறப்புரைஞர் அறிமுகத்தைப் பேராசிரியர் கி. விசாகரூபனும், “ஆழ்வார்களின் அருந்தமிழ்” என்னும் தலைப்பில் சிறப்புரையைச் சென்னைப் பல்கலைக்கழகப் **பேராசிரியர் அரங்க. இராமலிங்கமும்** வழங்கினர். எல்லோருடைய உரைகளும் மிகச் சிறப்பாக மனங்கவரும் முறையில் அமைந்தமை, மகிழ்ச்சியைத் தந்தது.

இந்நிகழ்வில் ஆய்வுக்கட்டுரைத் தொகுதி ஒன்றும் வெளியிடப்பட்டது. துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா நூலை வெளியிட்டு வைக்க, பேராசிரியர் அரங்க. இராமலிங்கம் முதல்பிரதியினைப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து, ஐந்து ஆளுமைகளுக்குக் கௌரவம் வழங்கப்பட்டது. பேராசிரியர்கள் **எஸ்.சிவலிங்கராஜா**, **துரை. மனோகரன்**, **ம. இரகுநாதன்** மற்றும் திருவாளர்கள் **ச. விநாயகமூர்த்தி** (சமயச் சொற்பொழிவாளர்), **க. சட்டநாதன்** (மூத்த படைப்பாளர்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். தமிழ் அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான கௌரவமும் வழங்கப்பட்டது. நன்றியுரையினைப் **பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்** நிகழ்த்தினார்.

மாலை அரங்கில் ஆய்வரங்க நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அமரர்களான பேராசிரியர்கள் சு. வித்தியானந்தன், ஆ. சதாசிவம், சி. தில்லைநாதன், செ. யோகராசா ஆகியோர்களின் பெயர்களில் அரங்குகள் அமைந்திருந்தன. அரங்குகளுக்கு முறையே **பேராசிரியர்கள் ம.**

***வேதநாதன் மற்றும் ப. விக்கினேஸ்வரி, தி. வேல்நம்பி, அ. சண்முகதாஸ், நா. சண்முகலிங்கன்*** ஆகியோர் தலைமை வகித்தனர். ஆய்வாளர்களும் ஆர்வத்தோடு அரங்குகளில் கலந்து சிறப்பித்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆர்வத்தோடும், அக்கறையோடும் சிறப்பாகத் தனது ஆறாவது தமிழியல் ஆய்வு மாநாட்டை நடத்தி முடித்தமை பாராட்டுக்கு உரியது.

❍❍❍

# மதிப்பு

**– பாஞ்சாலன்**



கனடா வந்தாள் கிராமத்துப் பாட்டி
கண் அயர்ந்து கனவினில் மிதந்தாள்

கூம்பு வடிவ பெட்டியொன்றை பூட்டியிடம் தந்தாள்!
“இதென்ன பாட்டி? இந்தப் பழைய பெட்டி?”

“நீத்துப் பெட்டி செல்லம்... நம் வம்சத்தின் பெட்டி!
“இந்த யுகத்தில் இதெல்லாம் வேண்டுமா?

இது ஸ்டீமர் காலத்தான்... ஐஸ் காலத்தான்!”
“தெரியுமடி செல்லம்... பழைசுதான் மகிமை!

கிராமங்களில் பாவனை அதிகம் விலை
மிகக்குறைவு
நகரங்களில் தேவை குறைவு விலை மிகவும்
அதிகம்

வெகுளியாய் சிரித்த பூட்டி விவரமாச் சொன்னாள்
கனடாவில் பாவனையிலும் இல்லை
தேவையும் இல்லை

அயல் வீட்டு அத்தைகளிடம் கேட்டுப் பார்
விலை ஆயிரக் கணக்கில் அது போகுமடி

பூட்டி சென்று வந்தாள் கண்கள் சிவந்து
“சும்மா கொடுத்தாலும் யார் இதை வாங்குவார்?”

“சரி, தமிழ்க் கடைகளில் விசாரித்துப் பார்”
“பத்து டாலருக்கு மேல் இல்லை இதன் விலை!”

“பழம் பொருள் கடைக்காரர்கள் யாராவது உண்டா?”
பூட்டி மீண்டும் சென்றாள்... மீண்டும் வந்தாள்!

கண்கள் விரிந்தன... வாய் திறக்கவில்லை!
”ஏன் செல்லம்? என்ன ஆயிற்று?”

பாட்டி... பாட்டி... அதிசயமாகப் போயிற்று!
நூறு டாலர்... ஆயிரம் டாலர் என்றார்களே!”

இப்போதுள்ள ஸ்டீமர் செய்வதை
இந்தப் பெட்டியே செய்ததாம்!

பாட்டி சிரித்தாள்... “இன்னும் சொல்கிறேன் கேள்
நூதனசாலைக்கு போய் வருவோம் வா!”

அங்கே போனார்கள்... ஆச்சரியமானார்கள்!
“ஆயிரம் டாலரும்... பத்தாயிரமும் ஆகுமே!”

பூட்டி ஆவலாக... “பாட்டி இதென்ன சூதோ?”
“இல்லை செல்லம்... இதுவே உண்மை!

பனை ஓலையின் பாங்கு... பாரம்பரியத்தின் சாயல்
காலம் தேடும் கலை... நானிலம் வியக்க விலை!”

“பெட்டியை விற்கலாமா பாட்டி?”
“பழைய பொருளுக்குப் புதுவித விலை!”

பாரம்பரியம் என்பது பல கோடி பெறும்
மூலம் வைத்தும் முன்னேற்றம் வரும்!

அற்பம் என்று எதையும் தள்ளாதே
அற்புதம் செய்யக்கூடும் மறவாதே

கண்ணே! உன் மதிப்பு உன்னிடமில்லை
உன்னைக் காணும் கண்ணில்தான் உணர்ந்திடு!

❍❍❍

# உலக சம்ஸ்கிருத தினம்

## யாழ். பல்கலைக்கழகம்
## சம்ஸ்கிருதத்தோடு தமிழின் சங்கமமாய்



சிரேஷ்ட விரிவுரையாளர்
சம்ஸ்கிருத துறை, யாழ். பல்கலைக்கழகம்
**சு. நவநீதகிருஷ்ணன்**

தமிழின வரலாற்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உலகத் தமிழின அறிவிசையின் உயர் புலமைத்துவ மையமாக நிமிர்ந்து நிற்கிறது. தற்போது ***இந்துக்கற்கைகள் பீட***த்தைச் சேர்ந்த ஒரு துறையாக அமைந்திருக்கும் ***சம்ஸ்கிருதத்துறை***, இவ்வாண்டில் உலக சம்ஸ்கிருத தினத்தை கைலாசபதி கலையரங்கில் சென்ற 26.08.2025 அன்று சிறப்பாகக் கொண்டாடியது.

இந்நிகழ்வின் அதிதிகளாய், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ***சி. சிறீசற்குணராசா***, வாழ்நாட் பேராசிரியர் ***ப. கோபாலகிருஷ்ண ஐயர்***, இந்துக் கற்கைகள் பீடாதிபதி திரு ***ச. பத்மநாபன்***, கலைப் பீடாதிபதி பேராசிரியர் ***சி. ரகுராம்***, சம்ஸ்கிருதத் துறைத் தலைவர் கலாநிதி ***ம. பாலகைலாசநாத சர்மா***, பேராசிரியர் ***ச. முகுந்தன்***, பேராசிரியர் (திருமதி) ***வி. பவனேசன்***, கலாநிதி ***பொ. சந்திரசேகரம்*** ஆகியோர் பங்குபற்றி சிறப்பித்தனர். இந்நிகழ்வில் பல நிகழ்வுகள் இடப்பெற்றன:

1. வான்மீகம் – வால்மீகி ராமாயணம் சார்ந்து 51 நூல்களின் விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
2. கிளி. மாசார் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த சிறார்களின் பகவத்கீதா பாராயணம் நடைபெற்றது.
3. சம்ஸ்கிருத மொழியில் பேச்சு – சம்ஸ்கிருத துறை சார்ந்த மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் சம்ஸ்கிருதத்திலே உரையாற்றினார்கள்.
4. பரிசில்கள் – சம்ஸ்கிருத விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பெற்றன.
5. கௌரவிப்பு – ஈழத் தமிழரிடையே சம்ஸ்கிருத வளர்ச்சிக்குப் பணியாற்றிய கலாநிதி (திருமதி) ***வி. சிவசந்திரன்***, திருமதி **ஸ்ரீ. ஜெகநாதன்**, திருமதி **சுகுணா** ஆகியோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
6. Sanskrit Works of SriLanakan Tamils (SWoST) Repository எனும் ஈழத் தமிழர்களின் சம்ஸ்கிருதம் சார்ந்த பங்களிப்புகளை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்து கையளிக்கக்கூடிய தகவல் மையம் தொடக்கி வைக்கப்பட்டது.
7. வீணாகானபுர விஸ்வவித்யாலய சதகம், முதலடி – காவியமொன்றினைப் புத்தாக்கமாகப் படைப்பதற்குச் சம்ஸ்கிருதத்துறை முன்னெடுத்துள்ள முயற்சியில் அதற்கான முதலடியானது இந்நிகழ்வில் முன்வைக்கப்பட்டது.
8. **இராமாயண தரங்கம்** (வால்மீகி இராமாயண ஓயாத அலைகள்) – சமுதாய மட்டத்தில் சம்ஸ்கிருதம் குறித்த புரிந்துணர்வை ஊட்டும் வகையில் வான்மீகி ராமாயணம் சார்ந்த சொல்லாடலை **ஞானம் பாலச்சந்திரன்** நிகழ்த்தினார்.
9. நூல் வெளியீடுகள். – சம்ஸ்கிருத துறை சிரேஷ்ட விரிவுரையாளர் **சு. நவநீதகிருஷ்ணன்** எழுதிய தமிழ் சம்ஸ்கிருத இணைவை எடுத்துரைத்து நிற்கும் **பாஷை(ட) – கவிதைத்தொகுதி**யும் சம்ஸ்கிருத காவியவியல் நூலான **குவலயானந்தம் குறித்த ஆய்வுநூலும்** வெளியிடப்பட்டன.








# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளிவிழா மலர்

## 25 சிறுகதைகள்




விலை:

ரூபா 300/=


**ஞானம் பதிப்பகம்**

3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6.

+ 94 11 2586013 / + 94 717 362 862


editor@gnanam.info

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025




**இரசவர்க்கம்**
**– முனைவர் பால.சிவகடாட்சம்**
**(2025)**

ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் எழுதப்பெற்ற செகராசசேகரம் எனும் சித்த வைத்திய நூலின் ஒரு பகுதியாக இரசவர்க்கம் அமைந்துள்ளது. பரம்பரையாக ஆசிரியரின் மூதாதையர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஓலைச்சுவடியிலிருந்து முதன்முறையாக பதிப்பிக்கப்பட்டுள்ளதாக இந்நூல் வெளிவந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது. இந்நூலானது திரிகடுகம், திரிபலை, மருந்தாகும் மசாலாப் பொருட்கள், மூலிகை மருந்துகள், பழவகைகள், தாவரநெய்கள் ஆகிய பதார்த்தங்களின் குணங்களை எடுத்துரைக்கின்றது. நல்வரவு.




**பாஷை(ட)**
**– சு.நவநீதகிருஷ்ணன்**
**(2025)**

ஈழத்தின் தமிழ்ப்புலமானது (பாஷை) தமிழும் சம்ஸ்கிருதமும் கலந்த செழிப்பான உறவாகவே காலங்காலமாக இருந்துவந்துள்ளது. தற்காலத்தில் அவ்வுறவானது தளர்ச்சியடைந்துள்ளது (பாடை). அவ் ஆதங்கத்தின் வெளிப்பாட்டை ஆசிரியர் 25 கவிகளால் வெளிப்படுத்தியுள்ளார். பாஷை(ட) எனும் தலைப்பினாலும், தாலமும் ஆலமும் பிணைந்துநிற்கும் அட்டைப்படத்தினாலும் ஆதங்கம் ஆழமாகக் காட்டப்பட்டுள்ளது. "பிணைப்போ வலிது, அதைப் பிரித்தால் வலி பெரிது" எனும் கருப்பொருள், கவிகளில் அடிநாதமாக ஒலிக்கின்றது.




**வெடிஅரசன்**
**(தென்மோடி நாட்டுக்கூத்து)**
**(2024)**

இலங்கையின் நெடுந்தீவினை தலைமையிடமாகக் கொண்டு அரசாட்சி செய்தவனாகக் கூறப்பெறும் வெடி அரசன் பற்றி இக்கூத்து அமைகிறது. கண்ணகியின் சிலம்பு செய்வதற்கு நாகமணி தேடி ஈழத்து வெடி அரசனிடம் வருவதாக கதையானது சிலப்பதிகார கதையுடன் இணைந்து நிற்பது குறிப்பிடத்தக்கது. நெடுந்தீவிலுள்ள கோட்டைக்காடு எனும் சிதைவுற்ற கட்டுமானத்தை வெடி அரசனின் கோட்டையாகக் கூறும் மரபும் உண்டு. ஆரம்பத்தில் வடமோடி கூத்து வகையில் இருந்ததை அமிர்தநாயகம் அண்ணாவியார் அவர்கள், பேணிப் பாதுகாத்து வந்ததுடன் தென்மோடி வடிவத்துக்கு மாற்றி மேடையும் ஏற்றியுள்ளார். பாராட்டலுக்குரியது.

## கிடைக்கப் பெற்றவை...

ISSN 2478-0340

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195